பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 14 | ஞாயிற்றுக்கிழமை 30.09.2018 | கதிர் 329

### இனி இது ரகசியம் அல்ல!

தடுப்புக்காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக நாளை நீதி அமைச்சில் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது. நீதி அமைச்சர், சட்டமா அதிபர், கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி

பக்கம் 03

# இலங்கைக்கு விரைவில் வருகிறார் ஐ.நா.செயலர்

## மைத்திரி அரசு பதவியேற்றதன் பின்னர் ஏற்பட்ட முன்னேற்றங்களைக் கண்டறிய

நியூயோர்க், செப்ரெம்பர் 30

ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான அரசு பதவி ஏற்றதன் பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேரில் அவதானித்து அறிந்துகொள்வதற்காக விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ்.

நியூயோர்க்கில் நேற்று முன் தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் சந்தித்து விடுத்த அழைப்பை அடுத்தே விரைவில் தான் இலங்கை வரவுள்ளார் என ஐ.நா. பொதுச் செயலர் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

பக்கம் 18



## வவுனியாவில் ஓட்டோச் சாரதிகள் நகர சபையுடன் நேற்று முறுகல்



வவுனியா, செப். 30

வவுனியா புதிய பஸ் நிலையத்தின் முன்னால் நகர சபைக்கும், ஓட்டோ உரிமையாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று நேற்று ஏற்பட்டது.

புதிய பஸ் நிலையம் திறக்கப்பட்ட காலத்தில் இருந்து

பக்கம் 18

## உரும்பிராயில் 2 வீடுகள் மீது பெற்றோல் குண்டுகள் வீச்சு!

யாழ்ப்பாணம், செப். 30

உரும்பிராய்ப் பகுதியில் அடுத்தடுத்து அமைந்துள்ள இரண்டு வீடுகள் மீது நேற்று முன்தினம் இரவு இனம்தெரியாத கும்பல் சரமாரியாகப் பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராய் கிழக்கு சென். மைக்கல் ஆலயப் பின் வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத கும்பலே இந்தத் தாக்குதலை

பக்கம் 18

## ஜனாதிபதி வெளியிட்ட கருத்து நான் அறிந்திராத புதிய தகவல்

### கூறுகின்றார் கோட்டாபய



கொழும்பு, செப். 30

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதி வாரங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு கொழும்பில் விமானத் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக தான் அறிந்திருக்கவில்லை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் போரின் இறுதிக் கட்டத்தில் தான்

பக்கம் 18

## ஆவா குழுவை ஒழிக்க களமிறங்கும் ராணுவம்!

### விசேட அதிகாரம் வழங்க தயாராகிறது அரசு

கொழும்பு, செப். 30

ஆவாகுழு உட்பட வடக்கில் இயங்கும் வன்முறைக்குழுக்களை முற்றாக ஒழிப்பதற்கு இராணுவத்துக்குத் தேவையான பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது என்று இராஜாங்க அமைச்சரும், சட்டத்தரணியுமான அஜித் பி. பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

பக்கம் 18

## மானிப்பாயில் வீடு புகுந்து ஆவா குழு அட்டூழியம்!

### ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 30

மானிப்பாயில் வீடு புகுந்து ஆவா வாள்வெட்டுக் கும்பல் நடத்திய தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் உள்ள வீட்டுக்குள் புகுந்து நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் இந்த அட்டூழியத்தை ஆவா குழு நடத்தியது.

3 மோட்டார் சைக்கிள்களில் இலக்கத் தகடுகளை மறைத்த

பக்கம் 18

## மன்னார் கோட்டையைப் புனரமைக்க போர்த்துக்கலின் உதவி நாடும் அரசு

கொழும்பு, செப். 30

போர்த்துக்கேயர்களால் கட்டப்பட்ட மன்னார்க் கோட்டையை, புனரமைப்பதற்கு, இலங்கை அரசு போர்த்துக்கல் அரசிடம் உதவி கோரியுள்ளது.

போர்த்துக்கல் நாட்டின் வெளிவிகார இராஜாங்க அமைச்

பக்கம் 18

## வெளிநாட்டு இறக்குமதிகளை வரையறுக்கிறது இலங்கை

கொழும்பு, செப். 30

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு தீர்வை முன் வைப்பதற்காகச் சில வெளிநாட்டு இறக்குமதிகளை வரையறைக்கு உட்படுத்த நடவடிக்கை

பக்கம் 18

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்!




யாழ்ப்பாணம், செப். 30

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுவிக்கக் கோரியும் யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொது அமைப்புக்

பக்கம் 18

## இந்தோனேசியா சுனாமி; இதுவரை 400 பேர் சாவு!



ஜகார்த்தா, செப். 30

இந்தோனேசியாவில் உணரப்பட்டபாரிய நிலநடுக்கம் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட சுனாமியால் இதுவரை 400 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 18

# பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசு தொடர் அழுத்தம்!

இலங்கையில் நடந்த இனப் படுகொலை தொடர்பில் இலங் கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நாடுகடந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள் தொடர்ச்சியாக பிரித் தானியா நாடாளுமன்ற உறுப் பினர்களின் ஆதரவைத் திரட்டி வருகின்றனர்.

அந்த வகையில் Kingston and Surbiton தொகுதி நாடா ளுமன்ற உறுப்பினர் Hon Edward Jonathan Davey என்பவருக்கும் நாடுகடந்த தமி ழீழ அரசு உறுப்பினர்களுக்கும் இடையில் பிரித்தானிய நாடா ளுமன்றத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.



நாடு கடந்த தமிழீழ அரசின் விளையாட்டுமற்றும்சமூகநலன் பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் நெறிப்படுத்த லில் நுஜிதன் இராசேந்திரம், சொர்ணலிங்கம் யதுர்சன், இரா சேந்திரம் சுதன், குஜியந்தன் சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்ட இந்தச்சந்திப்பில் இலங் கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகள் , தமிழர் பகுதி களில் தற்போது நடைபெற்று வரும் திட்டமிட்ட சிங்களக்குடி யேற்றங்கள் மகாவலி என்ற போர்வையில் வடக்கு நோக்கி ஆக்கிரமிக்கப்படும் தமிழர் நிலப் பகுதிகள் தொடர்பாக கலந்துரை யாடப்பட்டன.

மேலும் சர்வதேச நீதிமன் றுக்கு இலங்கையை பரிந்துரை செய்ய வேண்டும் எனக் கூறப் பட்டதுடன் எதற்காக இலங் கையை சர்வதேச நீதிமன்றுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்பது பற்றிய மனு கையளிக்கப்பட்ட துடன் ஐ. நா. மனித உரிமை சபையினால் கொண்டுவரப்பட்ட 30/1,34/1 தீர்மானங்களானது எந்தளவுக்கு இலங்கை நடை முறைப்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டு அது தொட ர்பான இலங்கையின் நீதிப்பொறி யமைவுகளை கண்காணிக்கும் பொறுப்புடமைக்கான சர்வதேச நிபுணர் குழுவின் (Sri Lanka Monitoring and Accountability Panel) அறிக்கையும் வழங்கப்பட்டது.

பிரச்சினைகளை தொடர்ச்சி யாக கேட்டறிந்த நாடா ளுமன்ற உறுப்பினர் இலங்கையை சர் வதேச நீதிமன்றிற்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுப் பேன் என்றுவருகின்ற நாடாளு மன்றஅமர்வுகளில்இந்தவிடயம் தொடர்பாக கேள்விகளை முன் வைப்பேன் என்றும் முன்வைப்ப தாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-100)

## தமிழக சுவாமிகள் வழங்கும் திருமுறைப் பண்ணிசை சொற்பொழிவு நாளை

யாழ்ப்பாணம், செப்.30

தமிழகத்தைச் சேர்ந்த தவத்திரு அரிகர தேசிக சுவாமிகள் வழங்கும் திருமுறைப் பண்ணிசை சொற்பொழிவு நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு - நல்லூர் கோவில் வீதி அகில இந்து மாமன்ற மண்டபத்தில் இடம்பெறும்.

விழா ஏற்பாட்டாளர்களான சிவபூமி அறக் கட்டளை மற்றும் சரசுவதி பிருந்தாவனம் அறக் கட்டளையினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பட்டயச் சான்றிதழ் கற்கை நெறி

யாழ்ப்பாணம், செப்.30

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் உள்ள இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவனத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையத்தால் வட மாகாண இந்து அறநெறிப் பாசாலை ஆசிரியர்களுக்கான பட்டயச் சான்றிதழ் கற்கை நெறி வகுப்பு இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். ஆனைப் பந்தி யில் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தில் (குருகுலம்) நடைபெறவுள் ளது.

இக் கற்கை நெறியில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரி யர்கள் பயிற்சி பெறவுள்ளனர் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## ஸ்ரீமத் பகவத் கீதை விளக்கவுரை

யாழ்ப்பாணம், செப்.30

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாச னந்தா அவர்களால் வாரந்தோறும் திங்கட் கிழமைகளில், ஸ்ரீமத் பகவத்கீதை விளக்க வுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை யாழ் சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் விலாசத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை திங்கட்கிழமை ஸ்ரீமத் பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத் தில், கொல்வதில்லை - கொல்லப்படுவதும் இல்லை என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெற உள்ளது.

இவ்விரிவுரை, நேரலையாக, Chinmaya Mission, Jaffna எனும் முகநூல் பக்கத் தில், ஒளிபரப்ப இருக்கின்றது.

எனவே, ஆர்வலர்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் இருந்தவாறே கண்டு, கேட்டுப் பயன் பெறலாம். தொடர்புகளுக்கு: -94 21 222 3447

### இயற்கை திரவ வாயு மின் நிலையம்:

## இந்தியா கைவிரித்ததால் உள்ளே நுழைந்தது சீனா!

சம்பூரில் இயற்கை திரவ வாயு மின் நிலையத்தை அமைக்கும் திட்டத்தை இந்தியா கைவிட்டதை அடுத்து, இலங் கையின் முதலாவது இயற்கை திரவ வாயு மின் நிலையத்தை சீனா அமைக் கவுள்ளது.

இந்த மின் நிலையம் அம்பாந் தோட்டையில் அமைக்கப்படும் என்றும், இதற்கான கட்டுமானப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் மின் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை இயற்கை திரவ வாயு மின் நிலையத்தை சிறிலங்கா, சீன அரசாங்கங்கள், மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன இணைந்து கூட்டு முயற்சியாக அமைக்கவுள்ளன.

இதன் மூலம், 300 மெகாவாட் மின்உற்பத்தி செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதுதொடர்பான முத் தரப்பு புரிந்துணர்வு உடன்பாடு கையெ முத்திடப்பட்டுள்ளது.

முன்னதாக, சம்பூரில் 500 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின்நிலையத்தை அமைக்க இந்தியா இணங்கியிருந்தது.

அதற்கு, திருகோணமலை மக்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து, அங்கு இயற்கை திரவ வாயு மின் நிலை யத்தை அமைக்க திட்டமிடப்பட்டது.

அதற்கு இந்திய இணங்கிய போதும், மின்சாரசபை பொறியாளர்கள் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில், திருகோணமலை யில், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவியுடன் இரண்டு இயற்கை திரவ வாயு மின் திட்டங்களை அமைக்கும் திட்டம் இலங்கை அரசால் முன்வைக் கப்பட்டது.

இதையடுத்து, சம்பூர் இயற்கை திரவ வாயுமின்திட்டத்தை இந்தியா கைவிட்டது. அதையடுத்தே, அம்பாந்தோட்டையில் சீனாவின் உதவியுடன், முதலாவது இயற்கை திரவ வாயு மின் திட்டம் ஆரம் பிக்கப்படவுள்ளது.

## 'டி.ஐ.ஜி' நாலகவிடம் குரல் சோதனை

பிரதிபொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவிடம் நேற்று முன்தினம் அரச பகுப்பாய்வு திணைக்களத் தில், குரல் சோதனை நடத்தப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோரைப் படு கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக, பிரதி பொலிஸ் மா அதி பர் நாலக சில்வா மீது குற்றம்சாட் டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், அரச பகுப்பாய்வு திணைக்களத் தில், நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு, நாலக சில்வாவிடம் குரல் சோதனை நடத்தப்பட்டது.

சோதனை முடிந்து வெளியே வந்த அவரிடம், இந்தச் சதித் திட்டம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், எந்தப் பதிலை யும் அளிக்காமல் வாகனத்தில் ஏறிச் சென்றார்.

## கொமன்வெல்த் செயலருடன் ஜனாதிபதி மைத்திரி சந்திப்பு!



இலங்கையில் ஜனநாய கத்தை பலப்படுத்துவதிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத் துவதிலும், முன்னேற்றங் கள் ஏற்பட்டுள்ளன என்று கொமன்வெல்த் செயலா ளர் நாயகம், பற்றீசியா ஸ்கொட்லன்ட் தெரிவித்துள் ளார்.

நியூயோர்க்கில் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முன்தினம் கொன் வெல்த் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லன்டைச் சந்தித்தார்.

இதன்போதே அவர் இத னைக் குறிப்பிட்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில், கடந்த மூன்றரை ஆண்டுகளில், நல்லிணக்கம், ஜனநாயகத் தைப் பலப்படுத்துதல், மனித உரிமைகளை மீள நிலைப் படுத்தல் போன்றவற்றில் எட்டப்பட்டுள்ள முன்னேற் றங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரி விளக்கிக் கூறி யுள்ளார்.

அத்துடன் கொமன் வெல்த் செயலாளர் நாய கத்தை மீண்டும் இலங் கைக்கு விஜயம் மேற்கொள் ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், இலங்கை யின் அபிவிருத்தி, நல் லிணக்கம் ஆகியவற்றுக்கு கொமன்வெல்த் தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் பற்றீசியா ஸ்கொட்லன்ட் தெரிவித்துள்ளார்.

## திருமலை, கந்தளாய்ப் பகுதிகளின் சுற்றிவளைப்பில் 30 பேர் கைது

திருகோணமலை, செப்.30

திருகோணமலை மற்றும் கந்தளாய் தலைமையக பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவ ளைப்பின் போது 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை இடம்பெற்ற சுற்றி வளைப்பின் போதே இவ் வாறு 30 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், திரு கோணமலை தலைமையக பொலிஸ் நிலையம் முன்னெ டுத்த சுற்றிவளைப்பில் பிடி யாணை பிறப்பிக்கப்பட்டி ருந்த 10 சந்தேகநபர்களை யும், போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் ஒருவரையும், மது போதையில் வாகனம் செலுத்திய நால்வரையும், சந்தேகநபர்கள் ஐவரையும், குழப்பம் ஏற்படுத்திய ஒரு வரையும் கைது செய்துள் ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கந்தளாய் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இரண்டு குற்றச்செயல்களுடன் தொடர் புபட்ட ஒருவரையும், பிடி யாணை பிறப்பிக்கப்பட்டி ருந்த நால்வரையும், சந்தே கத்தின் பேரில் மூவரையும், ஹெரோயின் 2 வைத்தி ருந்த குற்றச்சா டின் பேரில் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்திருக்கிறோம் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந் தேகநபர்கள் திருகோண மலை மற்றும் கந்தளாய் நீதி மன்றங்களில் ஆஜர் படுத்த உள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (கு)

காலைக்கதிர்
Kalaikkathir

## வெலிக்கடைச் சிறையில் நேற்று திடீர்ச் சோதனை

கொழும்பு, செப்.30

சிறைச்சாலையில் கைதிகளினால் மறைத்து வைக்கப்பட்டுள்ள சட்ட விரோத உபகரணங்களைத் தேடி வெலிக்கடைச் சிறைச்சாலை, வெலிக்கடை மகளிர் சிறைச்சாலை மற்றும் வெலிக்கடை சிறை வைத்திய சாலை என்பவற்றில் நேற்றுத்திடீர்ச்சோதனைநடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகள் 200 பேருக்கும் அதிகமானோர் இதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த விசேட தேடுதல் நடவடிக்கைக்கு கொழும்புக்கு வெளியிலுள்ள சிறைச்சாலைகளிலிருந்து அதிகாரிகள் வரவழைக்கப்பட்டனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தேடுதல் நடவடிக்கை இதுவென சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாவலப்பிட்டியில் வெள்ளம்

நேற்றுப் பிற்பகல் பெய்த கடும் மழை காரணமாக நாவலப்பிட்டி நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

நாவலப்பிட்டி தபால் நிலையத்திலிருந்து அட்டன் பிரதான வீதிவரை வெள்ள நீர் நிரம்பி காணப்பட்டதால் ஹற்றன் – நாவலப்பிட்டி மற்றும் நாவலப்பிட்டி – கம்பளை பிரதான வீதியின் போக்குவரத்து சுமார் ஒரு மணித்தியாலம் தடைப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளம் காரணமாக நாவலப்பிட்டி நகரில் உள்ள வர்த்தக நிலையங்களும் முடப்பட்டுள்ளதோடு நகரில் இரண்டு அடி உயரத்துக்கு வெள்ள நீர் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

# போதைப்பொருளை கட்டுப்படுத்த சர்வதேசப் பிரகடனம் வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



நியூயோர்க், செப்.30

**போதைப்பொருள் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்குச் சர்வதேசப் பிரகடனமொன்று அவசியமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் 73 ஆவது பொதுச் சபைக் கூட்டத்துக்குச் சமாந்தரமாக ஏற்பாடு செய்யப்பட்ட உலக சுகாதார ஸ்தாபானத்தின் போதைப்பொருள்கள், தொற்றா நோய்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி மாநாடு இடம்பெற்றது.**

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மைத்திரிபால இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாம் எமது நாட்டில் போதைப்பொருள் நடவடிக்கை களை கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதோடு மக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளோம்.

இருப்பினும் சமூக வலைத்தளங்களின் ஊடாகப் போதைப்பொருள் மற்றும் உற்பத்தி, பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் இவற்றைக் கட்டுப்படுத்த சுயாதீன நாடொன்றினால் முடியாது. ஆகவே இவ்விடயத்தில் சர்வதேச பிரகடனம் ஒன்று மிகவும் அவசியமாக உள்ளது–என்றார்.

# ராணுவம் குற்றம் செய்யவில்லை என ஜனாதிபதி கூறிய கருத்து கசப்பானது

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இராணுவத்துக்கு எதிராக பல வழக்குகள் நடைபெற்று வருகிறது. கடத்தல், கொலை தொடர்பில் இவ்வாறு வழக்குகள் நடைபெறுகின்றபோதும் இராணுவம் எந்தவித குற்றமும் செய்யவில்லை என ஜனாதிபதி தெரிவித்த விடயம் மிகவும் கசப்பானது என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு, கிழக்கு இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

போரால் பாதிக்கப்பட்டு உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் என்ற வகையில் அந்த மக்கள் தொடர்பாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தொடர்ச்சியாகச் சில கோரிக்கைகளை முன்வைத்து வருகிறது. அத்துடன் அதற்கான அழுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றது. நல்லாட்சி அரசின் ஊடாக நாங்கள் எதிர்பார்த்த தீர்வுகள் முழுமையாக கிடைத்திருக்கின்றதா என்பது கேள்விகுறியாகவுள்ளது. ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ஆற்றிய உரை மிக முக்கியமானதாக பலரால் கருதப்படுகிறது.

இராணுவம் எந்தவித பிழையும் செய்யவில்லை எனத் தெரிவித்த விடயம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போதும் கூட கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இராணுவத்திற்கு எதிராகப் பல வழக்குகள் நடைபெற்று வருகிறது. கடத்தல், கொலை தொடர்பில் இவ்வாறு வழக்குகள் நடைபெறும்போதும் இராணுவம் எந்தவிதப் பிழையும் செய்யவில்லை என்ற விடயம் மிகவும் கசப்பானது. அந்த வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. யுத்த மீறல்களுக்கு ஒரு சிறந்த தீர்வு கிடைக்குமா என்பதும் கேள்வியாகவுள்ளது.

அரசிடம் நாம் சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகின்றோம். அந்தவகையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். பல வருடங்களாக எந்தவித வழக்குகளும் இன்றி கூடப் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கேட்டு நிற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கையில்லாது இருக்கிறது. அமைக்கப்படும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலயம் கூட இனிமேல் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் காரியலயமாகவே இருக்கிறது. இதுவரை காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்ற ஒரு அழுத்தமான தீர்வை இலங்கை அரசு வழங்கவேண்டும். ஐக்கியநாடுகள் சபையின் சிபாரிசுகளுக்கு அமைவாக பதில் அளிக்கவேண்டும்.

வடபகுதி உட்பட இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்படும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீள்குடியேறிய மகள் தமது வீட்டுத்திட்டங்களைச் சரியாக கட்டி முடிக்க முடியாத நிலை உள்ளது. அரசு வேறுபட்ட வீட்டுத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளமையால் மக்கள் மத்தியில் வேறுபாடுகள் ஏற்படுகின்றது. எனவே வீட்டுத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.
– என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டம் தொடர்பாக, அரசியல் கைதிகளின் விடயத்தை நீண்ட காலமாகக் கையாண்டு வரும் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியுடன் பேசினேன். அவர் சில விடயங்களைச் சொன்னார்.

ஒவ்வொரு தடவையும் இப்படிக் கூட்டம் போடும் போதும், இந்த வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிப்பது என்றும், அதற்காக, விசேட நீதிபதிகள் மற்றும் அரச சட்டவாளர்களுடன் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்றும் தீர்மானம் எடுப்பார்கள். ஓரிரு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். ஆனால் ஒவ்வொரு வழக்குக்கும் மாதக் கணக்கில் தவணை – வாய்தா – போடுவதுதான் நடக்கும். அதற்கு மேல் உருப்படியாக எதுவும் நடக்கவே நடக்காது.

இந்த முறையும் அப்படி நடக்காமல் ஓர் அரசியல் தீர்மானத்தின் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கட்ட வேண்டும். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை அடுத்து ஓர் இணக்க நிலை ஏற்பட்ட போதும், 2002 இல் ரணில் அரசுக்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையில் சுமுகப் பேச்சுகள் நடந்த போதும் அத்தகைய அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டு, கைதிகள் பிரச்சினைக்குப் பெரும்பாலும் ஒரு முடிவு எட்டப்பட்டது.

ஆனால், இப்போது யுத்தம் முடிந்து பத்தாண்டுகளாகிவிட்டன. யுத்தம் முடிந்த கையோடு பன்னீராயிரம் போராளிகளை விடுவிப்பது என்ற தீர்மானம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் எடுக்கப்பட்டது. அது கூட ஓர் அரசியல் முடிவுதான்.

அத்தகைய அரசியல் முடிவே இப்போது எடுக்கப்பட வேண்டும். குற்றமிழைத்தவர்கள் எனப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட 51 கைதிகளையும் மன்னிப்பு அளித்து விடுவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. விசாரணைகளை எதிர்கொண்டிருப்போருக்கு எதிரான வழக்குகளை வாபஸ் பெறுவதற்கும், விசாரணையின்றி தடுப்புக் காவலில் இருப்போரை விடுவிப்பதற்கும் உரிய பரிந்துரைகளை வழங்கி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு உண்டு. கொள்கைத் தீர்மானம் ஒன்றை அரசு எடுத்து, அதற்கான வழிகாட்டலை சட்டமா அதிபருக்கு அரசு வழங்க முடியும்.

பிணை வழங்கப்படாமல் நீண்ட பல வருடங்கள் இப்படிச் சிறை வைக்கப்பட்டிருப்போர் விடயத்தில் இனியும் துரித விசாரணை, சட்ட நடவடிக்கை என்று கூறி காலத்தை இழுத்தடிக்கக் கூடாது. ஏற்கனவே தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்குரிய சிறைத் தண்டனை காலத்திலும் விட அதிக காலம் இக்கைதிகள் பலர் சிறை இருந்து விட்டனர். எனவே அவர்களுக்கு விரைந்து விடுதலை வாங்கித் தருவதுதான் முக்கியம். இந்த அரசியல் தீர்மானத்துக்கு வருவதற்கு அரசை நெட்டித் தள்ள முடியாவிட்டால் இவ்வளவு காலமும் இந்த அரசுடன் தமிழர் தரப்பு சேர்ந்து இயங்கியமை பயனற்றது; அபத்தமானது.”

– இப்படி அந்த சிரேஷ்ட சட்டத்தரணி சுட்டிக் காட்டினார்.

இதேசமயம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சில தமிழ்க் கைதிகளைத் தாங்கள் அரசியல் கைதிகளாக' ஏற்கவில்லை என்ற ஒரு தகவலை தமிழ்க் கூட்டமைப்புத் தலைமை நல்லாட்சி அரசின் தரப்புக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றது. அவர்கள் யார் தெரியுமா?

யுத்தம் 2009 மேயில் முடிவடைந்தது. யுத்த கால விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யும் படலம் 2012, 2013 வரைத் தொடர்ந்தது. யுத்த காலச் சம்பவங்களுக்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவவரையும் தமிழ்க் கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகள்' என்றே குறிப்பிடுகின்றது.

ஆனால் அதற்குப் பின்னரும் சிலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். உதாரணத்துக்கு சுமந்திரனைக் கொல்ல முயற்சி செய்த குற்றச்சாட்டு, புலிகள் கால ஆயுதங்கள், வெடிகுண்டுகளை பிற்காலத்தில் மறைத்து வைத்துப் பயன்படுத்த முயன்றமை போன்றவை.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் கைதானோரை நாங்கள் தமிழ் அரசியல் கைதிகள்' என்று வகைப்படுத்தவில்லை. அவர்களின் விடுதலைக்காக குரல் எழுப்பவில்லை. ஆனால் நாட்டில் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் காட்டுமிராண்டித்தனமானது, அநீதியானது, மோசமானது என்பதை நல்லாட்சி அரசே ஒப்புக் கொண்டுள்ளது. ஆகவே அந்தச் சட்டத்தின் கீழ் அவர்கள் விசாரிக்கப்படுகின்றமையையும் தண்டிக்கப்படுகின்றமையையும் நாம் வன்மையாக எதிர்க்கிறோம்; ஆட்சேபிக்கிறோம்; கண்டிக்கிறோம். வேண்டுமானால் நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் அவர்கள் அரசு விசாரிக்கட்டும். அதன்படி சட்ட நடவடிக்கை எடுக்கட்டும். எமக்கு அதில் ஆட்சேபனை இல்லை.” – என்றார் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவர்.

பேசுவதற்கும், கருத்துக் கூறுவதற்கும் சிக்கலான விவகாரம்தான் இது...!

- மின்னல் -

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# தேர்தலுக்கு அஞ்சும் அரசு

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு இறுதியில், அதாவது இன்னும் ஒரு வருடத்தில் நடத்தப்பட வேண்டியுள்ளது.

அதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியமில்லை. அரசாங்கத் தரப்பு மாகாண சபைத் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு நொண்டிச் சாட்டுக்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கூறிக் கொண்டிருக்கின்றது என கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல கூறியிருக்கின்றார்.

கிழக்கு, வடமத்தி, சம்பிரகமுவ மாகாணங்களின் ஆயுள் காலம் கடந்த வருடம் செப்ரெம்பரில் முடிவடைந்து விட்டது. அங்கு கடந்த ஒரு வருடமாக ஆளுநர்களின் நிர்வாகம் நடக்கின்றது. வடக்கு, வடமேற்கு, மத்திய மாகாணங்களின் ஆயுள் காலம் அடுத்த மாத இறுதியில் முடிவடைகிறது. அதன் பின்னர் அங்கும் ஆளுநர் ஆட்சி நடக்கும். தென்மாகாண சபை, மேல் மாகாண சபை ஆகியவற்றின் பதவிக்காலம் அடுத்த ஏப்ரலில் – ஏழு மாதங்களில் – முடிவடையும். ஊவா மாகாண சபைக்கு மட்டும் பதவிக் காலம் அடுத்த ஒக்ரோபர் மாதம் வரை – அதாவது 13 மாதங்கள் – உள்ளது.

அதன் பதவிக் காலம் முடிவடையும் போது கூட மாகாண சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை – ஒழுங்குகளை – இந்த நல்லாட்சி அரசு செய்யப்போவதில்லை என்பது தெளிவு.

மக்களின் ஆதரவை – செல்வாக்கை – இழந்து நிற்கின்றோம் என்பது நல்லாட்சி அரசுத் தரப்புக்கு நன்கு தெரியும். தங்களின் கூட்டு ஒற்றுமையும் சிதறிவிட்டது என்பதும் அத் தரப்பினருக்கு நன்கு புரியும். அத்தோடு கூட்டு எதிரணியின் மக்கள் செல்வாக்கு உயர்ந்து வருவதும் வெளிப்படையானது. இந்தக் காரணங்களால், தேர்தலைச் சந்திக்க அஞ்சும் நல்லாட்சித் தரப்பு சப்புக்கெட்ட காரணங்களைக் கூறி, தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போட்டு வருகின்றது.

ஜனாதிபதியைத் தேர்தலை ஒத்திப் போட முடியாது என்பதால் அதை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கருதிச் செயற்படுகின்றது ஆளும் தரப்பு.

அந்தக் காலம் வரை வேறு தேர்தல்களை நடத்தி, மக்களின் நிராகரிப்பை எதிர்கொண்டால் இருக்கின்ற ஆட்சியையும் தொடர முடியாத இக்கட்டு வந்து விடும் என்ற சிக்கல்.

இரண்டு, மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒன்றாக நடத்தவது ஒரு 'மினி' பொதுத் தேர்தல் நடத்துவது போன்றது. அப்படி நடத்தினால் தனது தரப்பின் 'பொட்டுக் கேடு' வெளிப்பட்டு விடும் என்பது விளங்கியதால் அத் தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்கு பல்வேறு சாக்குப்போக்குகளை நல்லாட்சி அரசு முன்வைக்கின்றது.

ஏற்கனவே, இவ்வாண்டு முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்திக் கையைச் சுட்டுக் கொண்டுள்ள இந்த அரசுக்கு இப்போதைக்கு இன்னொரு தேர்தலை எதிர்கொள்வதற்கான துணிச்சல் – முதுகெலும்பு – இல்லை.

அதனால் மாகாணசபைத் தேர்தல் இப்போதைக்கு நடக்கும் என்று எதிர்பார்ப்பது வெறும் அபத்தம்தான்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இழுபறிபடுவதற்குக் காரணம், தாமோ அல்லது தமது அரசோ அல்ல என்று மீண்டும் ஒரு தடவை மக்களின் காதில் பூச் சுற்றும் அறிவிப்பை – விளக்கத்தை – முன்வைத்திருக்கின்றார் மாகாண சபைகள், உள்ளூராட்சி, விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா.

மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போடுவது மக்களின் இறைமையை மீறும் செயல் என்று உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் கூறிய பின்னரும், அந்தக் கருத்தை உதாசீனப்படுத்தி விட்டு, அந்தத் தீர்ப்பு வெளியாகி, இரண்டு வாரங்களுக்குள் அதுவரை இருந்த மாகாணசபைத் தேர்தல்களுக்கான சட்ட விதிகளை இல்லாமலாக்கும் சட்டத்தை நடாளுமன்றில் பிரேரித்துக் காய் நகர்த்தியவர் இதே அமைச்சர் பைஸர் முஸ்தபாதான்.

இல்லாமலாக்கிய தேர்தல் சட்ட விதிகளை நிரப்புவதற்குரிய புதிய சட்ட விதிகளை ஓராண்டுக்குள் கொண்டு வருவோம் என்று கூறிய பின்னர், அதில் குளறுபடி பண்ணி, காலத்தை இழுத்தடித்து, சாக்குப்போக்குக் காரணங்களைக் காட்டி தேர்தல் சட்ட விதிகளை கொண்டு வராமலேயே காலம் கடத்தவதும் அவரது அரசுதான்.

மாகாண சபைத் தொகுதி எல்லைகள் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை நடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டு விட்டது. அந்த முறைமையை நாடாளுமன்றம் ஏற்கப் போவதேயில்லை என்பது தெளிவாகி விட்டது. அப்படியிருக்கவும் அந்த அறிக்கையை நேர்சீர்செய்து, திருத்தியமைத்து, நாடாளுமன்றம் ஏற்கக் கூடியதாகக் கொண்டு வருவோம், அதற்கு மேலும் இரு மாத கால அவகாசம் தாருங்கள் என்று தெரிவித்து காலத்தை மேலும் இழுத்தடிக்கும் சித்து விளையாட்டை நடத்துவதும் அவரது நல்லாட்சி அரசுதான்.

உத்தேச புதிய தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றக் கட்சிகள் இடையே இருக்கும் கருத்து முரண்பாடுகளைப் பார்க்கும் போது அந்த எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் எந்தக் காலத்திலும் நிறைவேற்றப்படப் போவதில்லை என்பதும் அதனால் அந்த முறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தல்கள் இப்போதைக்கு சாத்தியமேயில்லை என்பதும் உறுதி.

பழைய – இதுவரை – இருந்த முறைமையின் கீழ் தேர்தலை நடத்தலாம் என்ற ஓர் இணக்கத்துக்கு அரசு வருமானால் அடுத்த மூன்று மாதத்துக்குள் அந்தத் தேர்தலை நடத்தலாம் என்கின்றன சட்ட வட்டாரங்கள். மக்களின் வாக்குகளை எதிர்கொள்ளத் திராணியில்லாத நல்லாட்சி அரசு அதற்கு இணங்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

# திருமலை கோணேஸ்வரர் ஆலய முன்னாள் அர்ச்சகரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது உயர் நீதிமன்றம்

## மனைவி அம்பிகாவைக் கொலை செய்த குற்றத்துக்கு

திருமலை, செப். 30

திருகோணமலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அம்பிகா கொலை வழக்கின் எதிரியான கோணேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் பிரதம அர்ச்சகரான சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மாவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உயர் நீதிமன்றின் சிறப்பு அமர்வு உறுதி செய்தது.

திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி எம். இளஞ்செழியன் வழங்கிய தூக்குத் தண்டனைத் தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் உறுதி செய்த நிலையில், எதிரியின் இறுதி மேன்முறையீட்டு வாய்ப்பான உயர் நீதிமன்றமும் தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது.

சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மா, திருகோணேஸ்வரர் ஆலயத்தின் பிரதம அர்ச்சகராகப் பணியாற்றிய காலத்தில் 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி தனது மனைவியான அம்பிகா என அழைக்கப்படும் சொக்கலிங்கம் சிவபாதசுந்தரம்பிள்ளை புவனேஸ்வரியை நைலோன் கயிற்றினால் கழுத்தில் சுருக்கிட்டு கொலை செய்தார்.

அவரின் சடலத்தை ஆலய வளாகத்தில் தான் வசித்து வந்த விடுதி வளவுக்குள் புதைத்திருந்தார்.

கொலை குறித்து எதிரியான சிவகடாட்ச விசாகேஸ்வர சர்மாவுக்கு ஆலயப் பூசைகளில் உதவியாளராகப் பணியாற்றிய வெங்கட்ராமன் பாலமுரளி சர்மா ஒரு வருடத்தின் பின்னர் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இதனையடுத்து ஆலயப் பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் எதிரி வசித்து வந்த விடுதி வளவில் புதைக்கப்பட்டிருந்த அம்பிகாவின் எலும்புக் கூட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மா மீது குற்றயவில் தண்டனைக் கோவை 296ஆம் பிரிவின் கீழ் கொலைக் குற்றச்சாட்டை முன்வைத்து சட்டமா அதிபரினால் திருகோமலை மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியும் முக்கிய சாட்சியான பாலமுரளி சர்மாவும் தலைமறைவாகியிருந்தனர். அவர்களுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வெளிநாடு செல்வதற்காக எதிரி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் சென்றபோது கைது செய்யப்பட்டார். முக்கிய சாட்சியான பாலமுரளி சர்மாவும் சரணடைந்திருந்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணை திருகோணமலை நீதிமன்றில் இடம்பெற்றது.

அரசதரப்பில் சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமியும் எதிரியின் சார்பில் மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தாவும் முன்னிலையாகியிருந்தனர். திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்று 2009 ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

கொலை தொடர்பில் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதியன்று கோணேஸ்வர கோயிலின் பிரதம குருக்களான சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மாவின் உதவிக் குருக்கள் பாலமுரளி சர்மா தாமாகவே பொலிஸாருக்குச் சென்று அறிவித்ததையடுத்து தகவல் வெளிச்சத்துக்கு வந்தது.

பாலமுரளியின் வாக்குமூலமும் அவர் புதைகுழியைக் காட்டியதும் சடலம் தோண்டி எடுக்கப்பட்டதும் நீதிமன்றுக்குச் சாட்சியாக அமைந்தது. குறிக்கப்பட்ட எதிரி பிராமணக் குலக் குருக்கள், அவர் நாயன்மார்களால் பாடப்பெற்ற திருத்தலமான திருகோணேஸ்வர பிரதம குருக்களாக இருந்த சமயம் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்ட அம்பிகாவின் சடலம் புண்ணிய தலமான கோயில் வளாகத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது. அவரின் சடலத்தைப் புதைத்துவிட்டு சுமார் ஒரு வருடம் இரண்டு மாத காலமாக அதே கோணேஸ்வர ஆலயத்தில் ஈஸ்வரனுக்கும் மாதுமைக்கும் குருதிக் கறை படிந்த கரங்களால் பூஜைகள் செய்து மக்களுக்கு அர்ச்சனை வழங்கியதன் விளைவாக கோயிலின் புனிதத் தன்மை எதிரியினால் கெடுக்கப்பட்டுள்ளது.

புதைக்கப்பட்ட சடலத்தின் புதைகுழியிலிருந்து கைப்பற்றப்பட்ட கழுத்து நெரிக்கப்பட்ட மைக்கான கயிறு, தாலிக் கொடி, தலை மயிர், மண்டை ஓடு என்பன சான்றுப்பொருள்களாக அமைகின்றன.

அத்துடன் எதிரியினால் அம்பிகா புதைக்கப்பட்ட இடம் மான் இறந்து புதைக்கப்பட்ட இடமாகும். இதன் மூலம் எதிரி ஏமாற்று செய்யும் நோக்குடன் நடந்துள்ளார்.

கோணேஸ்வரர் பெருமாளின் அருள் பெற வந்த மக்களுக்கு குருதிக் கறை படிந்த கரங்களால் அர்ச்சனை செய்துள்ளார். மாமன்னன் இராவணனால் பூசிக்கப்பட்ட ஆலயத்தின் புனிதத் தன்மை எதிரியால் கெடுக்கப்பட்டுள்ளது.

எதிரி இந்தக் கொலையைத் திட்டமிட்டுச் செய்தபோது, இருவரதும் சத்தத்துக்கும் இடையில் தூக்கத்திலிருந்த 1 வயதுக் குழந்தை எழுந்துள்ளது. அக்குழந்தை முன்னால் இக்கொலை இடம்பெற்றுள்ளது.

புதைகுழியைத் தோண்டியமை, சடலத்தைப் புதைத்தமை முதலான குற்றங்களின் பிரகாரம் எதிரி கொலையாளி என்பது நிரூபணமாகிறது. எனவே மன்று எதிரிக்கு தூக்குத் தண்டனை விதிக்கிறது என்று நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மா, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தார்.

சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பி. குமார் ரட்ணம், எதிரிக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நியாயமானதே என்று வாதிட்டார்.

இந்த நிலையில் திருகோணமலை மேல் நீதிமன்றம் எதிரிக்கு வழங்கிய தூக்குத் தண்டனையை உறுதி செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி, எதிரியின் மேன்முறையீட்டு மனுவை நிராகரித்தது.

இலங்கைச் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் ஒருவருக்கு 2 மேன்முறையீட்டு உரிமை உண்டு என்ற அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்புக்கும் ஆட்சேபனை தெரிவித்து சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மா, உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சிசிர ஜே.டி அப்ரூ, விஜித் குமார மலல்கொட, முருடு பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்தது.

சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பி.குமார் ரட்ணம் முன்னிலையாகி எதிரிக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை சரியானதே என வாதித்தார்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை உயர் நீதிமன்ற சிறப்பு அமர்வு, எதிரியின் மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, அவருக்கு மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்தது. (ஐ)

## பிரபல சிங்கள நடிகர் கத்திக்குத்துக்கு இலக்கு

இலங்கையின் பிரபல சிங்கள நடிகர் திலக் ஜயவீர கத்திக் குத்து தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நுகேகொடை – ஏழாம் தூண் பிரதேசத்தில் அமைந்துள்ள இரவு விடுதியொன்றில் வைத்து நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

விடுதிக்குள் வந்த மர்மநபர்கள் அவரைக் கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதில் காயமடைந்த அவர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

திலக் ஜயவீரவின் வயிற்றுப் பகுதியில் மூன்று முறை கத்தியால் குத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## நாளை

01.10.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ 12.23 வரை
திதி:ஸப்தமி பி.இ 2.46 மணி வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம் : 7.32 – 9.02 வரை

கிழக்கு பல்கலைக்கழக

# விரிவுரையாளரின் மரணத்தில் மர்மம்; தாயார் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்!

மட்டக்களப்பு, செப். 30

மர்மான நிலையில் உயிரிழந்த கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் போதநாயகி நடராஜாவின் மரணம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அவரது மரணம் தற்கொலையா அல்லது திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டரா என்பது தொடர்பில் சிக்கல் நிலை நீடிக்கிறது.

இந்நிலையில் உயிரிழந்த தனது மகளை, அவரது கணவரான செந்தூரன் பல்வேறு வகையில் கொடுமைப்படுத்தி வந்தார் என தாயார் தெரிவித்துள்ளார்.

பேதநாயகி திருமணமான காலம் முதல் அவர்களுடைய குடும்பத்தில் பல பிரச்சினைகள் இடம்பெற்று வந்தன. அவருடைய கணவன் செந்தூரன் என்பவரால் பல கொடுமைகளுக்கு உட்பட்டிருந்தார்.

இவர் மரணம் தொடர்பாக கேள்வியுற்று அதிர்ச்சி அடையாமல் சதாரணமாக திருகோணமலைக்கு வந்தார். சடலத்தை தனது வீட்டில் வைக்க வேண்டும் என்று முரண்பட்டு இறுதிக் கிரியைக்கு கூட வரவில்லை எனத் தெரிவித்தார்.

போதநாயகியின் மரணம் தொடர்பில் தீவிர விசாரணை வேண்டும் என கோரி கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வளாகத்தின் தொடர்பாடல் மற்றும் மொழிகள் திணைக்களத்திலிருந்து பிரதான வாயில் வரை ஊர்வலமாக வந்த இப் போராட்டத்தில் விரிவுரையாளர்கள் மாணவர்கள் என பல தரப்பினர் கலந்து கொண்டனர்.

போதநாயகியின் மரணம் தற்கொலையாயின் தற்கொலைக்குத் தூண்டியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் அல்லது கொலையாயின் கொலைக்கு காரணம் என்ன? யாரால் கொலை செய்யப்பட்டார் என கண்டுபிடிக்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# பதின்ம வயதுத் திருமணங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதின்ம வயதுத் திருமணங்கள் மற்றும் இணைந்து குடும்பம் நடத்தும் தம்பதியரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதனைத் தடுக்க பதின்ம வயது தம்பதியர் அனைவருக்கும் எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட சமூகப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலக பிரிவுகளையும் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், சிறுவர் நன்நடத்தை அலுவலர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது பிரதேச செயலக ரீதியாக சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பில் கூட்டத்தில் பங்கேற்ற தரப்பினரால் எடுத்துரைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளும் 18 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகளும் இணைந்து வாழ்கின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அதற்குச் சட்டத்தில் இடமில்லை. அத்துடன், பல்வேறு குடும்ப வன்முறைகளுக்கும் இந்தச் செயற்பாடு வழிவகுக்கின்றது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் அனைத்திலும் பதின்ம வயதுத் திருமணங்கள் மற்றும் இணைந்து வாழ்கின்ற சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பதின்ம வயதுத் திருமணங்கள் மற்றும் இணைந்து வாழ்கின்றவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும். இருவரது பெற்றோர் இணக்கமாகச் சென்றாலும் குற்றமிழைத்த பதின்ம வயதினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் உறுதியளித்தனர். (ஐ)

# நாம் ஏற்படுத்திய சலுகையைப் பயன்படுத்தி எமக்கே அடிக்கின்றனர்; அமைச்சர் மங்கள!

கொழும்பு, செப். 30

நல்லாட்சி அரசு கொண்டுவந்த தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்திற்கு எதிராக குரல் எழுப்பிய எதிரணியினர் இன்று அதே சட்டத்தைப் பயன்படுத்தி தகவல்களை பெற்று அரசையே கேள்வி கேட்கின்றனர் என நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சர்வதேச தகவல் உரிமைச்சட்ட தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் கொழும்பு தாமரைத் தடாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –



இந்ததகவல்அறிந்துகொள்ளும் சட்டம் தலைநிமிர்ந்து நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லக்கூடிய இளைஞர் சமூகம் ஒன்றை உருவாக்க வழிவகுக்கின்றது. நல்லாட்சி அரசாங்கம் அதற்கான ஏற்பாட்டை செய்துள்ளது

கடந்த 10 வருட காலப்பகுதியில் உலகில் பெரும்பாலான நாடுகள் இந்த சர்வதேச பிரகடனத்தை தமது நாடுகளில் நிறைவேற்றிக்கொண்டனர். கடந்த வருடங்களில் தகவலை அறிந்து கொள்ளும் சட்டத்தை பல நாடுகள் நிறைவேற்றியுள்ளன.

இலங்கையில் இந்தச் சட்டத்தை முன்னெடுப்பதற்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தது.

தற்பொழுது தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை தொடர்பில் நாட்டில் உள்ள மக்கள் மத்தியில் தெளிவு அதிகரித்துள்ளது. இதன் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் அறிந்துகொண்டுள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (கு)

# ஊடக சுதந்திரம் தொடர்பில் இலங்கை நடவடிக்கை

ஊடகசுதந்திரம் தொடர்பில் இலங்கை குறிப்பிடத்தக்க வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என இலங்கை மற்றும் மாலை தீவுக்கான நோர்வே தூதுவர் தோர்ப் ஜோன் கவுஸ்டட்சய்தர் தெரிவித்துள்ளார்.


நோர்வே தூதுவர் பாராட்டு

கடந்த 27ஆம் திகதி ஆரம்பமான ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்புணர்வு தொடர்பான இருபதாவது வருட பிரகடனம் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை கொழும்பில் இடம் பெறுகின்றது.

இந்த நிகழ்வு குறித்து கருத்து வெளியிட்டபோதே நோர்வே தூதுவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

அண்மைக் காலத்தில் இலங்கை குறிப்பிடத்தக்க அளவில் ஊடக சுதந்திரத்திற்காக பல்வேறு ஆக்க பூர்வ நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது என்று நோர்வே தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு பிரகடன நிகழ்வில் ஆஸ்திரேலியா பங்களாதேஷ், கனடா, சீனா, ஜேர்மனி, இந்தியா, நோர்வே, பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய இராச்சியம் முதலான நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக விசாரணைகள் நேற்று ஆரம்பம்!

கொழும்பு, செப்..30

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு எதிராக விசாரணைகள் நேற்று ஆரம்பமாகிவிட்டன என்று சட்டம், ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொலிஸ்மா அதிபரின் நடத்தை தொடர்பில் பலரும் பல கோணங்களில் விமர்சனங்களையும், முறைப்பாடுகளையும் முன்வைத்தனர். இவை குறித்து விசாரணை நடத்துவதற்காக சட்டம், ஒழுங்கு அமைச்சால் உயர்மட்ட அதிகாரிகள் தலைமையிலான குழுவொன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவின் முன்னிலையில் நேற்று ஆஜராகி பொலிஸ்மா அதிபர் வாக்குமூலம் அளித்துள்ளார். எனவே, சட்டத்தின் பிடியிலிருந்து எவரும் தப்ப முடியாது. நல்லாட்சியில் அதற்கு இடமும் அளிக்கப்படாது.

அதேவேளை, பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணை நடத்துவார்கள். அது சி.ஐ.டியினருக்குரிய பணியாகும். இதில் நாம் தலையிடமாட்டோம். – என்றார். (ஐ)

# மின் தடை

யாழ்ப்பாணம் செப். 30

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**மன்னார் பிரதேசம் –**

மணல்குளம், இலந்தைமோட்டை, சூரியகட்டைக்காடு, மடுச்சந்தியிலிருந்து பூமலர்ந்தான் வரை, மடுமாதா ஆலயம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் அடாவடிக் குழுக்களை ஒடுக்க இராணுவத்துக்கு அதிகாரம் தாருங்கள்!

## அரசிடம் இராணுவத்தளபதி அவசர கோரிக்கை

கொழும்பு, செப். 30

வடக்கில் இயங்கும் சட்டவிரோதக்குழுக்களை ஒழிப்பதற்கு குறுகிய காலப்பகுதிக்காவது இராணுவத்துக்கு அரசு அதிகாரத்தை வழங்கினால் அதை இலகுவில் செய்யக்கூடியதாக இருக்கும் என்று இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார்.

யாழ்குடாநாட்டில், ஆவா குழு போன்ற வன்முறைக் குழுக்களை அடங்குவதற்கு பொலிஸார், இராணுவத்தின் உதவியைக்கோரும் பட்சத்தில் – 48 மணி நேரத்துக்குள் ஆயுதக் குழுக்களை அடக்கிவிட முடியும் என்றும் யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் வினவியபோது அதற்கு பதிலளித்த இராணுவத்தளபதி,

நாட்டின் தேசியப்பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. தேசியப்பாதுகாப்பு என வரும்போது அதில இராணுவத்துக்கு முக்கிய வகிபாகம் இருக்கின்றது. வடக்கில் மட்டுமல்ல ஏனையப் பகுதிகளிலும் சட்டவிரோதக்குழுக்கள் செயற்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த முடியும்.

எதுஎப்படியோ யாழ். கட்டளைத்தளபதியின் கருத்தில் உண்மை இருக்கின்றது. எனவே, குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்காவது இராணுவத்துக்கு அதிகாரம் குறிப்பிட்ட சில அதிகாரங்கள் வழங்கப்படுமானால் அப்பணியை இராணுவத்தால் செய்யமுடியும். இதுவிடயத்தில் அரசு விரைந்து முடிவெடுக்கவேண்டும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir






# ஆசிய கிண்ணத்தை மயிரிழையில் தூக்கியது இந்திய அணி!

ஆசியக் கிண்ணத்தை இறுதிப் போட்டியில் வங்கதேசத்தை திக்கித் திணறி வென்ற இந்திய அணி 7 ஆவது முறையாகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

223 ரன்கள் வெற்றி இலக்கை எட்ட வங்கதேச அணி இந்திய அணியை அழவிட்டனர். கடைசியில் கால் காயத்துடன் இறங்கிய கேதார் ஜாதவ், புவனேஷ்வர் குமார், ஜடேஜா பங்களிப்பினால் இந்திய அணி 50வது ஓவரின் கடைசி பந்தில் வென்றது.

ஸ்ரீகாந்த் கூறியது போல் ‘டப் டிப் டப்டிப்’ என்று அடித்து வெற்றி பெற்றிருக்க வேண்டிய இலக்கு இது, ஆனால் தஸ் புஸ் என்று மூச்சிறைக்க வென்றது இந்திய அணி. ஆனால் பதிவுப் புத்தகத்தில் இந்தியா வென்றது என்றுதான் இருக்கும், டோனி ஆடியது நாளை ‘பயனுள்ள பங்களிப்பு’ என்று வர்ணிக்கப்



படும், ஆனால் போட்டியை இக்கட்டிற்குக் கொண்டு சென்றதே, டோனி – தினேஷ் கார்த்திக் பார்ட்னர்ஷிப்தான். இருவரும் சேர்ந்து சுமார் 14 ஓவர்களில் 54 ரன்களையே சேர்க்கும் அளவுக்கு பவுலிங் ஒன்றும் அபாயகரமாக இல்லை, கட்டுக்கோப்பாக இருந்தது, டோனியினால் ஷோர்ட் பிட்ச், ஓவர் பிட்ச் பந்துகளைக்

## இந்திய வீரர்களின் சகிக்க முடியாத ஆட்டம்

கூட ரன்களுக்கு அடிக்க முடியவில்லை. அவரது துடுப்பாட்டம் வங்கதேசத்துக்கு பீல்டிங் பிராக்டீஸ் கொடுப்பது போல் தெரிந்தது.

ரோஹித் சர்மாவின் உடல் மொழி, இறங்கியது முதல் அவரது அநாயாச ஆட்டம் வங்கதேசத்தின் வெற்றி வாய்ப்பைக் குறைத்தபடியேதான் இருந்தது. 55 பந்துகளில் 3 பவுண்டரிகள் 3 பிரமாதமான சிக்சர்களுடன் 48 ரன்கள் எடுத்த ரோஹித் சர்மா ரூபல் ஹுசைன் பந்தை நஜ்முலிடம் மிட்விக்கெட்டில் பிடி கொடுத்த பிறகே 16.4 ஓவர்களில் 83/3 என்று ஆனது இந்தியா.

டோனி தானும் கெட்டு, அதுவரை நன்றாக ஆடிக்கொண்டிருந்த தினேஷ் கார்த்திக்கின் ரிதத்தையும் கெடுத்தார், தோனி 67 பந்துகளில் 36 ரன்களை எடுத்த போது உண்மையில் யாரோ தாத்தா ஆடுவது போல்தான் இருந்தது. அந்த அளவுக்கு பவுலிங்கில் ஒன்றுமில்லை. ஏகப்பட்ட பந்துகளை விழுங்கினார். வேண்டுமென்றே ஆடுகிறாரா, இல்லை அவ்வளவுதான் காலிப் பெருங்காய டப்பாவா என்று புரியவில்லை, இவரையெல்லாம் வைத்துக் கொண்டு உலகக் கோப்பைக்குச் செல்வதெல்லாம் கிரிக்கெட் அல்லாத வேறு வணிகக் காரணங்களுக்காக வேண்டுமானால் இருக்கலாம். அணித்தேர்வுக்குழுவினர் அவரிடம் பேச வேண்டிய நேரம் வந்து விட்டது. ஒன்று வெற்றிக்காக ஆடுங்கள் அல்லது ஓய்வு பெறுங்கள், இளம் வீரர்கள் ரிஷப் பந்த், சஞ்சு சாம்சன், இஷான் கிஷன் போன்ற இளம் சுட்டி விக்கெட் கீப்பர் பேட்ஸ்மென்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர் என்று அவரிடம் தேர்வுக்குழுவினர் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. சொல்லித்தான் ஆகவேண்டும்.

**வங்கதேச அணியின் குறைபாடினால் குறைந்து போன இலக்கு:**

வங்கதேச அணியில் லிட்டன் தாஸ் 66 பந்துகளில் 90 ரன்கள் இருந்தவர் அடுத்த 20 பந்துகளை எடுத்துக்கொண்டு 87 பந்துகளில் சதம் எடுத்தார். இவர் திடீரென மந்தமடைந்தது எதிர்முனை வீரர்களின் ரிதமையும் கெடுத்தது. கடைசியில் அவரது ஸ்டம்பிங் தீர்ப்பு சந்தேகத்துக்குரியதே. கிரீஸ் எப்போதும் நடுவர்வசம் என்று கிரிக்கெட்டில் சொல்லப்படுவதுண்டு, வர்ணனையில் ரமீஸ் ராஜா மட்டுமே லிட்டன் தாஸ் நாட் அவுட் என்று கூறினார், அவர் கூறியதில் உண்மை இருக்கிறது.




கேதார் ஜாதவ் பந்து வீச்சில் விக்கெட்டுகளை கொடுக்கும் அணி வெற்றி பெற லாயக்கில்லை என்றே கூற வேண்டும், அது என்ன பந்து வீச்சு என்று விக்கெட்டைக் கொடுக்கின்றனர் என்று புரியவில்லை. அதே போல் இம்ருல் கயேஸுக்கு சாஹல் பந்தில் கொடுத்த எல்.பி.யும் ‘அம்பயர்ஸ்கால்’ ஆனது, ஆனால் பந்து ஒவ் ஸ்டம்புக்கு வெளியே பின் தொடையில் பட்டது போல்தான் தெரிந்தது. நடுவர் நொட் அவுட் என்று கூறியிருந்தால் அது நொட் அவுட்தான் இதுவும் சந்தேகமான தீர்ப்பாக அமைந்தது. இதனால் 48.3 ஓவர்களில் அந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழக்க நேர்ந்தது, இதனால் 9 பந்துகளில் அவர்கள் மேலும் 10 -15 ரன்கள் எடுத்திருக்க வேண்டிய வாய்ப்பு பறிபோனது. அந்தக் கூடுதல் ரன்கள் வந்திருந்தால் இந்திய அணி தோற்றிருக்கும். 120/0 என்ற நிலையில் மிரட்டிய வங்கதேச பேட்டிங்கை இந்திய அணி பந்து வீச்சு 222 ரன்களுக்கு அடக்கியது. மேலும் ஷாகிப் அல் ஹசன் இல்லாதது அவர்களுக்கு பவுலிங்கில் கை ஒடிந்த நிலையே, காரணம் புவனேஷ் வர் குமார் போன்றவர்களையெல்லாம் அவர் ஆடவிட்டிருக்கமாட்டார். இவையெல்லாம் வங்கதேசத்தின் பின்னடைவு களுக்குக் காரணம், ஆனால் இத்தனை குறைபாடுகள் இருந்தும் இந்திய அணியை அவர்கள் அழ விட்டனர்.



குறைந்த இலக்குகளை தடுப்பதற்குத் தேவையான கட்டுக்கோப்புடன் வங்கதேசம் வீசியது, ஸ்டம்ப் டு ஸ்டம்ப் பந்து வீச்சில் 7 பேர் சுற்றி நின்று கொண்டு சிங்கிள்களையே வரவிடாமல் செய்யடென்ன் அதிகரித்தது.

தினேஷ் கார்த்திக் 31வது ஓவரில் புல்டாஸை ஆடாமல் விட்டு எல்.பி.ஆகி வெளியேறினார். 61 பந்துகளில் 1 பவுண்டரி ஒரு ஹுக் சிக்ஸ் மூலம் 37 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டோனி 67 பந்துகளில் 36 ரன்கள் எடுத்து 37வது ஓவரில் முஸ்தபிசுர் வீசிய ஒரு சாதாரண பந்தை டோனி ஏனோதானோவென்று ஆட எட்ஜ் ஆகி முஷ்பிகுருக்கு கேட்ச் பிராக்டீஸ் ஆனது. இந்திய அணி 160/5. ஜாதவ் கிரீஸில் இருந்தார் அவர் கால் காயத்துடன் இருந்தார். அவரால் பந்துகளை அடிக்க முடியவில்லை, ஓட முடியவில்லை. ரோஹித் ஒருகட்டத்தில் அவரை பெவிலியனுக்குத் திரும்பி அழைத்து விட்டார், அப்போது 12 ஓவர்களில் 56 ரன்கள் தேவைப்பட்டது.

அப்போதுதான் ரவீந்திர ஜடேஜா, புவனேஷ்வர் குமார் இணைந்தனர். ஜடேஜா ஒரு அணி வீரராக ஹை பிரஷர் சூழ்நிலையில் திறம்படக் கையாண்டார். டைட் பவுலிங், காற்றுப்புகா பீல்டிங்கையும் மீறி அவர் 33 பந்துகளில் 23 ரன்கள் எடுத்தார். புவனேஷ்வர் குமார் 1 பவுண்டரி அடித்தார், கடைசியில் ரூபல் ஹுசைன் பந்தில் சிக்ஸ் ஒன்றையும் அடித்துத் திகைக்கவைத்தார், அந்த சிக்ஸரை ரூபல் ஹுசைன் விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது, புவனேஷ்வர் குமாருக்கெல்லாம் புல் லெந்தில் வீசக் கூடாது, பேக் ஒவ் லெந்தில் நெஞ்சுக்கு பந்தை எழுப்பினால் அவரும் பந்துடன் கூட எழும்பி திண்டாடுவார். அந்தவிதத்தில் அவருக்கு சிக்ஸ் கொடுத்தது சிறிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. மற்றபடி ரூபல் ஹுசைன் 10 ஓவர்களில் 26 ரன்கள் 2 விக்கெட் என்று அலற விட்டார்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

“ரோஹித் சர்மாவின் உடல் மொழி, இறங்கியது முதல் அவரது அநாயாச ஆட்டம் வங்கதேசத்தின் வெற்றி வாய்ப்பைக் குறைத்தபடியேதான் இருந்தது. 55 பந்துகளில் 3 பவுண்டரிகள் 3 பிரமாதமான சிக்சர்களுடன் 48 ரன்கள் எடுத்த ரோஹித் சர்மா ரூபல் ஹுசைன் பந்தை நஜ்முலிடம் மிட்விக்கெட்டில் பிடி கொடுத்த பிறகே 16.4 ஓவர்களில் 83/3 என்று ஆனது இந்தியா.





# சர்வதேசம் பூகோள அரசியல் வியூகங்களிலேயே கவனம்!

## இலங்கைக்கு அழுத்தம் என்பது இனி இல்லை!! ஈழத் தரப்பின் கதி என்ன?

**ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன், (Brock Bierman) சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பு குறித்த நிறுவனத்தினால் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மைத்திரிபால சிறிசேன இந்த சந்திப்பையும் நிதியுதவியையும் எதிர்பார்த்திருக்கவில்லை என நியூயோர்க்கில் உள்ள இலங்கைச் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.**

ஈழத் தமிழர் விவகாரத்தில் கொழும்பு சொல்வதை நியூயோர்க், புதுடில்லி ஏற்கும் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் திருகோணமலையின் கடற்ப் பகுதியை மையப்படுத்திய எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகள் இந்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கையின் அபிவிருத் தித் திட்டங்களுக்காக அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் (Millennium Challenge Cooperation) (MCC) 480 மில்லியன் டொலர் நிதியை வழங்க தானாகவே முன்வந்துள்ளது. மூன்று இந்தியக் கடற்படைப் போர்க் கலங்கள் இலங்கைக் கடற்படையுடன் திருகோணமலையில் கடந்த ஆறாம் திகதியில் இருந்து 13ஆம்திகதி வரை SLINEX - 2018 என்ற இணைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. அமெரிக்காவும், ஜப்பானும் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இதே போன்ற பயிற்சிகளை இலங்கைக் கடற்படைக்கு திருகோணமலைக் கடற்பரப்பில் வழங் கியிருந்தன.

இந்த நிலையில் 480 மில்லியன் டொலர் நிதியுதவியை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வழங்க அமெரிக்காவின் MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் பூகோள அரசியல் அணுகுமுறைக்குள் இலங்கை அரசை உள்வாங்கும் நோக்கிலும் திருகோணமலையை அமெரிக்காவுக்கு வழங்கியதற்கான நன்றிக் கடனாகவும் இந்த நிதி அமெரிக்காவின் MCC நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்டதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன்,(Brock Bierman) சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பு குறித்த நிறுவனத்தினால் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மைத்திரிபால சிறிசேன இந்த சந்திப்பையும் நிதியுதவியையும் எதிர்பார்த்திருக்கவில்லையென நியூயோர்க்கில் உள்ள இலங்கைச் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்ற சந்திப்பில் 480 மில்லியன் டொலர்களை உதவி யாக வழங்கவுள்ளதாக புரோக் பியேர்மன் மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் 2019 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திற்கு உதவியாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பில் வைத்து இந்த நிதி கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்றும் கொழும்பில் கைச்சாத்திடப்படவுள்ளதாக நியூயோர்க்கில் உள்ள இலங்கைச் செய்தியாளர் ஒருவர் கூர்மைச் செய்தித் தளத்திற்குத் தெரிவித்தார்.

நிதி கையளிப்பு நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டும்என MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன், நியூயோர்க்கில் வைத்து மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பும் விடுத்துள்ளார்.

போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கைப் படையினரை விடுவிக்க வேண்டும் என்றும் அவ்வா றான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் மைத்திரிபால சிறிசேன ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்று வதற்குத் தயாராகவிருந்தார்.

ஆனால், இறுதிநேரத்தில் அவரது உரையில் மாற்றங்கள் செய்யப்பட்டன என மைத்திரிபால சிறிசேனவுடன் நியூயோர்க் சென்றுள்ள அமைச்சர் மனோ கணேசன் கடந்த புதன்கிழமை தனது முகநூல் பதிவில் கூறியுள்ளார்.

ஆனாலும், இலங்கைப் பிரச்சினை உள்ளக விவகாரம் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கமே தீர்வுகாணும் என்றும் அதற்கு ஏதுவான நிலையில் சர்வதேச சமூகம் இடமளிக்க வேண்டும் எனவும் மைத்திரிபால சிறிசேன தனது உரையில் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருந்தார்.



ஆகவே, சீன அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந்து இலங்கையை விடுவித்து, தமது பூகோள அரசியல் தேவைப்பாட்டுக்கு ஏற்ற முறையில் இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் இலங்கையில் தளம் ஒன்றைத் திடமாக அமைத்துள்ளதையே இந்த நகர்வுகள் காண்பிக்கின்றன.

குறிப்பாக திருகோணமலையை மையப்படுத்திய கடந்த ஓகஸ்ட் மாத செயற்பாடுகள் அந்த நகர்வுகளைக் கோடிட்டுக் காண்பிக்கின்றன.

அத்துடன் திருகோணமலை– சீனக்குடாவில் உள்ள 85 எண்ணெய்த் தாங்கிகளை இந்திய அரசின் உதவியோடு அபிவிருத்தி செய்வதற்கான யோசனை ஒன்றுக்கு மைத்திரி – ரணில் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு 39 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை வழங்கவுள்ளதாக அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்களம் கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியிட்டிருந்த அறிக்கையில் கூறியிருந்தது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹீதர் நொயட், இந்து சமுத்திர வலய பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தி வருகிறோம் எனவும் கடந்த ஓகஸ்ட் மாதம் மாலைதீவு பயணத்தின் பின்னர் கூறியிருந்தார்.

எனவே இதன் தொடர்ச்சியாகவே அமெரிக்கா, இலங்கைக்கு இந்த நிதியுதவிகளை வழங்குகின்றது. இந்திய மத்திய அரசின் ஆசீர்வாதமும் இதற்கு உண்டு.

ஏனெனில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசோடு தென்னாசியக் கடற்படை விவகாரங்கள் தொடர்பான நெருக்கமான உறவை வளர்ப்பதில் அமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஈழத் தமிழர் விவகாரத்தில் நியூயோர்க்கும் புதுடில்லியும் கொழும்பு சொல்வதையே ஏற்கும் நிலை உருவாகியுள்ளது. ஏனெனில் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் பூகோள அரசியல் தேவைக் கான சகலவிதமான இணக்கத்திற்கும் இலங்கை உட்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் இலங்கை மீதான இச் செயற்பாடுகள் குறித்து, ஜே.வி.பி உறுப்பினர் பிமல் ரத்ணாநயக்க ஏலவே இலங்கை நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருந் தார்.

ஆகவே, இறுதிப் போருக்கு உதவியளித்த இந்த நாடுகளின் சர்வதேச வியூகங்களுக்கு மத்தியில், ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் என தமிழ்த் தரப்பு மேலும் நம்புவது அர்த்தமற்றது.

இலங்கை விவகாரத்தில், அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் கூட்டை ஜே.பி.வி போன்ற சிங்களக் கட்சி எதிர்க்கின்றது என்பதற்காக தமிழ்த் தரப்பு ஜே.வி.பியோடு சேர்ந்து செயற்படவும் முடியாது.

ஆனால், இந்த நாடுகளுடைய இலங்கை குறித்த பூகோள அரசியல் வியூகங்களை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்துவது என்பது தொடர்பான மாற்றுச் சிந்தனைகளை தமிழ்த் தரப்பு உருவாக்க வேண்டும் என்கிறார் சட்டத்தரணி காண்டீபன். *



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி ?

30.09.2018
06.10.2018

சந்திராஷ்டம நாள் - சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

2018 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பஞ்சமித்திதி காலை 7.03 மணி வரை பின்னர் ஷஷ்டித்திதி பி.இ.4.45 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம். ரோகிணி பி.ப. 1.41 மணி வரை. பின்னர் மிருகசீரிடம். சித்த யோகம் பி.ப 1.41 மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை

**சுபநேரம்** - காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரை

**திவசம் செய்ய வேண்டிய திதி**- புரட்டாதி மாத தேய்பிறை ஷஷ்டி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - ரோகிணி.

## மேஷம்:

ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். உறவினர்களின் அன்பைப் பெற்று மகிழ்ச்சி அடைவார்கள். புதிய உறவுகளும் உருவாகும். தொழில் ரீதியான முன்னேற்றம் நன்மையைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் வேகமும் சுறுசுறுப்பும் தென்படும். எதிரிகளாக இருந்து வந்த நண்பர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். எடுத்த காரியத்தில் வெற்றியும், கொடுத்த வேலையை முடித்துக் கொடுப்பதில் ஆர்வமும் தென்படும். அரசாங்க ஒத்துழைப்பு நன்மையைத் தரும். வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும்.

## ரிஷபம்:

அனுகூலமான வாரம். பணக் கஷ்டம் நீங்கும். எடுத்த காரியத்தில் அனுகூலமான நிலையும், அரசு வழியில் தேங்கிய காரியங்களும் நடை முறைக்கு வரும். வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். தொலை தூரப் பயணம் வெற்றிகரமாக அமையும். தூரத்து சொந்த உறவினர்கள் வந்து உறவாடுவார்கள். குடும்பத்தில் சுப காரியங்களுக்கு சென்று வருவார்கள். பெண்களுக்கு ஆடம்பரப் பொருள்கள் மீது ஆர்வம் உண்டாகும். புத்திரர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து மகிழ்வார்கள்.

## மிதுனம்:

யோசனையான வாரம். பொருளாதாரத்தில் சற்று மந்த நிலை காணப்படும். செலவுகள் அதிகரிக்கும். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டாம். கடன் படாது இருப்பது நன்மையைத் தரும். வியாபாரிகள் பண விடயத்தில் கொடுக்கல், வாங்கலில் கவனம் எடுக்க வேண்டும். மற்றவர்களுடன் அதிக நம்பிக்கையை வைத்திருப்பது நல்லதல்ல. மாணவர்களுக்கு மறதி அடிக்கடி வரும். மந்த புத்தி காணப்படும். குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகளால் வேதனை உண்டாகும்.

## கடகம்:

சுபீட்சமான வாரம். பண பலம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களின் அன்பும் ஆதரவும் கிட்டும். எதிர்பார்த்த காரியம் கைகூடும். சுப காரியங்களுக்கு சென்று வருவார்கள். பகையாய் இருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு. தொழில் ரீதியாக இவர்களுக்கு பல வாய்ப்புக்கள் கிட்டும். கொடுக்கல், வாங்கலில் நிலுவை வசூலாகும். திருமணக் காரியம் ஒப்பேறும். ஆடை, ஆபரணங்கள் சேர்க்கை உண்டாகும். மனைவி வழியால் ஆதாயம் கிட்டும்.

## சிம்மம்:

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். வியாபாரிகள் விற்பனைவிடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிவரும். குடும்ப விடயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டி வரும் நீண்ட நாள் தொடர்பு இல்லாமல் இருந்த உறவினர்கள் பலரின் முயற்சியால் மீண்டும் ஒன்று சேர்வார்கள். வீண் செலவுகளைச் செய்ய வேண்டி வரும் வாகனங்களுக்கு திடீர் செலவு வரும் பிறர் விடயங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. புத்திரர்களால் சிரமங்கள் உண்டாகும்.

## கன்னி:

கீர்த்தியான வாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலை நீடிக்கும். உறவுகள் பலப்படும். அரசாங்க உதவிகள் கிட்டும். கொடுக்கல், வாங்கலில் சீரான போக்கு நீடிக்கும். முதலீடுகளில் நல்ல ஆதாயம் கிட்டும். மாணவர்கள் திறமையால் ஆசிரியர்கள் பாராட்டைப் பெறுவார்கள். கலைஞர்களுக்குத் திறமை வெளிப்படும். அரசு வழியால் பரிசு பாராட்டுக்கள் பெருகும். குலதெய்வ வழிபாட்டுக்கு சென்று வருவார்கள். புதிய சொத்துக்கள் வாங்குவதற்கு குடும்பத்தினருடன் கலந்துரையாடுவார்கள்.

## துலாம்:

கவலையான வாரம். பண முடை ஏற்படும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். முதலீடு செய்யும் காரியங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. உயர் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். பெண்களுடன் பழகும் போது கவனமாக இருக்க வேண்டியது அவசியம். தாய் தந்தையாரைப் பற்றிய கவலை உண்டாகும். உடல் நலம் பாதிப்படைந்து மருத்துவ செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் ஏமாற்றம் உண்டாகும்.

## விருச்சிகம்:

சமபலன்கள் காணப்படுகின்றன பொருளாதாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களின் எதிர்பார்ப்புக்கள் தாமதமாகும். வியாபாரிகளுக்கு அதிக முதலீடுகளால் சில நேரம் பண விருத்தி உண்டாகும். புதிய முயற்சி தாமதமாகும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அடிக்கடி அலைச்சல் உண்டாகும். பணி இடங்களில் காரணமின்றி சிலர் இவர்களுக்கு பிரச்சினை செய்வார்கள் அவர்களிடம் கவனமாக செயற்பட்டு ஒதுங்குவது நல்லது.

## தனுசு:

மேன்மையான வாரம். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். அரசாங்க அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். வாகன வசதிகளைப் பெருக்கிக் கொள்வார்கள். பெண்களின் சுய முயற்சி நல்ல பயன்களைத் தரும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தி அதிக மதிப்பெண் பெற ஆர்வமுடன் பயிலுவார்கள். தொழில் சார்ந்த நண்பர்களின் நட்பும் ஆதரவும் நன்மையாக இருக்கும். புத்திரர்களின் வளர்ச்சிக்கு எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

## மகரம்:

இனிமையான வாரம் பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். சகோதர வழியில் நன்மைகள் உண்டாகும். பெண்களின் விருப்பங்கள் நிறைவேறும் ஆடை, அணிமணி சேர்க்கை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். சிலர் தர்ம காரியங்களை செய்து நற்பயன்களைப் பெறுவார்கள். எந்தத் தொழில் செய்தாலும் நன்மை உண்டாகும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

## கும்பம்:

துயரமான வாரம். வருமானம் நலிவடையும். குடும்பத்தில் விரிசல் உண்டாகும். எடுக்கும் காரியங்கள் தோல்வி அடையும் உடல் நலம் பாதிக்கப்படும். உறவினர்கள் நண்பர்கள் மறைமுகமாக நடந்து கொள்வார்கள். வியாபாரம் மந்த நிலையை அடையும். தொழிலில் வேலைப் பளு அதிகரிக்கும். சிலருக்கு தொழிலில் வெறுப்பும் மன விரக்தியும் உண்டாகும். உத்தியோகத்தர்களின் கவனக் குறைவால் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டி வரும்.

## மீனம்:

விருத்தியான வாரம் பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழிலில் சிறந்து விளங்குவார்கள். திருமண வாய்ப்புக்கள் உண்டாகும். சகோதரர்களின் ஆதரவு கிட்டும். மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு அமையும். வேலை தேடுபவர்களுக்கு நிரந்தர பணி கிட்டும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிட்டும். பெண்களுக்கு சுய தொழில் வளர்ச்சி பெறும். எண்ணிய எண்ணம் நிறைவேறும் கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும்.



# அதிசய நாடாக இலங்கை உருவாக தடையாக சீனா!

தனது நாட்டை மீண்டும் பேண்தகு வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கு சிறிலங்கா தயாராகியுள்ளது. அடுத்துவரும் பத்தாண்டில் வளர்ந்து வரும் சந்தைகளில் தமக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காகத் தம்மை நன்றாகத் தயார்ப்படுத்தும் சில நாடுகளின் பட்டியலில் சிறிலங்காவும் உள்ளடங்குவதாக அண்மையில் மக் கின்சி பூகோள நிறுவகத்தால் – McKinsey Global Institute - மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் சிறிலங்காவின் இந்த வளர்ச்சிக்கு சீனா தடையாக இருக்கும். சிறிலங்காவின் மனித மூலதனமே அதன் பலமாக உள்ளது. 2015இல் சிறிலங்காவின் மனித மேம்பாட்டுச் சுட்டியானது 0.766 ஆகக் காணப்பட்டது. இதனால் சிறிலங்கா உயர் மனித மேம்பாட்டு வகைக்குள் உள்ளடக்கப்பட்டது.

உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் பிரகாரம் 188 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் சிறிலங்கா அதன் மனித மேம்பாட்டுச் சுட்டியில் 73ஆவது நாடாகத் தரவரி சைப்படுத்தப்பட்டுள்ளது. 1990 தொடக்கம் 2015 காலப்பகுதியில் சிறிலங்காவின் மனித மேம்பாட்டுச் சுட்டியானது 0.626 இலிருந்து 0.766 ஆக அதாவது 22.4 சதவீதத்தால் அதிகரித்தது.

சிறிலங்கா சுதந்திரமடைந்த பின்னரான மூன்று பத்தாண்டுகளில், ஆசிய வளர்ச்சி அதிசயத்தை பற்றிப் பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. இதன் பின்னர் சிறிலங்காவில் ஏற்பட்ட உள் நாட்டு யுத்தம் காரணமாக இதன் அபிவிருத்தி பாதிக்கப்பட்டது.

'1960களில், சிறிலங்கா அடுத்த ஆசிய வளர்ச்சியின் அதிசய நாடாக உருவாகி வந்த நிலையில், நாட்டில் தோன்றிய உள்நாட்டுப் போர் காரணமாக இது தடுத்து நிறுத்தப்பட்டது Breakout Nations என்கின்ற நூலின் ஆசிரியர் றுச்சிர் சர்மா தெரிவித்தார்.

1948இல் சிறிலங்கா சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து, சிங்களப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தலைவர்களால் பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட அநீதிகளைச் சீர் செய்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்ட போது இதனால் சிறுபான்மைத் தமிழ்மக்கள் பாரபட்சப்படுத்தப்பட்டனர்' என ஆசிரியர் றுச்சிர் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் சிறிலங்காவில் இடம்பெற்ற சம்பவங்கள் வரலாறாகக் காணப்படுகிறது.

'தமிழீழ விடுதலைப் புலிகள் என்கின்ற பெயரில் 1977இல் உருவாகிய தமிழ்த் தீவிரவாதிகள் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்கள் சிறுவர்களைப் படையில் இணைத்தமை மற்றும் தற்கொலைக் குண்டு தாரிகளை யுத்தத்தில் பயன்படுத்தினர் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், சிறிலங்காவின் மத்திய அரசாங்கம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்தை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தியதுடன் பல்வேறு தடைகளையும் இட்டனர்' என ஆசிரியர் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

## கடன் சுமையால் அல்லாடும் நிலை

ஆனால் இது நடந்து முடிந்து விட்டது. தற்போது சிறிலங்கா மீண்டும் வெற்றி நாடாக மிளிர்வதற்கான இரண்டாவது வாய்ப்பைப் பெற்றுள்ளது.

'உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து விட்டது. யுத்த வடுக்களை ஆற்றுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இந்நிலையில் சிறிலங்கா மீண்டும் வளர்ச்சி நாடாக மாறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது' என சர்மா தெரிவித்தார்.

**தடையாகச் சீனா**

ஆனால் சிறிலங்கா இவ்வாறானதொரு வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதற்கு சீனா தடையாக இருக்கலாம். சீனாவிடமிருந்து சிறிலங்கா பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்த முடியாததால் சிறிலங்கா தனது பெரிய துறைமுகங்களை சீனாவுக்குத் தாரை வார்க்க வேண்டிய நிலையிலுள்ளது.

றொய்ட்டர் அறிக்கையின் பிரகாரம், சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட 1.12 பில்லியன் டொலர் கடனை அடைக்கும் நோக்குடன் கடந்த ஆண்டு சிறிலங்கா தனது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 584 மில்லியன் டொலர் பெறுமதிக்கு சீனாவிடம் குத்தகைக்கு வழங்கியது.

ஜூலை 2017இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் கீழ், அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 ஆண்டுகால குத்தகைக்கு சீனாவிடம் கையளிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக சிறிலங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இராணுவ மற்றும் இராஜதந்திர ஆதரவுகளை 2007இல் சீனா வழங்கியதிலிருந்து சிறிலங்காவில் சீனாவின் பிரசன்னம் அதிகரிக்கத் தொடங்கியது. சிறிலங்காவில் கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு சீனா உயர் வட்டி வீதத்தில் கடன்களை வழங்கியது.

சீனாவிடமிருந்து சிறிலங்கா பெற்றுக் கொண்ட கடனானது 2017இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 77.60 சதவீதமாகும். 1950 – 2017 வரையான காலப்பகுதியில் இது 69.69 சதவீதமாகக் காணப்பட்டது.

இதேவேளையில், சிறிலங்கா அரசாங் கத்தின் வரவு – செலவுத் திட்டப் பற்றாக்குறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.5 சதவீமாக உள்ளது.

சிறிலங்கா மீதான கடன் சுமையானது சிறிலங்கா ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி அதிசய நாடாக உருவாவதற்கு கிடைக்கப் பெறும் வாய்ப்பிற்குத் தடையாக இருக்கலாம் என ஆய்வில் சுட்டிக் காட்டப்படுகிறது.

**வழிமூலம் - forbes**
**ஆங்கிலத்தில் - Panos Mourdoukoutas**
**மொழியாக்கம் - நித்தியபாரதி**

# ஆசிய கிண்ணத்தை மயிரிழையில்...

(06 பக்கத் தொடர்ச்சி )



ஜடேஜா, புவனேஷ்வர் கூட்டணி 9.2 ஓவர்களில் அதாவது 56 பந்துகளில் 45 ரன்களைப் போராடிச் சேர்க்க கடும் மன உறுதியுடன் ஆடினா. ஸ்கோர் 212 ரன்கள் எனும் போது இந்திய ஓய்வறையில் கொஞ்சம் தெம்பு வந்தது. ஆனால் அப்போது தான் ஜடேஜா தன்னைக் குறுக்காகக் கடந்து செல்லும் லெந்த் பந்து மெலிதாக எட்ஜ் ஆக வெளியேறினார். உடனேயே 31 பந்துகளில் 1 பவுண்டரி 1 சிக்ஸுடன் 21முக்கிய ரன்களை எடுத்த புவனேஸ்வர் குமாரும் முஸ்தபிசுர் பந்து ஒன்று அவருக்குக் குறுக்காகச் செல்ல காலை நகர்த்தாமல் உடலுக்கு தள்ளி மட்டையைக் கொண்டு போக எட்ஜ் ஆகி வெளியேறினார். 48.1 ஓவரில் 214/7. அதற்குள் காயமடைந்த கேதார் ஜாதவ் மீண்டும் களமிறங்கியிருந்தார், அவர் 21 பந்துகளில் 20 ரன்கள் எடுத்திருந்தார். குல்தீப் யாதவ் இறங்கினார். 11 பந்துகளில் 9 ரன்கள் தேவை.

குல்தீப் வந்தவுடனேயே ஒரு சிங்கிள் எடுத்து ஜாதவ்விடம் ஸ்ட்ரைக் கொடுத்தார். ஜாதவ் பாயிண்டில் அடித்து சிங்கிள் வேண்டாம் என்றார், அடுத்த பந்தும் ஜாதவ் கிளவ்வில் பட்டது, ரன் இல்லை. 49வது ஓவரின் கடைசி பந்தை பாயிண்டில் அருமையாக கட் செய்து ஜாதவ் 2 ரன்களை எடுத்தார். சிங்கிள் எடுத்து ஓவர் கீப் செய்வார் என்று பார்த்தால் கடைசி பந்தில் 2 ரன்களை எடுத்து விட்டார்.

கடைசிஓவரில் 6 ரன்கள் தேவை. குல்தீப் யாதவ் ஸ்ட்ரைக்கில் இருந்தார். கடைசி ஓவரை மஹ்முதுல்லா வீசினார் குல்தீப் முதல் பந்தை லாங் ஆஃபில் அடித்து சிங்கிள் எடுத்தார். பீல்டரை முன்னால் கொண்டு வந்து நெருக்கியிருக்க வேண்டும், செய்யவில்லை. மீண்டும் ஜாதவ் பந்தைத் தட்டி விட்டு சிங்கிள் எடுத்து குல்தீப்பிடம் ஸ்ட்ரைக் வர இந்திய ரசிகர்களுக்கு திக் திக் கணம். ஆனால் குல்தீப் யாதவ் ஒரு ஸ்லாக் ஸ்வீப் அடித்து 2 ரன்களை எடுத்தார். அடுத்த பந்து ரன் வரவில்லை. அடுத்த பந்தை மீண்டும் ஒரு சுற்று சுற்றினார் சிக்கவில்லை கால்காப்பில் பட்டு கீப்பருக்கு அருகில் செல்ல ஒரு ரன்னை அதற்குள் எடுத்து ஜாதவ்விடம் மீண்டும் ஸ்ட்ரைக் வந்தது. கடைசி பந்து பிளிக் ஷாட்டை ஜாதவ் மட்டையில் தொட முடியவில்லை கால்காப்பில் பட்டு பைன் லெக்கில் செல்ல ஒரு ரன், அதுவே வெற்றி ரன். வெற்றி ரன் லெக்பை முறையில் இதற்கு முன்னர் வந்துள்ளதா என்பது சுவாரசியமான புள்ளி விவர ஆய்வாக இருக்கும். இந்திய அணி வெற்றி பெற்று ஆசியக் கோப்பையை 7வது முறையாகக் கைப்பற்றியது. கேதார் ஜாதவ் 27 பந்துகளில் 23 ரன்கள் நொட் அவுட். குல்தீப் 5 நொட் அவுட். லிட்டன் தாஸ் ஆட்ட நாயகன், ஷிகர் தவான் தொடர் நாயகன். உண்மையில் ஆட்ட நாயகன் விருதை கேதார் ஜாதவுக்கு கொடுத்திருக்கலாம். ஏனெனில் வங்கதேச சதக்கூட்டணியை உடைத்தவரும் அவரே முக்கிய விக்கெட்டான முஷ்பிகுர் ரஹீமை பெவிலியன் அனுப்பியவரும் அவரே, கடைசியில் பேட்டிங்கில் இந்திய அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றவரும் அவரே.

முன்னதாக தொடக்கத்தில் ஷிகர் தவான் 3 பவுண்டரிகளுடன் 14 பந்துகளில் 15 ரன்களை எடுத்து நஜ்முல் இஸ்லாம் பந்தில் சவுமியா சர்க்காரிடம் கேட்ச் ஆக நாகின் டான்ஸ் ஆடினார் நஜ்முல். ரோஹித் சர்மாவின் ஆட்டம் உண்மையில் அட்டகாசம், அலட்சியமான 3 சிக்சர்கள், 3 பவுண்டரிகளுடன் அவர் 48 ரன்கள் எடுத்து கம்பீரமாக ஆடிவந்த நிலையில் ரூபல் ஹுசைன் பந்தை புல் ஷாட்டில் டீப் மிட்விக்கெட்டில் கேட்ச் கொடுக்க திருப்பு முனை ஆனது. வங்கதேசப் பந்து வீச்சில் மெஹதி ஹசன் மிராஸ் சரியாக வீசவில்லை அவர் 4 ஓவர்களில் 27 ரன்களை விட்டுக் கொடுத்தார். நஜ்முல் இஸ்லாம் ஷிகர் தவான் விக்கெட்டை வீழ்த்தினாலும் 10 ஓவர்களில் 56 ரன்களை விட்டுக் கொடுத்தார். இந்த இடத்தில் தான் ஷாகிப் அல் ஹசன் இன்மை பெரிய ஓட்டையை ஏற்படுத்தியது. மற்றபடி முஸ்தபிசர் (2/38), மஷ்ரபே (1/35), ரூபல் (2/26) அசத்தலாக வீசினர். இந்திய அணி ஆசிய சாம்பியன்களாக ஏழாவது முறையாக கிண்ணத்தை வென்றுள்ளது. *

காலைக்கதிர் Kalaikkathir



# காலநிலை மாற்றத்தால்

## வடக்கு எதிர்நோக்கும் மிகப் பெரும் ஆபத்து!

- கே. சஞ்சயன் -



காலநிலை மாற்றங்களால், அடுத்த 30 ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் என்பன மோசமான நிலையை எட்டும் என்று, உலக வங்கியின் அண்மைய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

வெப்பநிலை, மழைவீழ்ச்சி மாற்றங்கள் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படுத்தப் போகும் தாக்கங்கள் என்ற தலைப்பில், அண்மையில் உலக வங்கி, ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. தெற்காசியா வில், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் குறித்து, தனித் தனியான அறிக்கைகளாக வெளியிடப்பட்டன.

இந்த அறிக்கையில், 2050ஆம் ஆண்டில், இலங்கை எதிர்கொள்ளப் போகின்ற மிகப்பெரிய அச்சுறுத்தல்கள் தெளிவாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த இலங்கைத் தீவிலும், வடக்கு மாகாணமே அதிக பாதிப்பைச் சந்திக்கப் போகின்றது என்ற திடுக்கிடும் தகவலையும் அந்த அறிக்கை தாங்கியிருக்கிறது.

பொருளாதார நிலை, பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக, உலக வங்கி அவ்வப்போது எச்சரிக்கைகளை விடுப்பது வழக்கம். ஆனால், அதுபற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

ஏதாவது உதவியை வழங்குவதற்காக, உலக வங்கி நிபந்தனையை விதிக்கும் போது மாத்திரமே, பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் அரசாங்கம் கூட, உலக வங்கியின் அறிக்கையைப் படித்துப் பார்ப்பதே வழக்கம்.

**அச்சம் தரும் அறிக்கை**

அதற்கு மாறாக, காலநிலை மாற்றமும் அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும், உலக வங்கி இப்போது வெளியிட்டுள்ள அறிக்கை, இலங்கையை, குறிப்பாக வடக்கு மாகாணத்தை அச்சத்துடன் நோக்க வைத்திருக்கிறது.

இன்னும் 30 ஆண்டுகளில் 1.5 தொடக்கம் 2 பாகை செல்சியஸ் அளவுக்கு, இலங்கையில் சராசரி வெப்பநிலை அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதானது, அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது.

பொதுவாகவே, வடக்கில் முன்னரை விட சராசரி வெப்பநிலை அதிகரித்து விட்டது. வடக்கில் வாழுகின்ற இரண்டு பேர் சந்தித்துக் கொள்ளும் போது, இந்த வெயில் வெப்பத்தின் அதிகரிப்புக் குறித்து, பேசிக் கொள்வது சாதாரணமாக இருக்கிறது.

இப்போது, வடக்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வறட்சியும் வாட்டிக் கொண்டிருக்கிறது. அதனால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கால்நடைகளும் மடியத் தொடங்கி இருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வறட்சி இருந்தாலும், நிலத்தடி நீர் அதைப் பாதுகாத்து வருகிறது. ஆனால், நிலத்தடி நீர்மட்டமும் வேகமாக குறைந்து கொண்டிருக்கிறது. இப்போதுள்ள நிலையே இப்படியென்றால், இன்னும் 30 ஆண்டுகளில் ஏற்படப் போகின்ற மாற்றம், எத்தனை கொடியதாக இருக்கும் என்பதை கற்பனை செய்வது கடினமாக உள்ளது.

அடுத்த 30 ஆண்டுகளில், சராசரி வெப்பநிலை இரண்டு பாகை செல்சியஸால் அதிகரிக்கப் போகிறது என்ற செய்தி, சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடியதல்ல. வறட்சி, மழைவீழ்ச்சியின் போக்கில் ஏற்படக்கூடிய மாற்றங்களால், இலங்கையரின் சராசரி வாழ்க்கைத் தரத்தில், ஏழு சதவீத வீழ்ச்சி ஏற்படும் என்று கணித்திருக்கிறது உலக வங்கி.

தமது வருமானத்தில் 20 சதவீதம், குறைவடைந்தால், ஒட்டுமொத்த இலங்கையிலும் 5.7 சதவீதமானோர் வறுமை நிலைக்குள் தள்ளப்படும் சூழல் இருக்கின்ற நிலையில், அடுத்த 30 ஆண்டுகளில் பெருமளவானோர் வறுமைக்குள் தள்ளப்படும் அபாயம் காத்திருக்கிறது.

மாகாண மட்டத்தில், வடக்கு மாகாணத்தில், 11.2 சதவீத வாழ்க்கைத் தர வீழ்ச்சி எதிர்வு கூறப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்த இலங்கையிலும், நீர்வளம் கிடைக்கும் வாய்ப்பு 0.4 ஆக இருக்கும் நிலையில், வடக்கு மாகாணத்தில், அது வெறுமனே 0.1 ஆக மாத்திரமே உள்ளது.

இந்தக் காலநிலை மாற்றங்களால், பொருளாதார நிலை மோசமாகப் பாதிக்கப்படும் என்று அடையாளம் செய்யப்பட்டுள்ள 10 மாவட்டங்களில், வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

மிகமோசமாகப் பாதிக்கப்படக் கூடிய மாவட்டமாக, யாழ்ப்பாணம் முதலிடத்தில் இருக்கிறது. இங்கு, 12.7 சதவீத வாழ்க்கைத் தர வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாமிடத்தில் உள்ள மன்னாரில், 10.3 சதவீதமும், நான்காமிடத்தில் உள்ள கிளிநொச்சியில், 10 சதவீதமும், ஒன்பதாம், பத்தாமிடங்களில் உள்ள முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில், 8.7 சதவீத வாழ்க்கைத்தர வீழ்ச்சியும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடக்கிலுள்ள எல்லா மாவட்டங்களிலுமே, கிடைக்கக்கூடிய நீரின் அளவு 0.1 ஆகத் தான் இருக்கப் போகிறது.

இடப்பெயர்வு, போர் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில், கால நிலை மாற்றத்தால், ஏற்படக்கூடிய பொருளாதார வீழ்ச்சி, பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உலக வங்கியின் கணிப்பு.

மூன்று தசாப்த காலப் போரால், வடக்கு மாகாணம், பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதும், அந்தப் பாதிப்பில் இருந்து இன்று வரை பொருளாதார ரீதியாகவும், வாழ்க்கைத் தர ரீதியாகவும் முன்னேற முடியாத நிலை யில் முடங்கிப் போயிருக்கிறது என்பதும் அப்பட்டமான உண்மை.

**கடைசி இடம் பிடித்துள்ள வடக்கு மாகாணம்**

இலங்கை மத்திய வங்கி வெளியிடும் ஆண்டறிக்கையைப் பார்த்தால், ஒன்பது மாகாணங்களிலும், வளர்ச்சி வேகத்தில், மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பில், வாழ்க்கைத் தரத்தில் என்று எல்லாக் காரணிகளிலும், கடைசி ஒன்பதாவது இடத்தைத் தான், வடக்கு மாகாணம் இருந்து கொண்டிருக்கிறது.

போர் முடிந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாகப் போகின்ற நிலையிலும், வடக்கின் பொருளாதார நிலையை விருத்தி செய்வதற்கான உரிய திட்டங்கள் வகுக்கப்படவில்லை. முதலீடுகள், மேற்கொள்ளப்படவில்லை. போதுமான நிதியுதவிகள் வழங்கப்படவில்லை.

அதைவிட சில திட்டங்களை முன்னெடுக் கும் போது, மனித காரணிகளாலும் தடங்கல்கள் ஏற்படுகின்றன; ஏற்படுத்தப் படு கின்றன. இவற்றால், பொருளாதார ரீதியாக, வடக்கு மாகாணத்தின் நிலை படுமோசமான கட்டத்திலேயே இருக்கிறது. வடக்கில் பொருளாதார வீழ்ச்சி நிலைக்கு எல்லோரும் போரைக் காரணம் காட்டித் தப்பித்துக் கொள்வதே வழக்கமாக உள்ளது.

**சாட்டுக்களைக் கூறி தப்பிக்கொள்ளும் அரசியல்வாதிகள்**

இடப்பெயர்வு, இராணுவ நெருக்கடிகள், காணிகள் விடுவிக்கப்படாமை, போதிய நிதி வழங்கப்படாமை என்று பல்வேறு காரணிகளைத் துணைக்கு அழைத்து, தப்பித்துக் கொள்வதில் அரசியல்வாதிகள் வல்லவர்கள். இந்தக் காரணிகளை முற்றாக நிராகரித்து விட முடியாது என்றபோதும், பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இருந்து தப்பிப்பதற்கான ஓர் உத்தியாகவும் இவை பயன்படுத்தப்படுகின்றன என்பதில் சந்தேக மில்லை.

போரால் பாதிக்கப்பட்ட பொருளாதார நிலை, வாழ்க்கைத் தர நிலை உள்ளிட்ட பெரும்பாலான விடயங்களின், பின்னால் நிற்கின்ற வடக்கு மாகாணத்துக்கு, இப்போது வரப் போகின்ற சவால் மிகப் பெரியது.

அடுத்த 30 ஆண்டுகளில் வடக்கின் நீர் வளத்தை பாதுகாப்பது, பெருக்குவது, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தப்பிப்பது போன்ற விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதைப் போர்க்கால அடிப்படையில் முன்னெடுத்தால் தான், நிறைவேற்ற முடியும். ஏனென்றால், இந்த நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்ற காலம் நெருங்கி வந்து விட்டது.

தற்போதைய வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவுக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் தான், உலக வங்கியின் இந்த எச்சரிக்கை அறிக்கை வந்திருக்கிறது.

எனவே, வடக்கு மாகாணசபை இந்த விடயத்தில் அவசரமாக எந்த நடவடிக்கையையும் எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், உடனடியாகச் செயற்பட வேண்டிய கட்டாயத்தை உலக வங்கியின் இந்த அறிக்கை உணர்த்தியிருக்கிறது.

மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் என்றோ, தீர்வைத் தரும் என்றோ பொறுத்திருப்பது, காலத்தை வீணடிக்கும் செயலாகவே தெரிகிறது.

இது வடக்குக்கு வந்துள்ள மிகப் பெரிய பிரச்சினை; இதைத் தீர்ப்பதற்கு வடக்கிலுள்ளவர்களால்தான், எதைச் செய்ய முடியுமோ, அதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்வதே புத்திசாலித் தனமானது.



## தமிழர் தாயகத்துக்கு பேராபத்து!!

கிடைக்கக் கூடிய வழிகள், வசதிகள், வாய்ப்புகளை ஒன்றிணைத்து, திட்டங்களை வகுக்க வேண்டிய தேவை, வடக்கிலுள்ள தமிழ்மக்கள் அனைவருக்கும் இருக்கிறது.

இத்தகைய கட்டத்தில் அபிவிருத்தியா, உரிமைகளா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருப்பது அர்த்தமற்றது. முதலில் மண்ணையும் மக்களையும் காப்பாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம்.

இவையிரண்டும் பாதுகாக்கப்படாவிடின், 2009இல் ஏற்பட்ட நிர்க்கதி நிலையில் தான், 2050இலும் நிற்க வேண்டியிருக்கும்.

அதற்குள்ளாக, இந்தச் சந்ததியையும் அடுத்த சந்ததியையும் இயற்கையிடம் இருந்து காப்பாற்று வதற்கு முடியுமான வரை முயற்சிக்க வேண்டிய பொறுப்பு நிலைக்கு வருவது, அனைவரதும் கடப்பாடு ஆகும்.

துறைசார் வல்லுநர்களுடன் கூடி ஆராய்ந்து, பொருத்தமான திட்டங்களை உருவாக்கத் தவறினால், உலக வங்கி எச்சரித்தது போன்ற நிலைக்கு இன்னும் முப்பது ஆண்டுகளில், வடக்கு மாகாணம் முகம் கொடுக்க நேரிடலாம்.

அத்தகைய பேரழிவு ஒன்றில் இருந்து தமிழர் தாயகத்தைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுப்பதே, இன்றைய அவசியத்தேவை. இதைச் செய்யத் தவறினால், வரலாற்றுப் பழிக்கு நாமெல்லாம் இலக்காக வேண்டியிருக்கும். *









# மைத்திரியின் புளுகை மறுக்கிறார் கோட்டா!

இலங்கைப் போரின் இறுதி வாரங்களில் தமிழகத்தில் இருந்து வான்வழி மூலம் கொழும்பைத் தாக்கும் திட்டம் விடுதலைப் புலிகளுக்கு இருந்ததாக தமக்கு தகவல் கிடைத்திருந்தது என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அமெரிக்க வாழ் இலங்கையர் மத்தியில் பேசியபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதித் தருவாயில் பதவியில் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர், இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் இலங்கையில் இருக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

”போரின் இறுதி இரண்டு வாரங்களில் பதில் பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றினேன். தென் இந்தியாவின் தமிழகத்திலோ அல்லது வனப் பகுதியிலிருந்தோ விடுதலைப் புலிகள் கொழும்பு நகர் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளும் திட்டம் இருந்தமை குறித்து தகவல்கள் கிடைத்திருந்தன. அதனாலேயே முக்கியமானவர்கள் நாட்டை விட்டுச் சென்றிருந்தனர்.” என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எனினும், போரின் இறுதி வாரங்களில் விடுதலைப் புலிகள் வான் வழியாக கொழும்பைத் தாக்கும் திட்டம் குறித்து தான் அறிந்திருக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தமக்கு கிடைத்துள்ள புதுத் தகவல் எனவும், போரின் இறுதி நாள்களில் தான் வெளிநாடு சென்றிருக்கவில்லை எனவும் அவர் கூறினார்.



இதுகுறித்து பிபிசி சிங்கள சேவைக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியில் கோட்டாபய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

”நான் அறிந்திராத தகவல் ஒன்றை ஜனாதிபதி கூறியுள்ளார். உலகே அறிந்திராத தகவல் ஒன்றை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். நான் அப்படியொரு தகவலை அறிந்திருக்கவில்லை. நான் இலங்கையிலேயே இருந்தேன். நான் எங்கும் செல்லவில்லை.” என்றார் கோட்டாபய ராஜபக்ஷ.

”இலங்கையில் இராணுவத்தினர் போர்க் குற்றங்களைப் புரிந்தனர் என பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதில் பாதுகாப்பு அமைச்சராக அரசியலில் தலைமையேற்றிருந்த தினங்களில் நடந்த சம்பவங்களை அடிப்படையாக வைத்தே இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. சர்வதேசத்தின் இந்த போர்க் குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு இருக்கிறது” என்று கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

”இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க வேண்டும் என ஜெனீவாவில் யோசனை முன்வைக்கப்படுகிறது. இந்த யோசனைகளை வெளிவிவகார அமைச்சர் ஏற்றுக்கொள் கிறார். தற்போதைய ஜனாதிபதி கூறுகின்றமை போன்று இறுதிப் போரில் அவ்வாறு போர்க் குற்றங்கள் நடக்கவில்லை என்பதை ஜனாதிபதி அறிந்திருப்பதால், இந்த யோசனைகளை ஏற்க வேண்டாம் என வெளிவிவகார அமைச்சருக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.”

## நான் எங்கும் பயந்து ஓடவில்லை நாட்டிலேயே இருந்தேன் என்கிறார்

”இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் நடந்திருந்தால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். எனினும், அவ்வாறு போர்க் குற்றங்கள் நடக்கவில்லை என்பதை நான் அறிவேன்.”

போரின் இறுதித் தருணத்தில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

”போரின் இறுதித் தருணத்தில் நான் கொழும்பில் இருக்கவில்லை. நான் இருக்கும் இடத்தை அறிந்துகொள்ளக் கூடும் என்பதால் இறுதி இரண்டு வாரங்களில் நான் பல இடங்களில் மாறி மாறி இருந்தேன்.” என்று மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இந்தத் தருணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகின்றமையைப் போன்று அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததாக தெரிவித்த கருத்துக்கு பதிலளிப்பதை கோட்டாபய ராஜபக்ச நிராகரித்தார்.

முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், இராணுவத்தளபதி ஆகியோர் குறித்து ஜனாதிபதி சிறிசேன தெரிவித்த கருத்துக்கள் குறித்து கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டபோது, ”என்னைக் குறித்து மட்டுமே நான் பேசுகிறேன்” என்று பதிலளித்துள்ளார்.

போரின் இறுதித் தருவாயில் வெளிநாடு சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி இலங்கை திரும்பியிருந்தார்.

நியூயோர்க் நகரில் மேலும் கருத்து தெரிவித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ”விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்ட இராணுவச் சிப்பாய் முதல் உயர் நிலை இராணுவ அதிகாரி வரை அனைவரும் சிரேஷ்ட போர் வீரர்கள்.” என கூறியுள்ளார்.

“இலங்கையில் இராணுவத்தினர் போர்க் குற்றங்களைப் புரிந் தனர் என பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதில் பாதுகாப்பு அமைச்சராக அரசியலில் தலைமையேற்றிருந்த தினங்களில் நடந்த சம்பவங்களை அடிப்படையாக வைத்தே இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. சர்வதேசத்தின் இந்த போர்க் குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு இருக்கிறது” என்று கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டமை குறித்து தமது அரசாங்கம், எவரையும் குற்றஞ்சாட்டவில்லை எனக் கூறிய ஜனாதிபதி, எவ்வாறாயினும், போரின்போது அல்லது போரின்பின்னர் போருடன் தொடர்புபடாத பல கொலைகள் நடந்துள்ளன எனக் குறிப்பிட்டார்.

”அப்போதிருந்த முப்படைகளுடன் இருந்த தனிப்பட்ட தொடர்புகளினால் இராணுவ அதிகாரிகளைப் பயன்படுத்தியிருந்தால் அது பெரும் குற்றம்” எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இவ்வாறான சில சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் இராணுவத்தில் பணியாற்றிய சிலர் எதிராளியாகக் குறிப்பிடப்படுகின்றனர். குற்றச்சாட்டுக் களுக்கு எதிராக சட்டத்தை நடை முறைப்படுத்துவது உண்மையான இராணுவ வீரர்களுக்கு கொடுக்கப்படும் கௌரவம் என்று ஜனாதிபதி மைத்திரிபால கூறியுள்ளார்.


போரின் பின்னர் இராணுவ வீரர் என்ற பதத்தைப் பயன்படுத்தி, மேற்கொள்ளப்படும் தவறான செயல்கள் இராணுவத்தினருக்கு களங்கம் என இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க பி.பி.ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் போர்க் குற்றம் செய்யவில்லை என்பதேதனது நிலைப்பாடு எனவும், ஏதாவது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுமாயின், இதுகுறித்து விசாரிக்கப்படுவதில் எவ்வித பயமும் இல்லை எனவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

”குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுமாயின், அதுகுறித்த விசாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது எமது கடமை. அதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருந்தால் அதனை மறைப்பதற்கான தேவை இராணுவத்திற்கு இல்லை. இவ்வாறு நான் கூறக் காரணம், எந்தவொரு சம்பவம் நடக்கவில்லை என்பதை அறிந்திருப்பதால்தான்” என்றார் தற்போதைய இராணுவத்தளபதி மகேஷ் சேனாநாயக்க.

இதேவேளை, 2008ஆம் ஆண்டு 11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளில் சந்தேக நபர் ஒருவருக்கு இந்தக் குற்றங்களைச் செய்ய உதவியதாக பாதுகாப்புப் படையணியின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தனவிற்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அட்மிரல் ரவீந்திரவிற்கு எதிராக சாட்சியமளித்த கடற்படை அதிகாரி லெப்டினன் கமாண்டர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தமையும் நினைவூட்டத்தக்கது.



# ஒளிந்து கொண்ட பானை

பூங்குன்றம் கிராமத்தில் வசிக்கும் சந்திரன், பானைகள் செய்வதில் வல்லவர். அழகான பானைகளைச் செய்து, பல ஊர்களுக்கும் சென்று விற்றுவருவார்.

அன்று மண்பானைகளைச் செய்து அடுக்கி வைத்தார். பிறகு அந்த மண்பானைகளின் மீது செம்மண் கரைசலைப் பூசினார். களிமண் பானைகள் இப்போது சிவப்பு நிறத்தில் இன்னும் அழகாகப் பளபளத்தன.

அடுக்கி வைக்கப்பட்ட மண்பானைகளுள் ஒரு பானை மட்டும் அடுத்து என்ன நடக்கும் என்று யோசித்துப் பார்த்தது. ஏற்கெனவே அது மண்ணாக இருந்தபோது மற்ற மண்பானைகளுக்கு என்ன நிகழ்ந்தது என்று பார்த்திருந்தது.

சந்திரன் செம்மண் கரைசல் பூசப்பட்ட பானைகளைச் சூளையில் அடுக்கிவைத்து, நெருப்பால் சுட்டுத் துன்புறுத்துவாரே என்று நினைத்தது அந்தப் பானை.

உடனே அது தன் அருகிலிருந்த பானையிடம், நண்பரே! நம்மை உருவாக்கியவர் இன்னும் சற்று நேரத்தில் நம்மையெல்லாம் சூளையில் வைத்து, சுட்டுப் பொசுக்கிவிடுவார். நாம் மிகுந்த துன்பத்துக்கு உள்ளாவோம். அதனால் நாம் இருவரும் எங்கேயாவது ஒளிந்து கொள்ளலாமா? என்று கேட்டது.

ஆனால் அருகிலிருந்த பானையோ, நண்பரே, எல்லோரும்தான் நெருப்பில் வேகப் போகிறோம். நாம் மட்டும் ஒளிந்துகொள்வதில் நியாயம் இல்லை. நான் வரவில்லை என்று சொல்லிவிட்டது.

ஆனால் ஒளிய நினைத்த மண்பானை, தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை.

‘ஐயோ! சுடும் நெருப்பில் என் உடல் வெந்து புண்ணாகிவிடுமே. நான் நிச்சயம் ஒளிந்துகொள்ள வேண்டும்’ என்று நினைத்த பானை தன் எண்ணத்தில் உறுதியாக இருந்தது அது. உடனே சந்திரனுக்குத் தெரியாமல் மெதுவாக உருண்டு, அருகிலிருந்த மரத்தடிக்குச் சென்று ஒளித்துகொண்டது.

சற்று நேரத்தில் சந்திரன் மண் பானைகளைச் சூளையில் அடுக்கி வைத்தார். அவற்றின் மீது வைக்கோலும் விறகுகளும் வைத்து, நெருப்பை மூட்டினார். நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது.

நீண்ட நேரத்துக்குப் பிறகு நெருப்பு அணைந்து, குளிர்ந்தது. பிறகு சுட்ட பானைகளை எல்லாம் வேறோர் இடத்தில் அடுக்கிவைத்தார் சந்திரன்.

ஒளிந்துகொண்டிருந்த மண்பானை மெதுவாக எட்டிப் பார்த்தது. சந்திரனுக்குத் தெரியாமல் மெதுவாக உருண்டு வந்து மற்ற மண்பானைகளின் நடுவே அமர்ந்துகொண்டது.

சிறிது நேரத்தில் ஒருவர் பானைகள் வாங்குவதற்காக வந்தார். அவர் சந்திரனிடம், ஐயா, ரெண்டு பானைகள் வேண்டும் என்று கேட்டார்.

அங்கிருந்த இரண்டு பானைகளை எடுத்து வந்து கொடுத்து, அதற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டார் சந்திரன்.

பானைகளை வாங்கியவர் வீட்டுக்குச் சென்றார். கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் இருந்ததால், தண்ணீர் பிடித்து வைக்கவே இரண்டு மண்பானைகளை அவர் வாங்கி வந்திருந்தார்.

அந்த நேரத்தில் எதிர்பாராத விதமாகக் கார்மேகம் திரண்டு வந்தது. மழை பெய்யத் தொடங்கியது. பானைகளை வாங்கிச் சென்றவருக்கு மகிழ்ச்சி.

‘ஆஹா! பானைகளை வாங்கியவுடன் மழை பெய்கிறதே! இந்த இரண்டு பானைகளிலும் மழைத் தண்ணீரைப் பிடித்து வைத்தால் குடிப்பதற்கு ஆகுமே’ என்று நினைத்தார். மழை நீர் விழும் இடங்களில் மண்பானைகளை வைத்தார்.

பானைகளில் மழை நீர் நிரம்பத் தொடங்கியது. நெருப்பில் சுடப்பட்ட மண்பானை அப்படியே உறுதியாக இருந்தது. சுடாத மண்பானையோ தண்ணீரில் கரைய ஆரம்பித்தது.

அது அருகிலிருந்த மண்பானையைப் பார்த்து, ஐயோ! நண்பனே, நீ நன்றாக இருக்கிறாய். நான் கரைந்துகொண்டிருக்கிறேனே... ஏன்? என்று கவலையோடு கேட்டது.

உடனே சுட்ட மண்பானை, நண்பனே, நம்மை உருவாக்கியவர் எதற்காகச் சூளையில் வைத்து சுடுகிறார் என்று இப்போது புரிகிறது. நீ நெருப்புக்குப் பயந்து ஒளிந்துகொண்டாய். அதனால் நீ உறுதி குலைந்து போயிருக்கிறாய். தண்ணீரில் கரைந்து போகிறாய். நான் நெருப்புக்கு அஞ்சாமல் அதைத் தாங்கிக்கொண்டேன். அதனால் இன்று உறுதியாக இருக்கிறேன் என்று சொன்னது.

அதைக் கேட்ட பச்சை மண்பானை, யார் திடீர் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக்கொள்கிறார்களோ, அவர்கள் பின்னாளில் எதையும் தாங்கும் வலிமையைப் பெறுகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன் என்று வருந்திய குரலில் சொன்னபடியே முழுவதுமாகக் கரைந்துபோனது.



# குழந்தையின் சேட்டையை பெற்றோர் அன்பாக சமாளிக்க வேண்டும்

குழந்தைகள் செய்யும் சேட்டைகளுக்கு பெற்றோர்கள் கோபத்துடன் கத்துவது வாடிக்கை. இது குழந்தைகளுக்கு மிகப்பெரிய பாதிப்புகளை உண்டாக்குகிறது. நாங்கள் தான் குழந்தைகளை அடிக்கவில்லையே காயம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று அவர்களை எச்சரிக்கும் விதமாக, குழந்தைகளை மிரட்டுவதற்காக, அவர்களின் பாதுகாப்பிற்காக என்று எப்படி சமாதானம் சொன்னாலும் பாதிப்பு என்பது உண்மை தான். குழந்தைகளை அவர்கள் வயதிற்கு தகுந்தாற் போல எப்படி அணுக வேண்டும் என்பதற்கான சில ஆலோசனைகள் இதோ!

இந்தவயதில் குழந்தைகளுக்கு அரவணைப்பு மிகவும் அவசியம். விளையாட்டாகவோ அல்லது உங்களை அறியாமலோ குழந்தையிடம் மிரட்டும் தொனியில் கத்துவது என்பது மிகவும் ஆபத்தானது. அந்த அதிர்வை குழந்தைகளால் ஏற்றுக் கொள்வது சிரமம் என்பதால் தூக்கத்தில் அதிர்ந்து எழுந்து அழும், இதனால் குழந்தையின் தூக்கம் பாதிக்கப்படும். இதனைத் தவிர்க்க மெலிதாக அவர்களை அணுகுவதே சிறந்தது. அதற்கு விரைவாக பயன் கிடைப்பதை நீங்கள் கண்கூடாக உணரலாம்.

குழந்தைகளிடத்தில் கத்துவது என்பது அவர்களை நல்வழிப்படுத்தாது மாறாக, அவர்களின் தன்னம்பிக்கையை குலைத்து அவநம்பிக்கையை ஏற்படுத்தும். இந்த வயதில் குழந்தைகள் ஒப்பிட்டு பார்க்க ஆரம்பித்துவிடும். தன்னிடம் யார் நன்றாக பேசுகிறார்கள், எப்படி தன்னிடம் அணுகுகிறார்கள் என்று புரிந்து கொள்ள ஆரம்பிக்கும். இந்த வயதில் குழந்தைகளிடம் கத்துவது பெற்றோர் குழந்தை உறவுமுறையை பாதிக்கும். தன் எண்ணத்தை வெளிப்படுத்தாது தனிமைபடுத்திக் கொள்ள அதிகம் விரும்ப ஆரம்பித்துவிடும்.

கோபத்தை அன்பால் அணுகுங்கள், ஓடி வந்து எதையாவது சிந்திவிட்டால், ஏன் ஓடி வந்தாய்? என்று கத்தி தானே கொட்டிருச்சு வாங்க சுத்தம் பண்ணலாம் என்று அழைத்து நீங்கள் சுத்தம் செய்யும் போது உடன் வைத்துக் கொள்ளுங்கள் உங்களுக்கு இரட்டிப்பு வேலை என்று நினைப்பதை குழந்தையிடம் பக்குவமாக உணர்த்துங்கள். மெதுவா வந்தா கொட்டியிருக்காதுல்ல இனிமே வீட்டுக்குள்ள ஓடிவரக் கூடாது என்று புரியவைத்திடுங்கள்.

குழந்தைகளிடத்தில் கத்துவது எந்த அளவுக்கு ஆபத்தோ அதேயளவு குழந்தைகளிடம் பேசாமல் இருப்பதோ அல்லது அவர்களை கண்டிக்காமல் இருப்பதோ தவறு. சிறு வயதில் அதிக செல்லத்துடன் அவர்களை அணுகினால் வளர்ந்த பின்பும், தவறுகள் செய்யும் போதும் அதே செல்லத்துடன் தன்னை அணுக வேண்டும் என்று விரும்புவர் அது பொய்க்கும் போது மனரீதியாக பெரிதும் பாதிக்கப்படுவர். அதனால் அன்பாக திருத்துங்கள். கடிந்து, கத்தாமல் அரவணைத்து தவறை உணர்த்துங்கள்.

# இது எந்த நாடு?







கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள இந்த நாடு யுகோஸ்லாவியாவிடமிருந்து 1991 இல் பிரிந்து சுதந்திரம் பெற்றது. ரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்ற ஒரே ஐரோப்பிய நாடு.
2. ஐரோப்பிய கண்டத்திலேயே மிகப் பழமையான பெயர் கொண்ட நாடு.
3. ஐ.நா.சபையில் 1993 இல் உறுப்பினரானது.
4. இதன் தலைநகர் ஸ்கோஜி
5. மகா அலெக்சாண்டரின் நாடு.
6. உலகின் நான்காவது மிகப் பழமையான வானியல் கண்காணிப்பகம் இங்கே இருக்கிறது.
7. இங்கே 50 ஏரிகளும் 16 மிக உயர்ந்த மலைச் சிகரங்களும் இருக்கின்றன.
8. அன்னை தெரசா பிறந்த நாடு.
9. அரிசி, கோதுமை, சோளம் முக்கிய விளைபொருள்கள்.
10. குக்லிகா கிராமத்தில் இருக்கும் ‘ஸ்டோன் டவுன்’ புகழ்பெற்றது. இங்கே 120 இற்கும் மேற்பட்ட இயற்கையாக உருவான கல் தூண்கள் காணப்படுகின்றன.

**விடை: மாசிடோனியா**



மீன், நண்டு, நத்தை எனத் தண்ணீருக்கு வெளியே தவித்துக் கொண்டு இருக்கின்றன. சரியான இடத்துல பொருந்துங்க!

காலைக்கதிர் Kalaikkathir



# நினைவாற்றலை மனச்சாட்சிக்கும் நீதியுரைப்பவருக்கும் ஒப்பிட்ட சோவியத் தமிழ் அறிஞர் கலாநிதி விதாலி ஃபூர்னிக்கா

## காலமும் 11 கணங்களும்

- முருகபூபதி - ஆஸ்திரேலியா -



இலங்கையில்பாரதி நூற்றாண்டு விழாக்கள் நாடு தழுவிய ரீதியில் நடந்தபொழுது 83 ஜனவரியில் தமிழகத்திலிருந்து வருகைதந்த மூத்த படைப்பாளியும் பாரதி இயல் ஆய்வாளருமான எனது தாத்தா தொ.மு. சி ரகுநாதன் (அப்பாவின் வழியில் உறவினர்) எனக்காக இரண்டு பெறுமதியான நூல்களை கொண்டு வந்து தந்தார்.

ஒன்று அவர் எழுதிய அவரது நெருங்கிய நண்பர் புதுமைப்பித்தன் வரலாறு. மற்றது மகாகவி பாரதி பற்றி சோவியத் அறிஞர்கள் என்ற நூல்.

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு சோவியத்விஞ்ஞானிகள்,கவிஞர்கள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் இணைந்த ஒரு குழு நூற்றாண்டை சோவியத்தில் கொண்டாடுவதற்காக மாஸ்கோவில் அமைக்கப்பட்டது.

அந்தக்குழுவில் இணைந்திருந்த சோவியத் அறிஞர்கள் செர்கி ஏ. பரூஜ்தீன், பேராசிரியர், இ.பி. செலிஷேவ், கலாநிதி எம்.எஸ். ஆந்திரனோவ்,கலாநிதி விளாதீமிர் ஏ. மகரெங்கோ, கலாநிதி வித்தாலி பெத்ரோவிச் ஃபூர்னிக்கா, கலாநிதி எல். புச்சிக்கினா (பெண்), கலாநிதி செம்யோன் கொ்மனோவிச்



ருதின் (இவரது தமிழ்ப்புனைபெயர் செம்பியன்) கலாநிதி அலெக்சாந்தர், எம். துபியான்ஸ்கி, திருமதி இரினா என். ஸ்மிர்னோவா ஆகியோரின் பெறுமதியான கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றி ருந்தன.

அந்த நூல் பெறுமதியானது எனக் குறிப்பிடுவதற்குக்காரணம் இருக்கிறது.

தமிழ்நாட்டில் எட்டயபுரம் என்ற கிராமத்தில் சுப்பையாவாகப் பிறந்து சென்னையில் திருவல்லிக்கேணியில் மகாகவியாக மறைந்தவர் குறித்து அன்னாரது இறுதி ஊர்வலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே கலந்துகொண்ட அக்காலத்தில் , அந்த உலக மகாகவியின் பெருமை பற்றித் தெரிந்திராத தமிழ் உலகத்திற்கு ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் கடல் கடந்து வாழ்ந்தவர்கள் அந்த நூற்றாண்டு வேளையில் ஆய்வு செய்து எழுதியமைதான் அந்தப்பெறுமதி.

## இலங்கை – இந்தியா –சோவியத் மத்தியில் இலக்கியப்பாலம் அமைத்த படைப்பாளி

குறிப்பிட்ட தொகுப்பில் எனது கண்ணில் பட்ட முக்கியமான பெயர் வித்தாலி ஃபூர்னிக்கா. அதற்கும் ஒரு முக்கிய காரணம் இருந்தது. இவர் தமிழக படைப்பாளிகளுடன் மட்டுமல்ல, ஈழத்து இலக்கியவாதிகள் சிலருடனும் கடிதத்தொடர்பில் இருந்தவர்.

இவர் மல்லிகை ஜீவாவுக்கு எழுதியிருந்த கடிதம் ஒன்றையும் பார்த்திருக்கின்றேன். எதிர்பாராதவிதமாக எனக்கு 1985இல் மாஸ்கோவில் நடந்த சர்வதேச இளைஞர் –மாணவர்விழாவுக்குச்செல்வதற்கு அழைப்பு கிடைத்தவுடன், ருஷ்ய மொழி தெரியாத நாட்டில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் கற்றுக்கொண்டிருந்தாலும், இலக்கியம் பேசக்கூடியவர் யார் இருப்பார்...? என்ற யோசனை வந்தது. உடனே யாழ்ப்பாணத்திலிருந்த மல்லிகை ஜீவாவுடன் தொடர்பு கொண்டு ஃபூர்னிக்காவின் முகவரியைக் கேட்டேன். அவர், மாஸ்கோ ராதுகா பதிப்பகத்தின் முகவரியைத் தந்தார்.

ஃபூர்னிக்கா அங்குதான் பணியிலிருக்கிறார் என்ற தகவலையும் சொன்னார். உடனே அவசரமாக ஃபூர்னிக்காவுக்கு எனது வருகை பற்றி கடிதம் எழுதினேன்.

மாஸ்கோவுக்கு சென்றதும் நாம் தங்கியிருந்த இஸ்மயிலோவா ஹோட்டலுக்கு சில இலங்கைத் தமிழ் மாணவர்கள் எம்மைத் தேடிக்கொண்டு வந்தனர். அவர்களில் ஒருவர் ஈழத்து மஹாகவி உருத்திரமூர்த்தியின் மூத்த மகன் பாண்டியன். (கவிஞர் சேரனின் அண்ணன்) இவருக்கும் ஃபூர்னிக்காவை தெரிந்திருந்தது. அவரே என்னை ராதுகா பதிப்பகத்திற்கு அழைத்துச்சென்றார்.

எங்கள் அன்புக்குப் பாத்திரமான சோவியத் எழுத்தாளரும் தமிழ் இலக்கியத்தின் மீது அளவற்ற அக்கறையும் தமிழ் இலக்கியவாதிகளிடத்தே ஆத்மார்த்தமான நேசிப்பும் கொண்ட விதாலி ஃபூர்னீக்கா நினைவில் கலந்துவிட்ட அற்புதமான மனிதர்.

ஃபூர்னீக்கா, சோவியத் நாட்டில் உக்ரேயன் மாநிலத்தில் 940 இல் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். தமது 25 வயது வாலிபப் பருவத்தில் லெனின்கிராட் நகரில் கட்டடத் தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருந்த சமயம், ஒரு நாள் புத்தகக் கடையொன்றுக்குப் போயிருக்கிறார்.

அங்கே ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்ட இந்திய தமிழ் கவிஞரின் கவிதை நூல் அவர் கண்களுக்கு எதிர்பாராத விதமாக தென்படுகிறது.

அக்கவிதைகளின் ஆசான் எங்கள் மகாகவி பாரதிதான். அந்தச் சர்வதேச கவியின் சிந்தனைகளும் சர்வதேச வியாபகமாக உருப்பெற்ற கருத்துக்களும் இந்தத்தொழிலாளியை பெரிதும் கவர்ந்து விடுகிறது.

வாழ்வுக்கு வருமானம் தந்துகொண்டிருந்த தொழிலை உதறிவிட்டு, லெனின் கிராட் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவில் மாணவராகச் சேர்ந்துவிடுகிறார் விதாலி ஃபூர்னீக்கா.

அன்று முதல், அதாவது 1965 ஆம் ஆண்டு முதல் தமது மறைவு வரையிலும் தமிழையும் தமது உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.

இலக்கிய வட்டாரத்தில் பிரசித்தமான ஃபூர்னிக்காவை தமிழ் மக்களில் எத்தனை பேர் அறிந்துள்ளார்கள்...? எனவே இங்கு அவருக்கு சிறிது அறிமுகம் அவசியம் எனக் கருதுகின்றேன்.

இந்த அறிமுகப்படுத்தல் அவருக்கு பெருமைசேர்ப்பதாகவும் 'உணர்ச்சி' நிலையிலேயே 'தமிழ்க்கோஷம்' போட்டுக்கொண்டு அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தவறிப்போகின்றவர்கள் கண்டு கொள்ளத் தவறிய அந்த மாமனிதரின் தமிழ்ப்பணியை நினைவு படுத்துவதாகவுமே அமைகிறது.

ஒரு விவசாய பாட்டாளி வர்க்கப் பிரதிநிதி. (இவரது பெற்றோர் உருளைக்கிழங்கு பயிரிடும் பண்ணையில் தொழிலாளர்கள்) மகாகவி பாரதியின் சிந்தனைகளாலும் செழுமையான கவித்துவத்தினாலும் ஆகர்சிக்கப்பட்டு தமிழைப் பயின்று தமிழ், கலை, இலக்கியங்களையும் படைப்பாளிகளையும், தமிழ் பேசும் மக்களையும் தேடி அலைந்து, தனது தீராத தமிழ்த் தாகத்தைத் தணித்துக் கொள்ள வாழ்நாளில் கால் நூற்றாண்டுக்கும் மேல் பெரும்பகுதி நேரத்தை செலவிட்ட இந்த சோவியத் அறிஞரின் சேவை காலத்தில் பதிவு செய்யப்படவேண்டியது.

'செம்பியன்' என தமிழ் இலக்கிய வட்டாரத்தில் அறியப்பட்ட சோவியத் அறிஞர் கலாநிதி செம்யோன் நுதின் அவர்களிடம் 1965 இல் பயிற்சி பெறத் தொடங்கிய ஃபூர்னிக்கா, பின்னர் தமிழகம் வந்து


## மகாகவி பாரதியால் கவரப்பட்டு தமிழகம் சென்று தமிழக பித்தனாகிய கட்டடத் தொழிலாளியின் வாழ்வும் பணிகளும்

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் அறிஞர் டாக்டர் மு.வரதராசனிடம் பயின்றார்.

'தமிழகப்பித்தன்' எனப் புனைபெயரும் வைத்துக்கொண்டார்.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் அனுசரணையில் இயங்கிய மாஸ்கோ Oriental Institute இல் கலாநிதி பட்டம் பெற்றார். தமது கலாநிதிப் பட்டத்தின் ஆய்வுக்காக 'தற்காலத் தமிழ் இலக்கியம், ஜெயகாந்தனின் படைப்பிலக்கியம் முதலானவற்றைத் தேர்ந்தெடுத்தார். இவர் எழுதிய நூற்றுக்கணக்கான கட்டுரைகள் தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு, கலாசாரம் சார்ந்ததாகவே அமைந்தன.

சோவியத் மக்களுக்கு தமிழ் மக்களையும் அவர்தம் கலை, இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் சிறப்பாக அறிமுகப்படுத்தியவர்க




ளின் வரிசையில் ஃபூர்னிக்கா பிரதான இடத்தை வகிக்கின்றார்.

பாரதி நூற்றாண்டு கொண்டாடப்பட்ட வேளையில் சோவியத் குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார்.

ஈழத்து இலக்கியம் தொடர்பாகவும் ஆராய்ந்து பல ஈழத்து எழுத்தாளர்களைப் பற்றியும் எழுதினார். ஈழத்து படைப்பிலக்கியங் கள் பலவற்றை ருஷ்ய மொழியில் பெயர்த் தவரும் இவர்தான். தமிழகத்திலும் ஈழத்திலும் இவரது நண்பர்கள் பெரும்பாலும் இலக்கியவாதிகளாகவும் பத்திரிகையாளர்களாகவும் மொழிபெயர்ப்பாளர்களாகவும் திகழ்கின்றனர்.

தமிழகத்தில் ஊர் ஊராகச் சுற்றி அலைந்து தகவல்கள் திரட்டி தமிழரின் தொன்மை, நாகரிகம், நம்பிக்கை, சடங்குகள், மரபுவழிச் சம்பிரதாயங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து ருஷ்ய மொழியில் அரிய நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார்.

மாஸ்கோவில் இறங்கியவுடனேயே நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட முதல் அன்பர் ஃபூர்னிக்கா அவர்கள்தான். புறப்படுவதற்கு முன்பே நான் அவருக்கு அனுப்பியிருந்த கடிதமும் அவர்வசம் கிடைத்திருந்தது.

ராதுகா என்ற ருஷ்ய மொழி வானவில் என்று அர்த்தம். எனக்கு இதனைச் சொல்லித் தந்தவரும் ஃபுனிர்க்காதான்.

பல சோவியத் இலக்கியங்களை தமிழில் நாம் படிப்பதற்கு இந்தப் பதிப்பகம்தான் காரணம். சிறந்த முறையில் அச்சிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட பல நூல்களை இந்த வானவில் எமக்கு வழங்கியுள்ளது. கொழும்பில் மக்கள் பிரசுராலயத்திலும் சோவியத் தூதரக தகவல் பிரிவிலும் பெற்று படித்திருக்கிறேன்.

மாஸ்கோ வீதிகள் எனக்கு அறிமுகமில்லாதவை. மொழியும் ஒரு பிரச்சினை. எமக்கு வழிகாட்டித் துணையாக நியமிக்கப் பட்டவர்களின் உதவியை நாடியிருக்கலாம். எனினும் ஃபூர்னிக்காவைச் சந்திக்க வழித் துணையாக மஹாகவி உருத்திரமூர்த்தியின் மூத்த புதல்வர் பாண்டியன் உடன்வந்தார்.

இந்த முதல் சந்திப்பு பற்றி ஏற்கனவே, எனது சமதர்ம பூங்காவில் நூலில் குறிப்பிட் டுள்ளேன். அந்த முதல் சந்திப்பு எமக்கிடையே ஏற்படுத்திய அறிமுகம் பின்னாளில் பலன் மிக்கதாய் அமைந்தது குறித்து இன்றும் ஆனந்தமடைகின்றேன்.

இந்த நினைவுக் குறிப்புகளைப் படிப்பதற்கும் படித்துவிட்டு பதில் எழுதுவதற்கும் இன்று எங்கள் ஃபூர்னிக்கா இல்லையே என உணரும்பொழுது சோகம் மனதை அழுத்துகிறது. நினைவுகள் சாசுவதமான வை.

ஆங்கிலத்தில் தான் எழுதிவைத்திருந்த நினைவுக் (டயறிக்) குறிப்புகளை அடியொற்றி ஜெயகாந்தன் எழுதிய நூல்தான் நட்பில் பூத்த மலர்கள். ஜெயகாந்தன் இந்த நூலின் முன்னுரையை இவ்வாறு தொடங்குகிறார்:

இந்த நூலின் மெய்யான ஆசிரியர் திரு. வித்தாலி புர்னிக்கா அவர்களே ஆவார். அவரது குறிப்புகளையும் அனுபவங்களையும் அவரோடு எனக்கு நேர்ந்த சந்திப்புகளையும் சம்பாணைகளையும் ஆதாரமாய்க் கொண்டு இதைத் தமிழில் கொடுத்திருப்பதே நான் செய்த பணி.

நினைவுகள் தொடர்பாக ஃபூர்னிக்கா தமது டயறியில் குறித்திருந்ததை அவரது அருமை வாசகர்கள் அறிந்திருக்கலாம். மீண்டும் இங்கு அந்த டயறிக்குறிப்பை காரணத்தோடு தருகின்றேன்.

**ஃபூர்னிக்கா எழுதுகிறார்**

மனிதனின் நினைவாற்றல் மகத்தான சிறப்புமிக்கது. நினைவாற்றல் என்பது முடிவற்றது. அது அப்படித்தான். எப்படிப் பார்த்தாலும் நினைவாற்றலுக்கு இணையான இன்னொரு பண்பை மனிதனிடம் என்னால் இனங்காண முடியவில்லை.

நினைவாற்றல் என்பது மிகக் கடுமையான நீதிபதி அதுவே நம் மனச்சாட்சி. நம்மோடு எப்போதும் உடனிருக்கும் நண்பன். நம்மைப் பாதுகாக்கிற தாய் – நம்மைப் பெருமைப்படுத்துகிற தந்தை எல்லாம் நினைவாற்றல்தான் (நட்பில் பூத்த மலர்கள் –ஜெயகாந்தன் – பக்கம் – 5)

ஆம்! ஃபூர்னிக்கா குறிப்பிட்டதைப் போன்றே அவரது நினைவாற்றலும் உன்னதமானதுதான் என்று என்னால் நிதானிக்க முடிகிறது. ஃபூர்னிக்காவின் தாயகம் உக்ரேய்ன் தாய் மொழியும் அதுவே. தமிழுக்குப் பாரதி – வங்கத்திற்கு தாகூர் என்றால் உக்ரேயினுக்கு தராஷ் செவ்ஷென்கோவ் என்ற மகாகவி.

நான் மோஸ்கோவில் ஃபூர்னிக்காவை சந்தித்த காலப்பகுதியில் அந்த உக்ரேய்ன் மகாகவியின் 125ஆம் வருட நினைவு நாள் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பூர்வாங்க வேலைகளில் அவர் ஈடுபட்டிருந்தார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



## உலகின் மோசமான கொலைகாரி

# எலிசபெத் பத்தோரி; ஹங்கேரியின் அரக்கி!


உலக வரலாற்றில் கொடுங்கோலர்களுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. நமக்கு தெரிந்தவர்கள் எல்லாம் ஹிட்லர், இடியமின், முசோலினி, செங்கிஸ்க்கான் போன்ற சிலர் மட்டுமே. ஆனால் அவர்களை விடவும் அவர்களை விட அதிக கொடுமைகள் புரிந்த பல கொடுங்கோலர் களும் வரலாற்றில் இருக்கத்தான் செய்கின்றனர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இது போன்ற கொடுஞ்செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது உங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தலாம்.

ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த பெண்க ளும் பல கொடுஞ் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். பணம் இருந்தால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்பது இப்பொழுது மட்டுமல்ல கடந்த காலத்திலும் இருந்திருக்கிறது.

650 இளம் பெண்களை கொன்று அவர்களின் இரத்தத்தில் குளித்த ஒரு அரக்க பெண்ணை பற்றித்தான் இந்த பதிவில் நீங்கள் சந்திக்கப்போகிறீர்கள்.

**எலிசபெத் பத்தோரி**

16 ஆம் நூற்றாண்டின் இறுதிகளில் ஹங்கேரியில் வாழ்ந்தவர்தான் இந்த எலிசபெத் பத்தோரி. கின்னஸ் புத்தகத்தின் படி இன்று வரை உலகின் அதிக கொலை செய்த பெண் என்னும் பெயர் இவருக்குத்தான் உள்ளது. இவர் கிட்டத்தட்ட 650 பெண்களை கொலை செய்துள்ளனர் என நம்பப்படுகிறது.





ட்ராகுலா என்னும் கற்பனை கதாபாத்திரத்தை போல பெண்களின் இரத்தத்தில் குளித்தால் இளமையாகவும், கவர்ச்சியாகவும் இருக்கலாமென நினைத்து பெண்களைச் சித்திரவதை செய்து அதில் மகிழ்ச்சி அடைந்த அரக்கி தான் எலிசபெத் பத்தோரி.

**குழந்தை பருவம்**

குழந்தை பருவம் முதலே எலிசபெத் கொடூரமான காட்சி களை பார்த்தபடியே வளர்ந்தார். அவரும் பல கொடூர சம்பவங்களில் ஈடுபட்டார். ஆனால் அதற்காக அவர் என்றும் தண்டிக்கப்பட்டதே இல்லை. மேலும் சிறு வயதிலேயே பல கொடுமைகளையும் அனுபவித்தார் எலிசபெத். ஒரு குதிரையின் வயிற்றை



கிழித்து அதற்குள் ஒரு குற்றவாளியை வைத்து தைத்து குதிரையும், குற்றவாளியும் இறக்கும் வரை அந்தக் காட்சிகளை அனைவரும் பார்ப்பார்கள்.

இதுபோன்ற பல சம்பவங்கள் எலிசபெத்தின் குழந்தைப்பருவத்தில் நடந்தது. 13 வயதில் குழந்தை தன் காதலன் மூலம் 13 வயதிலேயே குழந்தை பெற்றுக் கொண்ட எலிசபெத் 15 வயதை அடைவதற்கு முன்பே பெரேக் நடாஸ்டி என்னும் இளவரசனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். தன் மனைவியின் கடந்த காலத்தை அறிந்து கொண்ட பெரேக் அவரை கொடுமைப்படுத்தினார். மேலும் தன்னிடம் இருந்த கைதிகளையும் சித்திரவதை செய்தார்.

அவர்களின் விரல்களுக்கு இடையே காகிதத்தை வைத்து அதில் நெருப்பு வைத்து அதை பார்த்து மகிழ்ச்சி அடையும் கொடூரனாக பேரெக் இருந்தான். கன்னிப் பெண்களின் இரத்தத்தில் குளியல் கொலைகள் செய்ய ஆரம்பித்த காலத்தில் எலிசபெத் தன்னிடம் சிக்கும் பெண்களை கடித்து அவர்களின் இரத்தத்தை குடித் தார் எனக் கூறப்படுகிறது. இதற்கு காரணம் அவருக்கு மிகவும் பிடித்த டிராகுலா கதாபாத்திரம்தான்.

கொலைகார வாழ்க்கை தொடங்கிய பின் கன்னிப் பெண்களை சித்திரவதை செய்து அதை கண்டு மகிழ்ச்சி அடையவும், அவர்களின் இரத்தத்தில் குளிக்கும் பழக்கத்தையும் கொண்டார் எலிசபெத். இதனால் தான் எப்பொழுதும் இளமையாக இருக்கலாம் என்று நம்பினார். இது உண்மையா என்ற சந்தேகம் பலருக்கும் இன்றும் இருக்கிறது.

**பெண்களை உறைய வைத்தல், நெருப்பு மூட்டுதல்**

கொடூரமான ஒருவனை திருமணம் செய்துகொண்ட பின் எலிசபெத் சித்திரவதை செய்வதில் பல புதிய முறைகளை அறிந்துகொண்டார். பெண்களை கூண்டில் அடைத்து அவர்களை பனிக்கட்டியில் வீசி அவர்கள் உறைந்து இறக்கும் வரை பார்த்து ரசித்தார். அதேபோல தன் பணிப்பெண்கள் கைகளில் நெருப்பு வைத்தல், அவர்களின் முகத்தில் நெருப்பு பந்தை எறிதல் போன்ற கொடூர செயல்களின் மூலம் எல்லையற்ற ஆனந்தம் அடைந்ததாக வரலாறு கூறுகிறது.

**தேனீக்களை வைத்து சித்திரவதை**

தன் கணவரின் அறிவுரைப் படி பெண்களின் மீது தேனை ஊற்றி அவர்களை தேனீக்கள் மற்றும் மற்ற பூச்சிகளை விட்டு கடிக்கவைத்தார்.

இரண்டு கொடூரர்களும் இணைந்து பல கொடுமைகளை செய்தனர். போர் முனையில் இருக்கும்போது கூட பேரெக் தவிர்ந்த தன் மனைவிக்கு எப்படி கொடுமை செய்வது என்று கடிதம் எழுதுவானாம் .

**நரமாமிசம்**

எலிசபெத் செய்த கொடுமைகள் மற்றும் சித்திரவதைகளை முழுமையாக கூற இயலாது. ஏனெனில் அதில் அவ்வளவு கொடூரமும், வக்கிரமும் இருந்தன. அவரின் சித்திரவதைகளில் முக்கியமான ஒன்று நரமாமிசம் தின் னும்படி கைதிகளை கொடுமை செய்தது. கணவரின் மறைவு தன் கணவரின் அறிவுரைகளையும் தாண்டி எலிசபெத்தானாகவே பல சித்திரவதை முறைகளை கண்டறிந்தார். அவற்றையெல்லாம் தன் பணிப்பெண்கள் மீது பரிசோதிப்பார்.

அவரின் பணியாளர்கள் யாரும் கோட்டையிலிருந்து தப்பிக்காதவண்ணம் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது.

மேலும் இரவு நேரத்தில் அவர்கள் அனைவரும் கட்டிவைக்கப்படுவார்கள். 1604 ஆம் ஆண்டு கணவரின் மரணத்திற்கு பிறகு எலிசபெத் மிகவும் மோசமாக மாறினார். பெண்களை ஊசியை வைத்து குத்துவது, அவர்களின் மார்பகங்களை வெட்டுவது போன்ற கொடுஞ்செயல்களில் ஈடுபடத் தொடங்கினார்.



கவுன்டஸ் எலிசபெத் 'பிளட் கவுன்டஸ்' என்ற புனைபெயர் கொண்டு அழைக்கப்படுகிறார். பெயருக்கேற்றாற்போல் எலிசபெத்திற்கு காமத்திலும் அதிக நாட்டம் இருந்தது.

தன் காதலன், கணவன் மட்டுமின்றி பல ஆண்களுடன் தொடர்பில் இருந்தார். படுக்கையில் ஆண்களை வெற்றிகொள்வதே பெருமை என்ற நினைப்பில் வாழ்ந்து வந்தார். தன் கணவர் இறந்த பல ஆண்டுகளுக்கு பின்னரும் எலிசபெத் தன் சித்திரவதைகளை தொடர்ந்தார். தன் அரண்மனைக்கு வேலைக்கு வரும் பெண்களை தொடர்ந்து சித்திரவதை செய்து கொன்றுகொண்டிருந்தார்.

இதனை அறிந்த ஊர்மக்கள் தங்கள் மகள்களை கோட்டைக்கு அனுப்புவதை நிறுத்தினர். மேலும் மக்கள் எலிசபெத்திற்கு எதிராக போராட்டம் செய்யவும் தொடங்கினர். தன்னை புகழ்ந்து பாடாத ஒரு புகழ்பெற்ற பாடகியை எலிசபெத் கோட்டைக்கு வரவைத்து கொன்றுவிட்டார். இந்தச் செய்து காட்டுத்தீ போல பரவியது. மக்களின் தொடர் போராட்டத்தை அடுத்து எலிசபெத்தின் கொலைகள் குறித்து ஹங் கேரியின் மன்னருக்கு தெரிய வந்தது. இருப்பினும் அவரின் பணபலத்தை நினைத்து அஞ்சிய அரசர் எலிசபெத்தை விசாரிக்க ஒருவரை அரசாங்கம் சார்பாக நியமித்தார்.

எலிசபெத் இப்பொழுது ஒரு விதவையாக இருக்கின்றமையால் இப்பொழுது அவருக்கு மரணதண்டனை வழங்கினால் அவரின் செல்வம் யாவும் அரசாங்கத்திற்கு வந்துவிடும், அதை வைத்து அரசாங்கத்தின் கடன்களை அடைத்துவிடலாம் என்று எண்ணினார்கள்.

துர்சோ பத்தோரி என்பவர் எலிசபெத்தை காப்பாற்ற எண்ணினார். அதன் விளைவாக எலிசபெத் விசாரணையிலிருந்து தப்பினார். ஆனால் அவரின் கூட்டாளிகள் மாட்டிக்கொண்டனர்.

**650 கன்னிப் பெண்களைக் கொன்று அவர்களின் இரத்ததில் குளித்த பெண்!!**

**எலிச பெத்தின் மறைவு**

1610 இல் துர்சோ எலிசபெத்திற்கு எதிரான ஆதாரங்களைதிரட்ட தொடங்கினார். அவரின் கோட்டைக்குள் இருந்து பல அடையாளம் தெரியாத பிணங்கள் கண்டறியப்பட்டன. அதன்பின் விசாரணை வேகமாகத் தொடங்கியது. எலிசபெத் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, அதற்கு பதிலாக அவரின் கூட்டா ளிகள் குற்றங்களை ஒப்புக்கொள்ளும்படி சித்திரவதை செய்யப்பட்டனர். எலிசபெத்தின் குற்றங்கள் மறுக்கப்பட்டன. இறுதியாக எலிசபெத்திற்கு மரண தண்டனை வழங்காமல் ஸ்லோவாக்கியாவில் இருந்த அவரது குடும்ப அரண்மனையில் சிறைவைக்கப்பட்டார். அதன்பின் மூன்று ஆண்டுகள் மட்டுமே எலிசபெத் உயிர் வாழ்ந்தார். 1614 இல் அவர் உயிர் பிரிந்தது.

எலிசபெத் மொத்தம் எத்தனை பேரை கொன்றார் என்பது இன்றும் பலருக்கும் தெரியாத ஒன்று. அவர் வாழ்ந்த, மணம் முடித்த, மற்றும் சிறை வைக்கப்பட்டு இறந்த கோட்டை இன்றும் ஸ்லோவாக்கியாவில் இருக்கிறது. வரலாற்றின் மிகப் பெரிய தொடர் கொலை காரியான எலிசபெத் பத்தோரியின் வாழ்க்கை அனைவரையும் மிரளவைக்கும் ஒன்றாகும். *



# இணைய தளம்: நன்மைகள் சில! தீமைகளோ ஏராளம்!!

**சரியோ, தப்போ எப்படி மனிதர்கள் போதைக்கு அடிமையானார்களோ அதே போல் இன்றைய பெண்கள் இணைய தளத்துக்கு அடிமையாகி விட்டார்கள்.**

இன்றைய மனித வாழ்க்கையில், பெரியவர்கள், இளைஞர்கள், மாணவ, மாணவிகள் என எல்லோருடைய பொன்னான நேரத்தை மொத்த குத்தகைக்கு எடுத்திருப்பது இணைய தளம் என்ற இந்த அறிவியல் கண்டுபிடிப்பு தான்.

அதன் விளைவு நம் சமுதாயத்தில் எப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டிய காலக் கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

பத்திரிகைகள் மிகச் சிறந்த ஊடகம். அரசியலில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த கூடிய சக்தி வாய்ந்தவை. பத்திரிகைகளுக்கு எல்லா ஊர்களிலும் நிருபர்கள் இருப்பார்கள். அவர்கள் சேகரித்துக் கொடுக்கும் செய்திகளை நன்கு ஆய்வு செய்து, அதை வெளியிட்டால் சமுதாயத்தில் எந்த மாதிரி பாதிப்புகள் ஏற்படலாம் என்பதை எல்லாம் யோசித்து, படிப்பும் உலக அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் வெளியிடுவார்கள். அப்படித்தான் நல்ல செய்தியோ அல்லது கெட்ட செய்தியோ பத்திரிகைகளில் வெளிவரும்.

அதனால் அவை சமுதாயத்தில் தேவைக்கு அதிகமான விளைவுகளை ஏற்படுத்தி விடாது. நியாயமான விளைவுகளைத் தான் ஏற்படுத்தும்.

இணைய தளம் வந்த பிறகு மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டு விட்டது. ஒரு விலை உயர்ந்த இணையதள வசதி உள்ள செல்போனை பயன்படுத்த தெரிந்தால் போதும்! படிப்பு, அறிவு, அனுபவம் எதுவுமே வேண்டாம். எல்லோருமே பத்திரிகை ஆசிரியர்கள் மட்டுமல்ல, என்ஜினீயர்கள், டாக்டர்கள் தான். கண்ணதாசன்கள், ஜெயகாந்தன்கள் தான்!

தமிழில் எழுத்துகள் தெரிந்தால் போதும், எல்லோரும் மேதைகள் தான்.

## போதைக்கு அடிமையானவர்கள் போன்று பெண்களும் ‘இணைய் போதையில்!

வல்லினம், இடையினம் தெரியாத, உயர்நிலை பள்ளி கூட தாண்டாத இந்த மேதைகள் பல அவதாரம் எடுத்து,



இணைய தளத்தில் போடும் பதிவுகள் கோடிக் கணக்கான இளைஞர்களின் கைகளில் இருக்கும் செல்போன்களுக்கு பல ரூபங்களில் போய் சேருகிறது.

பத்திரிகை செய்திகள் கூட குறிப்பிட்ட நேரத்தில் தான் வரும். இவர்கள் போடும் பதிவுகள் 24 மணி நேரமும் வந்து கொண்டே இருக்கின்றன.

8ஆம் வகுப்பு படித்த டொக்டர், 5ஆம் வகுப்பை தாண்டாத என்ஜினீயர்கள் போடும் பதிவுகளை எல்லாம் உண்மை என்று நம்பி செயல்படும் மக்கள் நம்மிடம் நிறைய இருக்கிறார்கள். ஒழுங்காக கையெழுத்துக் கூடப் போடத் தெரியாதவன் சொல்வதை எல்லாம் எய்ம்ஸ் மருத்துவமனை டாக்டர்கள் சொல்வதாக நினைத்துக் கொண்டு அந்த வைத்தியத்தை செய்து பார்க்கும் மக்கள் அதிகரித்துக்கொண்டு இருக்கிறார்கள். உதாரணம், வீட்டிலேயே ஆண் பிரசவம் பார்த்தது.

ஒவ்வொரு இளைஞனுக்கும் எதிர் வீட்டில் இருக்கும் இளைஞனோடு நட்பு பாராட்ட நேரம் இல்லை. ஆயிரம் மைல்களுக்கு அப்பால் கண்ணால் ஒரு முறை கூட பார்க்காத நல்லவர்களா? கெட்டவர்களா? என்று தெரியாத நண்பர்கள் தான் பல நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். இதில் ஆண் – பெண் நட்புகள் ஏராளம். இதனால் பல பெண்கள் வாழ்க்கை நாசமாவது தாராளம்.

தெருவில் நடப்பதைப் பார்ப்பது, கண்ட புத்தகங்களைப் படிப்பது, பிறர் சொல்வதை கேட்பது இவைகளால் மட்டும் யாரும் டாக்டரோ, என்ஜினீயரோ ஆகி விட முடியாது.



இணையதளத்தில் வரும் பதிவுகளில் 90 சதவீதம் அபத்தம். இந்த அபத்தங்களை உண்மை என்று நம்பி அதை ஆதரித்து பதிவிடுபவர்கள் 50 சதவீதம் பேர் இருக்கிறார்கள். இதனால் சமுதாயத்தில் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது.

சரியோ, தப்போ எப்படி மனிதர்கள் போதைக்குஅடிமையானார்களோ அதே போல் இன்றைய இளைஞர்கள் இணையதளத்துக்கு அடிமையாகி விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் போதைக்கு அடிமையானவர்களால், அவர்களின் குடும்பம் மட்டுமே கெடும். ஆனால் இந்த இணையதள போதையர்கள் அவர்களை மட்டும் கெடுத்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு எதிர்படும், அவர்களுக்கு எந்தவிதத்திலும் தொடர்பில்லாத பலர் வாழ்க்கை வீணாகி விடுகிறது.

இணையதளத்தில் நன்மை இல்லையா என்று கேட்கலாம். இருக்கிறது...! அதை உணர்ந்து செயல்படுத்த அறிவும், பக்குவமும் வேண்டும். இப்போது இளைஞர்கள் இணையதளத்தைப் பயன்படுத்துவது எல்லாம் பொழுது போக்குக்கு தான்.

முறையான படிப்பு, பயிற்சி, அனுபவம் இருந்தால் மட்டுமே எந்த துறையிலும் ஒருவன் முன்னுக்கு வர முடியும். அப்படிப்பட்டவர்கள் தங்களின் அனுபவத்தை பதிவாகப் போட்டால் தான் அது மற்றவர்களுக்குப் பயன்படும்.

இப்படிப் பட்ட பதிவுகள் இணைய தளங்களில் 10 சதவீதம்தான் இருக்கும். இதை புரிந்து கொள்ளும் பக்குவம் நம் இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் வரும்வரை இணையதளங்களால் பாதிப்புகள் தான் அதிகம். இதை சொல்வதால் அறிவியலை எதிர்ப்பதாக அர்த்தம் இல்லை.

அறிவியல் நல்ல பாதையையும் காட்டும். தீயப்பாதையையும் காட்டும். அதில் நீங்கள் எந்த பாதையை தேர்வு செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். நல்ல பாதையை காட்டுவதற்கு பெற்றோர் எப்போதும் துணை நிற்க வேண்டும். தங்களின் பிள்ளைகள் எப்போதும் செல்போனும் கையுமாக இருக்காமல் பார்த்துக்கொள்வது பெற்றோரின் கடமையாகும்!

---

## முதுமை தோற்றத்தைத் தள்ளிவைத்து

# முகம் பளிச்சென இருக்க தவறாமல் ஆவி பிடியுங்கள்!

மூக்கின்மேல் தோன்றும் கரும்புள்ளிகள், வெள்ளை புள்ளிகளும் நீங்கி முகம் பளிச்சிடவும், முதுமைத் தோற்றத்தை தள்ளி வைக்கவும் ஆவி பிடிக்கலாம்.

காற்றில் உள்ள மாசுக்கள் காரணமாக சருமத் துளைகளில் சேரும் மாசுக்கள், சருமத்தை பொலிவிழக்கச் செய்யும்.

இத்தகைய மாசுக்களை அகற்றி, சோர்ந்து போன சருமத்தை புத்துணர்ச்சி பெறும் வகையில் சுத்தம்செய்யவும், சருமத்துளைகளில் வெளிப்படும் எண்ணெய்த்தன்மை காரணமாக முகம்பொலிவிழப்பதை தடுக்கவும், முகப்பரு ஏற்படும் தாக்கத்தை கட்டுக்குள் வைக்கவும், மூக்கின்மேல் சொரசொரப்பாக தோன்றும் கரும்புள்ளிகள் மற்றும் வெள்ளை புள்ளிகளும் நீங்கி முகம் பளிச்சிடவும், முகத்திற்குத் தேவையான இரத்த ஓட்டம் சீராவதால் முதுமை தோற்றத்தை தள்ளி வைக்கவும், மேலும் மூக்கடைப்பு, ஜலதோம் போன்று சுவாசத்திற்கு சிரமம் தரக்கூடிய சில பிரச்சினைகளில் உடனடி தீர்வு தரக்கூடியது என ஆவி பிடிப்பதற்கு பல நல்ல பலன்கள் உண்டு.

ஒரு பாத்திரத்தில் பாதி அளவு தண்ணீரை கொதிக்க வையுங்கள். தண்ணீர் நன்கு கொதித்தவுடன், மஞ்சள்தூள் 1/2 தேக்கரண்டி அளவுபோட்டு, உடனே கனத்த துண்டு, கொண்டு ஆவி முகத்தில் படும்படி, கண்களைமூடி, ஆவி பிடிக்கவும்.

மஞ்சள் சிறந்த கிருமிநாசினி என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மஞ்சள் நமது சுவாசப்பாதையை சரிசெய்வதுடன், சரும துளைகள் விரிவடைந்து, அதில் உள்ள மாசுக்கள், மற்றும் பருக்களை உருவாக்கும் கிருமிகள் விரைவில் வெளியேற உதவுகிறது.

மஞ்சள் மற்றும் கையளவு துளசியைப் போட்டும் ஆவி பிடிக்கலாம். எலுமிச்சை இலை அல்லது அரை மூடி எலுமிச்சை சாறு கலந்தும் ஆவி பிடிக்கலாம். வேப்பிலை கையளவு போட்டும் ஆவி பிடிக்கலாம்.

கடைசியில் ஐஸ் கட்டியை டவலில் சுற்றி முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில்



ஒற்றி, சருமத் துவாரங்கள் விரிவடையாமல் இருக்க ஒத்தடம் வைக்கலாம். அல்லது குளிர்ந்த நீரினால் முகத்தை அலசலாம்.

## இறை இரக்கத்தின் நான்காவது ஆசிய மாநாடு

இறை இரக்கத்தின் நான்காவது ஆசிய மாநாடு 2018 செப்ரெம்பர் 26 முதல் 28 வரை புதிய வழி நற்செய்தி அறிவிப்பு பணியின் ஒரு வெளிப்பாடாக அமைந்துள்ளது என்னும் தலைப்பில் மலேசியா நாட்டின் பினாங் உயர் மறைமாவட்டத்தில் நடைபெறுகிறது. ஆசியாவிலிருந்து பல்வேறு நாடுகளுக்குப் பணிபுரியச் செல்லும் கத்தோலிக்கர்கள் இப்பக்தியை செல்லும் இடங்களில் எல்லாம் பரப்பி வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆசிய நாடுகளில் மாநாடு

புதிய வழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவையின் வழிநடத்துதலோடு இறை இரக்கத்தின் உலக மாநாட்டு அமைப்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆசியாவின் பல்வேறு நாடுகளில் ஆசிய மாநாட்டை நடத்தி வருகின்றது. 2015ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் மெதான் நகரில் நடைபெற்ற ஆசிய மாநாட்டிற்கு பின்னர் 2018ஆம் ஆண்டு மலேசியாவின் பினாங் உயர் மறைமாவட்டத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

# தமிழர் எந்த நாட்டுக்கு புலம்பெயர்ந்தாலும் முதலில் தேடுகின்ற இடம் ஆலயமே!

## கனடா மரியன்னை விழாவில் குருமுதல்வர் தெரிவிப்பு





கனடாவின் ரொரன்ரோ மாநிலத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இறை மக்களின் பாதுகாவலியாகிய புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழா திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்த யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தமிழ் மக்கள் எந்த புதிய நாட்டுக்கு புலம்பெயர்ந்தாலும் முதலில் தேடுவது ஆலயத்தையே எனத் தெரிவித்துள்ளார். ரொரன்ரோ மாநிலத்தின் ஆன்மீக இயக்குநர் சார்ள்ஸ் கொலின்ஸ் அடிகளாரால் ஒழுங்குசெய்யப்பட்ட மரியன்னை விழா மூன்றுநாள்கள் ஆயத்த வழிபாடுகளோடு கடந்த செப்ரெம்பர் 9ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தொடர்ந்தும் தம் மறையுரையில் எமது மக்கள் பல்வேறு காரணங்களுக் காக தமது சொந்த நாட்டைவிட்டு உலகின் பல்வேறு நாடுகளில் சிதறி வாழ்ந்தாலும் மரியன்னையின் பக்தர்கள் என்கின்ற வகையில் ஒரு குடும்பமாகவே வாழ்கிறார்கள் என்பதை நான் பல நாடுகளுக்கு மேற்கொண்ட ஆன்மீகப் பயணங்களின் போது கவனித்தேன். ஜேர்மனியின் கேவலார் திருத்தலம் மற்றும் லண்டன் வோல்சிங்கம் திருத்தலம் போன்ற மரியன்னையின் திருத் தலங்களிலும் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடிய மரியன்னையின் பக்தர்களையும் நினைக்கிறேன். மரியன்னை தனது பிள்ளைகளை ஒரே குடும்பமாகப் பிணைத்து வைத்திருக்கும் பாச மிகு அன்னையாக என்றும் திகழ்கிறார். தமிழ் மக்கள் எந்த புதிய நாட்டுக்கு புலம் பெயர்ந்தாலும் முதலில் தேடுவது ஆலயத்தையே. அவர்கள் தமது விசுவாச வாழ்வை தொடர்ந்து ஸ்திரப்படுத்து வதற்கு கொடுக்கின்ற முன்னுரிமையை பாராட்டுகிறேன். இருப்பினும் பலர் சுயநலன் களுக்காக கவர்ச்சிகரமான தவறான போதனைகளுக்கு அடிமைகளாகி தமது விசுவாச வாழ்வைப் புறந்தள்ளி குறிப்பாக அன்னை மரியாவை உதாசீனம் செய்து வாழ்வோரும் இருக்கின்றார்கள் என்பதை கவலையோடு தெரிவிக்கிறேன். இப்படியானவர்களின் மனமாற்றத்திற்காகச் செபிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.- என்றார்.

# உண்மையின் எண்ணங்கள்

## கனடா ரொரன்ரோவில் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார்

கனடா ரொரன்ரோவில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தமிழ் மக்கள் எந்த புதிய நாட்டுக்கு புலம்பெயர்ந்தாலும் முதலில் தேடுவது ஆலயத்தையே என்ற கருத்தை பாராட்டி வரவேற்கிறோம். இது உண்மையில் தமிழ் கத்தோலிக்க மக்களின் விசுவாச ஆழத்தை அறிக்கையிடுகிறது. யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக ஜேர்மனியின் கேவலார் திருத்தலம் மற்றும் லண்டன் வோல்சிங்கம் திருத்தலம் போன்ற திருத்தலங்களுக்கு அவர் சென்று தெரிவித்த கருத்துக்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அறிக்கை இட்டுக் கொண்டே வந்துள்ளது.

யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் எளிமையானவர். பழக இனிமையானவர். சிரித்த முகத்துடன் அனைவரையும் அன்போடு அணுகி முடியாத விடயங்களையும் இலகுவாக சமாளிக்கக் கூடியவர். அவரின் புதிய கருத்துக்களும் புதுமையான கருத்துக் களும் அனைவரையும் கவரும் வல்லமை கொண்டவை. ஜேர்மனியின் கேவலார் திருத்தலம் லண்டன் வோல்சிங்கம் திருத்தலம் போன்ற திருத்தலங்களிலும் உள்நாட்டிலும் அவர் தெரிவித்து வரும் கருத்துக்கள் புதுமையானவை. மேற்கூறிய கருத்திற்கு சான்றானவை. யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளாரின் பணி சிறக்க காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்

# யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் மற்றும் கனடா திருமறைக்கலாமன்ற சந்திப்பு






கனடாவாழ் திருமறைக்கலாமன்ற உறுப்பினர்களுக்கும் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளாருக்கும் இடையிலான சந்திப்பும் மற்றும் மதிப்பளிப்பு நிகழ்வும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ரொரன்ரோ தூய ஆரோக்கிய அன்னை ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெற்றது. ரொரன்ரோ தூய ஆரோக்கிய அன்னை ஆலய பங்கின் புதிய பங்குத்தந்தையாக பொறுப்பேற்றிருக்கும் சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

# மரணதண்டனையை முற்றிலும் ஒழிக்க விரும்பும் திருப்பீடம்

தவறு செய்பவர் திருந்தி வாழ வழிவகுப்பது ஒன்றே இவ்வுலகை குற்றங்களிலிருந்து விடுவிக்கும் என்பதில் திருப்பீடம் நம்பிக்கை கொண்டுள்ளது. மரண தண்டனையையெதிர்த்து குரல் எழுப்பும் ஐ.நா. அவையுடன் உலக நாடுகள் அதிகமதிகமாக இணைந்து வரும் இவ்வேளையில் திருப்பீடமும் மரண தண்டனையைக் குறித்து பல காலமாக எழுப்பிவரும் குரலை மீண்டும் ஒரு முறை எழுப்புகிறது என்று வத்திக்கான் உயர் அதிகாரி தெரிவித்தார்.

மரண தண்டனை: வறுமையும், சட்ட உரிமையும் என்ற தலைப்பில் ஐ.நா.வின் தலைமையகத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் திருப்பீட பன்னாட்டு உறவுகள் துறையின் தலைமைச் செயலர் பேராயர் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

மரண தண்டனையை முற்றிலும் ஒழிப்பதற்கு 20 ஆம் நூற்றாண்டில் திருப்பீடம் பல முயற்சிகளை மேற் கொண்டதை இவ்வுலகம் அறியும் என்று கூறிய பேராயர் 21ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து, மரண தண்டனைக்கு எதிராக திருப்பீடம் தன் முயற்சிகளை தீவிரப் படுத்தியுள்ளது என எடுத்துரைத்தார். தவறு செய்பவர் திருந்தி வாழ வழிவகுப்பது ஒன்றே இவ்வுலகை குற்றங்களிலிருந்து விடுவிக்கும் என்பதில் திருப்பீடம் நம்பிக்கை கொண்டுள்ளது எனபேராயர் ஐ.நா. அவையில் வழங்கிய உரையின் இறுதியில் கூறினார்.

## யாழ்.மறை மாவட்டத்தில் ஒக்.18 முதல் 22 வரை

# புனித யோசப்வாஸ் அடிகளாரின் அற்புதச் சிலுவையின் பவனி

இலங்கையின் திருத்தூதரான புனித யோசப்வாஸ் அடிகளார் பயன்படுத்திய அற்புதச் சிலுவை யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களுக்கும் எடுத்துச்செல்லப்படுகின்ற இந்தச் சிலுவை ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை யாழ் மறைமாவட்டத்திற்கு எடுத்து வரப்பட இருப்பதால் அதனை பல்வேறு பங்குகளுக்கு எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை யாழ்.மறைமாவட்ட புனித யோசப்வாஸ் குழு மேற்கொண்டுள்ளது.

ஐந்து நாள்கள் மட்டும் இச் சிலுவை யாழ் மறைமாவட்டத்தில் இருப்பதால் எல்லாப் பங்குகளுக்கும் இதனை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் வெவ்வேறு மறைக்கோட்டங்களின் சில குறிப்பிட்ட ஆலயங்களில் மட்டும் இச்சிலுவை தரித்துவைக்கப்பட்டு சில இடங்களில் திருப்பலிகளும் சில இடங்களில் ஆராதனைகளும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பங்குத்தந்தையர்கள், பாடசாலை அதிபர்கள் தமது பங்குமக்கள், மாணவர்கள் புனித யோசப்வாஸின் அற்புதச் சிலுவையைத் தரிசிப்பதற்கான பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து அவர்கள் புனிதரின் ஆசீரைப் பெற ஏற்பாடு செய்யுமாறு யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் கேட்டுள்ளார்.

# மரண தண்டனை குறித்த திருத்தந்தையின் அழைப்பு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மரண தண்டனை குறித்து விடுத்துள்ள அழைப்பை இலங்கை கத்தோலிக்கர் பின்பற்ற வேண்டியது இன்றியமையாதது என இலங்கை மனித உரிமை ஆர்வலர் கூறியுள்ளார்.

இலங்கையில், போதைப் பொருள் குற்றவாளிகளை மரண தண்டனை கைதிகள் வரிசையில் வைப்பதற்கு இலங்கை அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர்களும் அவரது அமைச்சரவையும் தீர்மானித்திருப்பது குறித்த செய்தி வெளியானபோது தான் அதிர்ச்சியடைந்தார் என அந்த ஆர்வலர் தெரிவித்தார். இலங்கை உள்நாட்டுப் போர் களையும் கிளர்ச்சிகளையும் எதிர்கொண்டிருந்தாலும் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மரண தண்டனை மீது தடை விதித்திருந்த 29 நாடுகளுள் இலங்கையும் ஒரு நாடாக இருந்தது.

2017ஆம் ஆண்டில் மேலும் 106 நாடுகள் மரண தண்டனையை முற்றிலும் இரத்து செய்தன என்றும் அதே ஆண்டில் 23 நாடுகள் மரண தண்டனையை நிறைவேற்றின என்றும் அவர் தெரிவித்தார். மரண தண்டனை நிறைவேற்றுவது மனிதமற்றது மற்றும் நற்செய்திக்கு முரணானது எனவும் திருத்தந்தை கூறிய பின்னர் இலங்கை கத்தோலிக்கத் திருஅவை திருத்தந்தையின் அறிவிப்பை ஆதரித்து வெளியிட்ட அறிக்கையையும் குறிப்பிட்டார்.



# 7ஆவது தடவையாக ஆசியக் கிண்ணம் இந்திய அணி வசம்!

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இறுதி வரை போராடிய பங்களாதேஷ், இந்திய அணியிடம் கடைசி பந்தில் நேற்றுமுன்தினம் தோல்வி அடைந்தது.

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், இந்தியா 3விக்கட்களால் வெற்றி பெற்று தன் ஏழாவது ஆசியக் கிண்ணத் தொடரை வென்றது.

**பங்களாதேஷ் 222 ஓட்டங்கள்**

நாணயசுழற்சியை வென்ற இந்தியா முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. பங்களாதேஷ் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் லிட்டன் தாஸ் சதம் அடித்தார். 121 ரன்கள் குவித்த அவர் டோனியின் ஸ்டம்பிங்கால் வெளியேறினார். மெஹிதி ஹசன் 32, சௌம்யா சர்க்கார் 33 ஓட்டங்கள் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்கள் மட்டுமே எடுத்தனர். பங்களாதேஷ் 48.3 ஓவர்களுக்கு 222 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்தியா சார்பில் ஜாதவ் 2, சாஹல் 1, குல்தீப் 3, பும்ரா 1 விக்கெட் வீழ்த்தினர். இந்தியா 3 ரன் அவுட்கள் செய் தது குறிப்பிடத்தக்கது. அதே போல டோனி 2 ஸ்டம்பிங் செய்து கலக்கினார்.

**இந்தியா தடுமாற்றம்**

பங்களாதேஷ் நிர்ணயித்த 223 ஓட்டங்கள் இலக்கை துரத்த தொடங்கியது இந்தியா. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் தவான் 15 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ராயுடு 2 ஓட்டங்களில் வெளியேறினார். நன்றாக ஆடி வந்த ரோஹித் 48 ரன்களில் வெளியேற இந்திய அணி 83 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்கள் இழந்து தடுமாறியது. நிலைத்து ஆடிய ரோஹித் சர்மா 3 சிக்ஸர்கள் பறக்க விட்டார். நான்காவது சிக்ஸுக்கு ஆசைப்பட்டு தூக்கி அடித்த அவர் 48 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து வந்த டோனி, தினேஷ் கார்த்திக்கோடு இணைந்து 54 ஓட்டங்கள் எடுத்த நிலையில், தினேஷ் 37 ஓட்டங்களுக்கு வெளியேறினார். அடுத்து டோனி 67 பந்துகளில் 37 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்ட மிழந்தார். ஜாதவ்விற்கு காலில் தசைப் பிடிப்பு ஏற்பட்டதால் வெளியேறினார். அடுத்து ஜடேஜா, புவனேஸ்வர் இணைந்து அணியை மீட்கும் பணியை செய்தனர். இவர்கள் 45 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஜடேஜா வெளியே றினார்.

**கடைசி ஓவர் வரை பரபரப்பு**

ஜாதவ் மீண்டும் உள்ளே வந்தார். அதே சமயம், புவனேஸ்வர்குமார் வெளியேற இந்தியா 7 விக்கெட்கள் இழந்து மீண்டும் பின்னடைவைச் சந்தித்தது. கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், குல்தீப், ஜாதவ் இருவரும் மாற்றி மாற்றி ஒற்றை ஓட்டங்களாக எடுத்தனர். கடைசி பந்தில் ஒரு ஓட்டம் தேவை என்ற நிலையில் ஜாதவ் பின்பக்கம் பந்தை தட்டி விட்டு ஓட.. இந்தியா தன் ஏழாவது ஆசியக் கிண்ணத் தொடரை வென்று சாதித்தது. கடைசி வரை போராடிய பங்களா தோல் வெற்றியை பெற முடியவில்லை.

(ஐ)






# ஓய்வு தொடர்பில் தீர்மானிக்க மெஸ்ஸிக்கு நேரம் கொடுங்கள்


உலகின் புகழ் பூத்த உதைபந்து வீரரான ஆர்ஜென்ரீனா அணியின் லியோனல் மெஸ்ஸி, அணிக்காக விளையாட விரும்புகிறாரா? என்பதை முடிவு செய்ய அவருக்கு நேரம் கொடுக்க வேண்டும் என அணியின் முன்னாள் வீரரான சேவியர் சவியோலா தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண உதைபந்துத் தொடருக்கு பின்னர், அணியின் தலைவரான மெஸ்ஸி சர்வதேசப் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவார் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தப் பின்னணியில் சேவியோலா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் கூறுகையில், 'ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் நாம் எதிர்பார்த்தபடி ஆர்ஜென்ரீனா அணி விளையாடவில்லை என்பது நாம் எல்லோருக்கும் தெரியும். மெஸ்சிக்கு சற்று ஓய்வுதேவை. அர்ஜென அணிக்காக விளையாட விரும்புகிறாரா? என்பதை முடிவு செய்ய அவருக்கு நேரம் கொடுக்க வேண்டும். அவர் மீண்டும் அணிக்குத் திரும்புவார் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால், அணிக்கு திரும்புவது அவரது சொந்த விடயம் என கூறியுள்ளார்.

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் ஆர்ஜென்ரீனா அணி, சம்பியன் பட்டம் வெல்லும் அணிகளில் ஒன்றாக திகழ்ந்த போதும், அந்த அணியால் காலிறுதிக்கு முன்னைய சுற்று வரை தான் முன்னேற முடிந்தது.

கழக அணிகளில் பார்சிலோனா அணிக்காக விளையாடி வரும் மெஸ்ஸி, பார்சிலோனா அணிக்கு பல சம்பியன் கிண்ணங்களை வென்று கொடுத்துள்ளார். ஆனால் அவரால் ஆர்ஜென்ரீனா அணிக்கு இதுவரை ஒரு கிண்ணம் கூட வென்று கொடுக்க முடியவில்லை.



# ஷகிப் அல் ஹசனுக்கு சத்திர சிகிச்சை



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகல துறை வீரரான கிப் அல் ஹசன், சுண்டு விரலில் அறுவை சிகிச்சை செய்துகொண்டுள்ளார்.

கிப் அல் ஹசனுக்கு, இலங்கை தொடரின்போது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டது. இதற்கு சிகிச்சை மேற்கொண்டார். ஆனால் அறுவை சிகிச்சை செய்யவில்லை.

ஆனால் ஆசியக் கிண்ண தொடரில் விளையாடுவதற்காக அணியில் இடம்பெற்றிருந்தபோதும், இலங்கை, இந்தியா அணிகளுக்கிடையிலான போட்டியில் மட்டும் விளையாடினார்.

அதன்பிறகு, பாகிஸ்தான் போட்டிக்கு முன் வலி அதிகம் ஏற்பட்டதால் தொடரில் இருந்து விலகினார். அத்துடன் உடனடியாகச் சொந்த நாடு திரும்பினார்.

சொந்த நாடு திரும்பிய அவர் தற்போது சுண்டு விரல் காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார். இதனால் எதிர் வரும் சிம்பாப்வே அணிக்கெதிரான தொடரிலிருந்து அவர் விலகியுள்ளார்.

# விளையாட்டு அமைச்சின் ஆலோசகராக சுசந்திகா



விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு ஆலோசகராக ஒலிம்பிக் வீராங்கனை சுசந்திக்க ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா அவருக்கான நியமன கடிதத்தை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

கொழும்பு 7 இல் அமைந்துள்ள விளையாட்டுத் துறை அமைச்சில் வைத்து சுசந்திகா தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## இந்தோனேசியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான உயிரிழப்புகள் ஆழிப்பேரலை காரணமாக இடம்பெற்றுள்ளன. கடற்கரைகளில் நின்றிருந்தவர்கள் பாரிய அலை ஏற்பட்டபோது சிதறி ஓடியதாலும், அலையில் இழுத்துச் செல்லப்பட்டும் உயிரிழந்தனர்.

இன்னும் பலர் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

7.5 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு பின்னர் ஏற்பட்ட பலமான அதிர்வுகள் காரணமாக கடல் அலைகள் சுமார் 6 மீற்றர்கள் (18 அடிகள்) வரை மேலேழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்ட பலரின் உடல்கள் நேற்றுக் காலை முதல் கடற்கரைகளில் ஒதுங்கியதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கரையோரச் சுற்றுலாத்துறை நகரான பாலுவின் கடற்கரையில் தமது வழமையான நடவடிக்கைகளில் ஈடுபட்ட வந்த மக்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேற முடியாமல் போனதால் அதிகளவானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தங்களை அடுத்து 350க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக இந்தோனேசிய அனர்த்த கட்டுப்பாட்டு முகவர் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அங்கிருந்த பல குடியிருப்புகள் உள்ளிட்ட கட்டடங்கள் தரை மட்டமாகியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு அனுப்பிவைத்துள்ள அதிகாரிகள், மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

விமானங்கள் மூலமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணப் பொருட்கள், மற்றும் மருந்துப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

அத்துடன், மருத்துவ உதவிக் குழுவினரும் துரிதமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, மின்சார துண்டிப்பு மற்றும் தொடர்பாடல் வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதற்கு அதிகாரிகள் கடும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (ஐ)



## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல், கட்டுபொத்த பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது அதிகளவான நாடுகள் பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளன. அதில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

அதாவது அமெரிக்கப் பொருளாதாரம் வலுவடைந்துள்ளதுடன் அந்த நாடு வழங்கும் வட்டி வீதம் அதிகரித்துள்ளதால் இலங்கையில் டொலரின் கையிருப்பு குறைவடைந்துள்ளது.

இலங்கையில் டொலரின் கையிருப்பு குறைவடைந்து அமெரிக்காவில் அந்நிலைமை அதிகரிக்கும்போது ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

இலங்கை கடன் செலுத்த வேண்டிய நிலைமையில் உள்ளமையால்தான் ரூபாவின் வீழ்ச்சி பாரிய பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

ஆகையால் இப்பிரச்சினைக்கு சிறிதளவேனும் தீர்வை ஏற்படுத்துவதற்குச் சில வெளிநாட்டு இறக்குமதிகளை வரையறைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள நிதியமைச்சினை வலியுறுத்தியுள்ளேன்-என்றார். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ்நிலையம் முன்பாக மழைக்கு மத்தியிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனுராதபுரம் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்திச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கைதிகளுடைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், அவர்கள் அனைவரையும் விடுவிக்கவேண்டுமென வலியுறுத்தியும் பல்வேறு தரப்பினரும் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையிலேயே நேற்றுக் கொட்டும் மழைக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-7)

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் முகங்களை மூடியும் வந்த 9 பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியது.

ஆவா குழுவிலிருந்து பிரிந்த தனு ரொக் என்பவரது நண்பரின் வீட்டுக்குள்ளேயே ஆவா குழு புகுந்து தாக்குதலை நடத்தியது. அந்த வீட்டுக்குள் புகுந்து கடந்த வருடம் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் இது இரண்டாவது தாக்குதலாகும்.

சம்பவத்தில் அந்த வீட்டுக்கு அருகாமையிலுள்ள வீட்டில் மேசன் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தவர் கை, காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் செயற்படும் வன்முறைக்குழுக்களை ஒழிப்பதற்கு இராணுவத்தினருக்கு – குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கேனும் பொலிஸ் அதிகாரங்களை அரசு வழங்கவேண்டும் என்று இராணுவத்தளபதி லெப்டினண்ட் மகேஸ் சேனாநாயக்க நேற்று முன்தினம் கண்டியில் வைத்து கருத்துவெளியிட்டிருந்தார்.

இதுதொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று வினவியபோதே அஜித் பி.பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

இராணுவத்தளபதியின் கோரிக்கை நியாயமானது. இதற்கு முன்னரும் இராணுவத்தின் கோரிக்கையின் பிரகாரம் விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இது விடயத்திலும் விசேட அதிகாரங்கள் தேவைப்பட்டால் அதனையும் அரசு வழங்க தயாராகவே இருக்கின்றது.

நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்கவேண்டும். அதைச் செய்யும் கடப்பாட்டைக் கொண்டுள்ள பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தேவையான உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்குவது அரசின் கடப்பாடாகும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, ஆவா குழுவை ஒடுக்குவதற்கு இராணுவத்தினர் கோரும் அதிகாரங்களை அரசு உடனடியாக வழங்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெசை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப்பேச்சு நடத்தினார். நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகத்தில் உள்ள ஐ.நா. பொதுச்செயலரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி, கடந்த மூன்றரை ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐ.நா பொதுச் செயலருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகத் தமது அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகமும், சட்டத்தின் ஆட்சியும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சர்வதேச சமூகம் இலங்கையைப் புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

ஐ.நா பொதுச்செயலரை மீண்டும் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறும், அதன் மூலம் அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேரில் காணும் வாய்ப்பு கிட்டும் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ், கூடிய விரைவில் இலங்கைப் பயணம் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

நல்லிணக்கத்துக்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஐ.நா தொடர்ந்தும் ஆதரவு அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைதியைக் கட்டியெழுப்புதல், மனித உரிமைகள், ஐ.நா அமைதி காப்பு போன்ற பணிகளில், இலங்கை நல்ல முறையில் பணியாற்றுவதற்காக ஐ.நா பொதுச்செயலர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

அன்ரனியோ குட்டரெஸ் ஐ.நா. பொதுச்செயலராகப் பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக இலங்கை வரவுள்ளார். இதற்கு முன்னர் 2016 ஒகஸ்ட் 31திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உரும்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியுள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள தேவாலயமொன்றில் வருடாந்தத் திருவிழா இடம்பெற்று வரும் நிலையில் இந்தத் தேவாலயத்துக்கு அண்மையிலுள்ள வீடுகள் மீது மூன்று பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

தாக்குதலில் இரண்டு வீடுகளின் முன்பக்கம் கடும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

எனினும், வீட்டிலிருந்தவர்களுக்குத் தெய்வாதீனமாகக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கான சரியான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடு செல்லவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர், அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் போரின் இறுதிக் கட்டத்தின்போது இலங்கையில் இருக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிடும்போதே கோட்டாபய இதனைக் கூறினார்.

போரின் இறுதி இரண்டு வாரங்களில் நான் தான் பதில் பாதுகாப்பு அமைச்சர். இறுதிப் போரில் பின்னோக்கி நகரும் விடுதலைப் புலிகள் தென் இந்தியாவின் சென்னை அல்லது, வேறு ஒரு இடத்தில் இருந்து வந்து கொழும்பை முற்றாக அழிக்க, விமானத்தில் இருந்து குண்டு வீச போகின்றனர் எனத் தகவல் கிடைத்திருந்தது. இதன் காரணமாகவே அனைவரும் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

எனினும் ஜனாதிபதியின் இந்தக் கருத்து புதிய செய்தி. நான் அறிந்திருக்காத தகவல் ஒன்றையே ஜனாதிபதி கூறியுள்ளார் என கோட்டாபய குறிப்பிட்டுள்ளார்.

இது நான் அறிந்திருக்காத செய்தி. எனக்கு அப்படியான தகவல் எதுவும் கிடைத்திருக்கவில்லை. நான் இலங்கையிலேயே இருந்தேன். வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கவில்லை. இலங்கை இராணுவம் போர் குற்றம் புரிந்ததாகப் பொய்யான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியது போல், அவர் போருக்கு அரசியல் ரீதியான தலைமைத்துவத்தை வழங்கிய காலத்துடன் இது சம்பந்தப்பட்டுள்ளதால், சர்வதேச ரீதியில் சுமத்தப்படும் இந்தக் குற்றச்சாட்டில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பு எனவும் கோட்டாபய கூறினார். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் செயலர் தெரேசா ரிபேரியோவை, இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க கடந்த வாரம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போதே, 1560ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்களால் கட்டப்பட்ட மன்னார்க் கோட்டையைப் புனரமைப்பதற்கான திட்டம் குறித்து, முன்மொழியப்பட்டது.

போர்த்துக்கல் நாட்டின் சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பது குறித்தும், இரண்டு நாடுகளும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் கூட்டாகச் செயற்படுவது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கிடையில் முரண்பாடான நிலைமை காணப்படுகிறது.

இந்நிலையில் பஸ் நிலையத்துக்கு முன்பாக பஸ்களை நிறுத்த முடியாதென வவுனியா நகர சபையால் சமிக்ஞைப் பலகை அமைக்கப்பட்டபோது, ஓட்டோ உரிமையாளர்களுக்கும் நகர பிதாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

புதிய பஸ் நிலையத்துக்குள் வேறு மாவட்டங்களில் இருந்து வருகைதரும் பஸ்கள் உட்செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாகாணங்களுக்கிடையிலான சேவையில் ஈடுபடும் பஸ்கள் வீதியோரத்தில் தரித்து நின்றே சென்று வருகின்றன.

ஆகையால் அந்தப் பகுதியிலுள்ள மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில், தமது வீடுகளுக்கு முன்பாக பஸ்கள் நிறுத்துவதைத் தடை செய்யுமாறு கோரி அப்பகுதி மக்கள் வவுனியா நகரசபையிடம் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய, வவுனியா நகரபிதா இ.கௌதமனின் ஏற்பாட்டில் பஸ்களைச் சில மீற்றர் தூரம் சென்று மக்கள் வசிக்காத பகுதியில் நிறுத்துவதற்கு ஏதுவாக, வாகனம் நிறுத்துவதற்குத் தடை செய்யும் சமிக்ஞைப் பதாதைகளை அமைக்க நகரசபை ஊழியர்கள் பணியை முன்னெடுத்தனர்.

இதன்போது ஓட்டோ சாரதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அங்கவீனர்கள் புதிய பஸ் நிலையத்திற்கு வருவதற்குச் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும் எனவும், மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் தம்மால் கட்டணங்களைப் பெறமுடியாது என்பதால் புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாகவே மாகாணங்களுக்கிடையிலான பஸ்களை நிறுத்திச் செல்லவேண்டும் அல்லது பஸ் நிலையத்துக்குள்ளே பஸ்கள் செல்ல அனுமதிக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

பின்னர் வாகனத் தரிப்புக்குத் தடை விதிக்கும் சமிக்ஞைகளை அமைக்கவிடமாட்டோமென வவுனியா நகரபிதாவுடன் முறுகலில் ஈடுபட்டனர். இதனையடுத்துச் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறும் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுப்பதாகத் தெரிவித்த நிலையில், நகரசபையினர் தமது பணியை இடைநிறுத்தினர். (ஐ-100)

# நினைவாற்றலை மனச்சாட்சிக்கும்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)




தராஸ் செவ்ஷென்கோவை உலகின் இதர மொழிகளில் அறிமுகப்படுத்தியவர்கள் யார்? யார்? என்று தேடிக் கொண்டிருந்தார் ஃபூர்னிக்கா. அன்றைய எமது சந்திப்பு அவருக்குப் பெரும் உதவியாக இருந்தது.

நண்பரே, இலங்கையில் கே.கணேஷ்–எச்.எம்.பி. மொஹிதீன் ஆகியோர் எங்கள் உக்ரேயன் மகாகவியைப் பற்றி நன்கு அறிந்து எழுதியவர்கள். அவரின் கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்கள். எனது நீண்ட கால நினைவில் அவர்கள் இருவரும் வாசம் செய்கின்றனர். ஆனால் தொடர்பு கொள்ள கைவசம் முகவரி இல்லை. நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும் என்றார்.

மிகுந்த மனநிறைவுடன் அவர் குறிப்பிட்ட இரண்டு நண்பர்களின் முகவரிகளையும் இலங்கை திரும்பியதும் அனுப்பி வைத்த துடன் இம்மூவர் மத்தியிலும் நட்புறவு தோன்றத் துணை நின்றேன். நண்பர் கே.கணேஷ் இதற்காகவே என்னை மிகுந்த நன்றியுணர் வோடு நேசித்தவர்.

தராஸ்செவ்ஷென்கோவைதான்மீண்டும் நினைக்கவும், அவரது கவிதைகளைத் தொடர்ந்து மொழி பெயர்க்கவும் அந்த மகாகவியின் 125 ஆவது வருட நினைவு விழாவில் கலந்துகொள்வதற்கு ருஷ்யாவுக்கு பயணமாவதற்கும் நான் ஃபூர்னிக்காவுடன் ஏற்படுத்திக்கொடுத்த தொடர்பும் உறவும்தான் காரணம் என்று அடிக்கடி நினைவுபடுத்தி கடிதங்கள் எழுதினார் நண்பர் கணேஷ்.

அத்துடன் சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 1993 இல் வெளியிட்ட உக்ரேனிய மகாகவி தராஸ் செவ்ஷென்கோ கவிதைகள் ( மொழிபெயர்த்தவர் கணேஷ்) நூலின் முன்னுரையிலும் இந்தத் தொடர்பாடல் பற்றிப் பதிவு செய்துள்ளார்.

1986இல் ஒரு சோவியத் குழுவில் அங்கம் வகித்து ஃபூர்னிக்கா குறுகிய கால விஜயம் மேற்கொண்டு கொழும்புக்கு வருகை தந்த சமயம், முன்னேற்பாடு ஏதும் இன்றி சிறிய கூட்டம் ஒன்றை கொட்டாஞ்சேனையில் நடத்தினோம்.

வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) மாதாந்தம் நடத்தும் இலக்கியச் சந்திப்பும் கவிதா அமர்வுமே இவ்வாறு திடீரென ஃபூர்னீக்காவுடனான இலக்கியச் சந்திப்பு கூட்டமாக அமைந்தது. நானும் நண்பர் பிரேம்ஜியும் கல்கிஸையில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த ஃபூர்னிக்காவை அழைத்துக் கொண்டு அந்தப்பிரதேசத்தில் வட்டாரப்பொல வீதியில் வசித்து வந்த நண்பர் எச். எம். பி மொஹிதீனிடம் அழைத்துச்சென்று இருவரையும் அறிமுகப்படுத்தினோம். எழுத்தினால் மாத்திரமே தெரிந்துவைத்திருந்தவர்களின் அந்தச்சந்திப்பு அவர்களுக்கும் எனக்கும் மறக்கமுடியாத நிகழ்வாகிவிட்டது.

வகவம் கவிஞர்கள் கவிதையால் ஃபூர்னீக் காவுக்கு புகழாரம் சூட்டினார்கள். இந்தப் பயணத்தில் அவர் கே.கணேஷ், எச்.எம்.பி.மொஹிதீன், சில்லையூர் செல்வராசன், பிரேம்ஜி,சோமகாந்தன், ராஜஸ்ரீகாந்தன் , மேமன்கவி , ஆசிரியர் இலக்கிய நேசர், மாணிக்கவாசகர் உட்பட பலரையும் சந்தித்து உரையாடினார்.

கால அவகாசம் இன்மையால் யாழ்ப்பாணத்திலும் இன்னும் பல இடங்களிலும் அவர் நேசித்த இலக்கியவாதிகளைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது.

பலரது பெயர்கள் அவர் நாவில் வந்தன. அவர்களையெல்லாம் விசாரித்தார்.

ஃபூர்னிக்காவின் நினைவாற்றல் மகத்தானதுதான். அவரே எழுதியுள்ளவாறு அதற்கு இணையான இன்னொரு பண்பு இல்லைத்தான். இந்த நினைவாற்றல் பண்பின் அடையாளமாகத்தான் நாம் இன்று அந்த உக்ரேயன் மகாகவி தராஸ் செவ்ஷென்கோவின் கவிதைகளை கே.கணேஷ் அவர்களினால் தமிழில் பார்க்கின்றோம்.


ஃபூர்னீக்கா சம்பந்தப்பட்ட ஜெயகாந்தனின் நட்பில் பூத்த மலர்கள் நா.முகம்மது செரீப் மொழிபெயர்த்த – ஃபூர்னிக்கா ருஷ்ய மொழியில் எழுதிய பிறப்பு முதல் இறப்பு வரை ஆகியவற்றை நண்பர் ராஜஸ்ரீ காந்தன்ஊடாக அனுப்பிவைத்தவரும்கே.கணேஷ் தான்.

கண்டி தலாத்துஓயாவில் வசித்த கணேஷ் அவர்களும் நீர்கொழும்பில் இருந்த நானும் நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளக் காரணமாயிருந்த ஃபூர்னீக்கா எம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற துயரச் செய்தியை தாங்கி வந்ததும் கணேஷ் எழுதிய கடிதம்தான். ஃபூர்னிக்கா எனக்காக தனது கையொப்பத்துடன் வழங்கிய பிறப்பு முதல் இறப்புவரை ருஷ்ய மூல நூலும் எனது குடும்பத்தினருக்காக தந்துவிட்ட பரிசுப்பொருள்களும் இன்றும் எங்களுடன் அவரது சகோதர வாஞ்சையை உணர்த்திக்கொண்டுதானிருக்கின்றன.

தமிழக மற்றும் ஈழத்து படைப்பாளிகள் பலரது படைப்புகளை ஃபூர்னிக்கா ருஷ்ய மொழியில் தந்திருக்கிறார். தமது ஆய்வுக்காக தமிழ்நாட்டின் பல கிராமங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து தமது களப் பயிற்சியின் மூலம் அவர் ருஷ்ய மொழியில் எழுதிய குறிப்பிட்ட நூலின் தமிழாக்கம் தான் பிறப்பு முதல் இறப்பு வரை. செக்கோஸ்லவாக்கியா அறிஞர் டாக்டர் ஹெலேனா ப்ரெய்ன்ஹால் தெரோவா இந்நூலுக்கு மதிப்புரையை எழுதியிருக்கிறார்.

மற்றுமொரு உக்ரேய்னிய அறிஞர் இவான் ஃபிராங்கோவின் கவிதைகள் உக்ரேனியா மகாகவி தராஸ்ஷெவ்சென்கோவின் கவிதைகள் (இந்நூல்களையும் தமிழுக்குத் தந்தவர் கே.கணேஷ்) எனக்கு கணேஷ் தபாலில் அனுப்பியிருந்தார். ஃபூர்னீக்காவின் பிறப்பு முதல் இறப்பு வரையில் நூல் பற்றிய எனது நயப்புரையை மெல்பனில் மருத்துவர் பொன். சத்தியநாதன் நடத்திய தமிழ் உலகம் (ஆசிரியர் பாடும் மீன் ஸ்ரீகந்தராசா) இதழில் 1994 இல் எழுதியிருக்கின்றேன்.

சமூகவியல் – இனப்பரப்பு இயல் போன்ற இன்னபிற துறைகளில் ஆர்வம் காட்டிவருகின்ற நிபுணர்களுக்கு மட்டுமல்லாது சாதா




ரணமானவர்களுக்கும் ஃபூர்னிக்காவின் கூர்ந்து நோக்குகின்ற பார்வையும் விஷயங்களில் நெருக்கமான அறிவும் சந்தேகத்திற்கிடமின்றி ஆர்வத்தை ஏற்படுத்தும் விரிவான ஆரம்ப நிலைத்தகவல்களினின்றும் நிறைந்த பய னைப் பெறச்செய்யும் என்ற செக்கோஸ்லவேக்கிய அறிஞர் தெரோவாவின் கூற்று மிகச் சரியான அனுமானிப்பாகவே இந்நூலை படித்தவுடன் கருதத் தோன்றுகிறது.

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் பிடியில் இந்தியா இருந்த சமயம் முற்றாக ஆய்வு நோக்கத்திற்காக அங்கு செல்ல விரும்பிய ருஷ்ய ஆய்வாளர்களையும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சந்தேகக்கண்கொண்டு பார்த்தனர் என்ற தகவலையும் தமது முன்னுரையில் ஃபூர்னிக்கா தெரிவிக்கின்றார்.

ஆழமான தமிழ்க்கலாசாரத்தின் மரபு தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையில் வேரூன்றி நிற்பதையும் அவர் நன்கு அவதானித்தே இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

தமிழ்மொழி தொன்மையானதாயும் அதேசமயத்தில் தமிழகத்தில் பிரதேசத்திற்குப்பிரதேசம் அதன் மொழிப்பிரயோகம் மாற்றம் பெறுவது குறித்தும் ஃபூர்னிக்கா விரிவாக ஆராய்கிறார். தமிழ்மொழி செவிக்கு இனிமையாகவும் அதேவேளை அதன் ஒலியலை ஏற்றத்தாழ்வுடையது என்றும் விபரிக்கிறார்.

எடுத்துக்காட்டாக அவர் குறிப்பிடும் வாக்கியம் சுவாரஸ்யமானது :– ' நான் கிட்டத்தட்ட ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு கட்டடங்கள் பார்த்தேன்.

இந்த வாக்கியத்தின் ஒலிப்பாங்கினையும் அசை அசையாக ஒலிர்கின்ற தன்மையையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். கட்டமரன் என்ற சொல் தமிழில் இருந்தே தோன்றியது என்பதற்கான ஆதாரங்களையும் ஃபூர்னிக்கா குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டில் மக்களின் பெயர் சூட்டும் சம்பிரதாயங்களில் குடும்பப்பெயர்கள் – தந்தை வழிப் பெயர்கள் எவ்விதம் இடத்துக்கிடம் மாற்றம் பெறுகின்றன என்பதற்கும் சில சான்றாதாரங்களை கூறுகின்றார். தமிழக மக்களின் சடங்குகள்– சகுனம் பார்க்கும் இயல்புகள் அனைத்தையும் ஒரு மாணவனாக கூர்ந்து பார்த்து ஆராய்கிறார்.

எந்தக் கட்டத்திலும் அம் மக்களின் வாழ்வை கேலி செய்வதாகவோ அவர்களின் நம்பிக்கைகளை கிண்டல் செய்வதாகவோ இவரது ஆய்வு அமையவில்லை.

தமிழர் வாழ்க்கையின் சிறப்புத்தன்மை குறித்த அறிமுகமானது ஏராளமான அறிவூட்டத்தக்க செய்திகளைத்தருகிறது. மேலைமுந்த பார்வையாகக் காணும் அந் நியர்க்கு இவை புதிர் போலவும் வழக்கமில்லாதன போலவும் தெரிதல் இயல்பானதே என்றுதான் தமது முடிவுகளை தீர்மானிக்கிறார் விதாலி ஃபூர்னிக்கா. பல்வேறு தமிழ் படைப்புகள் சோவியத் மக்களுக்கு அறிமுகமாவதற்கு காரணமாயிருந்த ஃபூர்னிக்கா புரிந்த மகத்தான இலக்கியப் பணிகள் ஏராளம்.

இவற்றுக்கெல்லாம் சிகரமாக மற்றுமொரு சோவியத் அறிஞர் கலாநிதி எல்.வி. புச்சினா அவர்களுடன் இணைந்து மகாகவி பாரதியாரைப் பற்றி ருஷ்ய மொழியில் ஒரு நூலை அவர் எழுதியதாகத் தகவல் கிடைத்தது. இந்த தகவலைத் தொடர்ந்து அவரது மறைவுச் செய்தியும் வந்தது. தமிழ்க்கூறும் நல்லுலகம் அமரர் ஃபூர்னிக்காவை என்றென்றும் மானசீகமாக வாழ்த்திக் கொண்டே இருக்கும்.

ஃபூர்னிக்கா எழுதியிருக்கும் பிறப்பு முதல் இறப்புவரை என்ற தமிழக ஆய்வு நூலில் பதிவுசெய்துள்ள ஸ்ரீவைகுண்டத்தில் அமைந்துள்ள புதிர்கள் நிறைந்த கோட்டைப்பிள்ளைமாரின் சுற்றுச்சுவர் எழுப்பிய கோட்டையை தரிசிப்பதற்காகவும் அங்கு சென்றுள்ளேன். ஃபூர்னீக்காவின் அந்த நூல் கிடைத்தமையால் அந்த கோட்டைப்பிள்ளைமார் பற்றி மேலும் அறியமுடிந்தது.

காஷ்மீரத்தில் அரசவையில் வாழ்ந்த அந்த குடிமக்களின் மூதாதையர்கள், பாண்டிய நாட்டின் அரண்மனையில் சேவையாற்ற அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பாண்டிய மன்னனுக்கும் தென்னவராயனுக்கும் இடையே போர் மூண்டபோது, அந்த மக்களுக்கும் ஆபத்து வந்துள்ளது. ஆனால், எத்தகைய நெருக்கடிகளை சந்திக்கவும் கூட்டுச்சாவினை ஏற்கவும் அவர்கள் தயார் நிலையிலிருந்த போது, புதிய மன்னன் பராக்கிரமன் அவர்களுக்கு அடைக்கலம் தருவதற்கு முன்வந்திருக்கின்றான்.

மதுரையை அடுத்து, ஐந்து ஹெக்டயர் நிலமும் முன்னூறு வீடுகளும் தருவதாக வாக்குறுதி அளித்து, அவர்களை குடியமர்த்திய இடம்தான் அந்த கோட்டைப்பிரதேசம்!


ஸ்ரீவைகுண்டத்தில் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் பற்றி வெளியே வாழ்ந்தவர்களிடம் கதை கேட்டிருக்கிறார் ஃபூர்னிக்கா.

அதில் அதிர்ச்சியான கதையொன்றும் இருக்கிறது. ஸ்ரீவைகுண்டம் கோயிலின் திருவிழாவின்போது அதனைப்பார்ப்பதற்காக ஓர் இளம்பெண் அந்த கோட்டை மதில் சுவரில் ஏறி எட்டிப்பார்த்திருக்கிறாள். அதனால், அவளைத்தண்டித்த அந்த பிற்போக்குச் சமூகம் அவளை தீயிட்டுகொளுத்தியிருக்கிறது! ஏனையவர்களுக்கு இச்சம்பவம் ஒரு பாடமாகப் புகட்டப்பட்டிருக்கிறது.

அந்தக்கோட்டைக்குள்ளிருந்த ஆண்களுக்கு மாத்திரமே வெளியே சென்றுவருவதற்கு அனுமதி இருந்திருக்கிறது. பெண்கள் கோட்டையை தாண்டிச்செல்ல முடியாமல் அடைபட்டு வாழ்ந்திருக்கிறார்கள். அவ்வாறு வாழ்ந்தாலும், ஆண்கள் வெளியே சென்ற பின்னர்தான் பெண்கள் நேருக்கு நேர் சந்தித்துப்பேசிக்கொண்டனர். அவர்களிடையே நடந்திருக்கும் திருமணங்களும் பேரோச்சரியம் தருபவை.

அந்தக்கோட்டைக்குள் வாழும் பெண்ணுக்கு மணமகன் கிடைக்கவில்லையென்றால் அவளது மூத்த சகோதரியின் கணவனுக்கே இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். பெண்கள் கர்ப்பம் தரித்தாலும் வெளியே சென்று மருத்துவம் பார்க்கமுடியாது. அவர்கள் மத்தியிலேயே பெண் மருத்துவச்சி இருப்பாள். வெளியே இருக்கும் ஆண் மருத்துவர்கள் அங்கு வரவே முடியாது?

அந்தக்கோட்டைக்குள் அவ்வாறு புனிதம் போற்றப்பட்டிருந்தாலும் 1973 இல் அங்கு




ஒரு கொலைச்சம்பவம் நடந்திருக்கிறது. அதற்கான காரணங்கள் தெரியவில்லையாம். பொலிஸாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லையாம்! அதனையடுத்து சில குடும்பங்கள் வெளியேறியிருக்கின்றன.

அதில் ஒரு மூதாட்டி வெளியே செல்லும் பஸ்களைக் கண்டுவிட்டு அதிர்ச்சியினால் நினைவிழந்திருக்கிறாள். எப்படி இருக்கிறது கதை?

வாகனங்களையே வாழ்க்கையில் கண்டிராத பெண்கள் அந்தக்கோட்டைக்குள் எப்படி வாழ்ந்திருப்பார்கள்? என்பதை இது வரையில் எவரும் கண்டுபிடித்து எழுதவில்லை. 18 – 19 – 20 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் இப்படியும் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தியை சோவியத் அறிஞர் ஃபூர்னீக்காதான் களஆய்வுசெய்து பதிவுசெய்துள்ளார்.

சுஜாதாவும் கணையாழி இதழின் கடைசிப்பக்கத்தில் ஸ்ரீவைகுண்டம் கோட்டைப்பிள்ளைமார் பற்றி ஒரு குறிப்பு எழுதியுள்ளார். தமிழக படைப்பாளிகள் இந்த கோட்டையை தரிசித்தால், அற்புதமான நாவல் ஒன்று எழுதமுடியும் என்ற சாரப்பட சுஜாதா எழுதியிருந்தார்.

எமது முன்னோர்களின் வாழ்வைச்சித்திரித்து திரைப்படம் எடுக்கும் தமிழ் இயக்குநர்கள், திரைப்பட கதாசிரியர்களின் கண்களுக்கு இதுவரையில் தென்படாத அந்தக் கோட்டையும் அந்த மாந்தரும் சோவியத்தின் உக்ரேயினி லிருந்து சென்றிருக்கும் விதாலி ஃபூர்னீக்காவுக்குத் தெரிந்திருக்கிறது.

ஜெயகாந்தனின் உற்ற நண்பரான ஃபூர்னீக்கா இல்லை என்றால் ருஷ்ய இலக்கிய வாசகர்களுக்கு ஜெயகாந்தனின் படைப்பாளுமை தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை! ஃபூர்னீக்காவின் ஏற்பாட்டில் ஜெயகாந்தன் இரண்டு தடவை மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்டு கொண்டாடப்பட்டுள்ளார்.

அங்கு இலங்கைத்தமிழ் மாணவர்களுக்கும் ஜெயகாந்தனுக்கும் இடையே அரசியல் தொடர்பான உரையாடல் நிகழ்ந்த போது உருவான உரசலையும் சர்ச்சையையும் தீர்த்துவைக்கப் பாடுபட்டவர் ஃபூர்னிக்கா. அங்கு ஜெயகாந்தன் சந்தித்த இலங்கை மாணவர் நாராயணமூர்த்திதான் பின்னாளில் உலகப்பொது மனிதன் ஜெயகாந்தன் என்ற ஆவணப்படத்தை எடுத்தார். இந்தப்படத்தின் விவரண உரையை நிகழ்த்தியிருப்பவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

இவ்வாறு இலக்கியரீதியில் பலரை நெருங்க வைத்து உறவுகளை ஏற்படுத்தியவர் ஃபூர்னீக்கா. பின்னாளில் ஜெயகாந்தனுக்கு தமிழ்நாட்டில் சோவியத் அரசின் சார்பில் விழா நடந்து, விருதும் வழங்கப்பட்டது. ஆனால் அவ்வேளையில் ஃபூர்னிக்கா எங்கள் மத்தியில் இல்லை.

தமிழ் அபிமானி சோவியத் அறிஞர் கலாநிதி விதாலி ஃபூர்னீக்கா பற்றி எழுதுவதற்கு நிறையவுண்டு! எளிதான பணியல்ல! தமிழ் மீதும் தமிழ்மக்கள் மீதும் தமிழ் கலை, இலக்கியங்கள் மீதும் அவர் கொண்டிருந்த பற்றுதல் தமிழர்களுக்கே முன்னுதாரணமானது.

ஃபூர்னீக்கா, எங்கள் இனிய சகோதரனே என்றென்றும் நீங்கள் எம்முடன் இருக்கிறீர்கள்.

காலைக்கதிர் Kalaikkathir



# பயங்கரவாதத்தை தோற்கடித்தோர் உள்ளே பயங்கரவாதிகளோ சுதந்திரமாக வெளியே

## இதுதான் மைத்திரி அரசின் நல்லாட்சி என்கிறார் நாமல்



கொழும்பு, செப். 30

பயங்கரவாதிகளை வெளியிலும் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க உதவியவர்களை உள்ளேயும் வைத்திருக்கிறது மைத்திரி அரசு என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்

நேற்றுச் சனிக்கிழமை காலை 11 மணியவில் சிறையில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனைப் பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

3 வருடங்கள் பிள்ளையானைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் வைத்துள்ளனர். எம்மைப் பொறுத்தவரை பயங்கரவாதியாக இருந்து அரசுடன் இணைந்து பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க உதவியவர் அவர்.

இன்று பயங்கரவாதிகளாக இருந்தவர்களை விடுதலை செய்துள்ளனர். பயங்கரவாதத்தை முறியடிக்க உதவி செய்தவர்களுக்குத் தண்டனை வழங்குகின்றனர்.

உண்மையிலே எமது அரசுக்குப் பல வழிகளிலும் உதவி செய்தவர் என்ற முறையிலும், யுத்த வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் என்ற ரீதியிலும் இன்று பிள்ளையானைப் பார்வையிட வந்துள்ளேன்

நாங்கள் பல தடவை வந்து அவரைப் பார்த்துச்சென்றுள்ளோம். ஊடகங்களுக்கு அது தெரியாது. இந்த அரசுக்கு ஒரு கொள்கை இல்லை. பிள்ளையான் மட்டுமல்ல பல அரசியல்வாதிகளைச் சிறைக்கு அனுப்பி அரசியல் செய்யப் பார்க்கின்றது. என்னையும் 3 தடவைகள் அடைக்க முற்பட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

இந்த அரசை யார் விமர்சனம் செய்தாலும் சிறைச்சாலைக்குச் செல்லும் நிலைதான் அதிகமாக உள்ளது. நீதித் துறைகூட இன்று அடிமட்ட நிலைக்குச் சென்றுள்ளது. அரசு எதைச் செய்ய நினைக்கின்றதோ அதுதான் இங்கு நடக்கிறது.

இலங்கையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒருவரை நாம் ஜனாதிபதியாக நியமிப்போம். எனக்கு அதற்கான வயது இல்லை. 100 நாட்களில் ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்று கூறிய இந்த அரசு அடுத்த ஜனாதிபதி யார் என்ற போட்டியில் தற்போது உள்ளது. –என்றார். (ஐ)

## இலங்கையில் மீண்டும் தலைதூக்கும் மலேரியா

### இந்த ஆண்டு 35 பேர் பாதிப்பு

கொழும்பு, செப். 30

இலங்கையில் கடந்த எட்டு, ஒன்பது மாதங்களில் 35 பேர் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வந்த 11 இலங்கைப் பிரஜைகளும், 24 வெளிநாட்டுப் பிரஜைகளும் இதில் உள்ளடங்குகின்றனர் என மலேரிய ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தென் சூடான், மடகஸ்கார், எத்தியோப்பியா மற்றும் உகண்டா பிரஜைகள் அடங்குவதுடன் இந்தியாவைச் சேர்ந்த 15 பேர் பாதிக்கப்பட்டவர்களில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர், கடந்த 6 வருடங்களாக நாட்டில் எவரும் மலேரியாக் காய்ச்சலுக்கு இலக்காகவில்லை எனவும் மலேரியா ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருபவர்களும் வைத்தியர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் மலேரியா ஒழிப்புப் பிரிவு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)

## அரசியல் கைதிகள் விவகாரம் வெகுவிரைவில் தீர்க்கப்படும்

### கூறுகிறார் விஜயகலா எம்.பி.



யாழ்ப்பாணம், செப். 30

காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல விடயங்களுக்கு நல்லாட்சி அரசு விரைவில் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் இனவாத அரசியல்தலைவர்களுக்கு வாக்களித்தமையால் தான் எமது மக்கள் துன்பத்தை அனுபவித்து வந்தார்கள்.

ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்தமையால் தான் மக்கள் சந்தோசமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

கடந்த மூன்று வருட காலங்களில் நல்லாட்சி அரசால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 2020 வரை இந்த அரசால் மேலும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் காலங்களில் பல தேர்தல்களுக்கு முகம் கொடுக்கவுள்ளோம். உங்களது பிள்ளைகள் சந்தோசமாக வாழ வேண்டுமாக இருந்தால் இந்த அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும்.

யுத்தத்தில் இழந்த உயிர்களை விட ஏனைய தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையாகவுள்ள இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற பல விடயங்களுக்கு இந்த நல்லாட்சி அரசு உரிய தீர்வை வழங்கவுள்ளது.– என்றார். (ஐ)

## கரையோரப் பகுதிகளில் பலமான காற்று வீசலாம்

கொழும்பு, செப். 30

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வரையான காலப்பகுதியில் பாணந்துறையிலிருந்து காலி மற்றும் மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.0 – 2.5 மீற்றர் உயரம் வரை (இது கரைக்கு வரும் அலைகளின் உயரம் அல்ல) மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் அந்தக் கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படுவதற்கான வாய்ப்பு உயர்வாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 – 30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## பெண் ஊடகவியலாளருக்கு யாழ்ப்பாணத்தில் மிரட்டல்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணத்தில் பெண் ஊடகவியலாளர் மீது மோட்டார் சைக்கிளால் மோதி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், புங்கன்குளம் பகுதியைச் சேர்ந்த சுமித்தி தங்கராசா (வயது –33) என்ற சுயாதீன ஊடகவியலாளருக்கே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

“நாயன்மார்கட்டுப் பிள்ளையார் கோவில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் வழிபாட்டுக்குச் செல்வேன். வெள்ளிக்கிழமையும் வழமைபோன்று அங்கு வழிபாடு முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும்போது, இனந்தெரியாத நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டுத் தப்பிச் சென்றார்.

அவர் என்னை மோத வருகிறார் என்று எண்ணி வீதியைவிட்டு விலகிச் சென்றேன். எனினும் என்னை இலக்கு வைத்து வந்து மோதிவிட்டு, அச்சுறுத்தும் வகையில் பேசிவிட்டு அவர் தப்பித்தார். நிலை தடுமாறி விபத்துக்குள்ளான நான் காயங்களுக்குள்ளானேன். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்தேன்” – என்று சுயாதீன ஊடகவியலாளர் செல்வி சுமித்தி தங்கராசா தெரிவித்தார். (ஐ)

## அமைச்சர்களுக்கு வாகனம் இறக்குமதி செய்யத் தடை

கொழும்பு, செப். 30

எதிர்வரும் ஒன்றரை ஆண்டு காலத்துக்கு அமைச்சர்களுக்கோ அல்லது அமைச்சுக்கோ புதிய வாகனங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதற்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடகத் துறை அமைச் சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மாத்தறை ராகுல வித்தியால யத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச துறை உத்தியோகத்தர்கள் 06 மாதங்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை இன்று (நேற்று) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும்.

அத்துடன், இந்த நாட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக எதிர்வரும் நாட்களில் மேலும் முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கவேண்டி ஏற்படும். – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.